அறைவு 03 இயம் 26 January 17 - 23, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00



aat @ VBC

HELLO MOBILE WORLD

122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050


# ஆசிரியர்களின் சம்பளம்?



கிழக்கு மாகாண சபையில் தற்போதுவரை 2015ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளதால் எதிர்வரும் 20ம் திகதி வழங்கப்படவேண்டிய ஆசிரியர்களின் சம்பளம் வழங்கப்படுமா? என்பது கேள்விக் குறியாகியுள்ளது.

கிழக்கு மாகாண சபை தனது 2015ம் ஆண்டுக்கான பாதீட்டை நிறைவேற்றிக்கொள்ளக் கூடிய போதெல்லாம் கோரம் போதாமையினாலும், மாகாண சபை அங்கத்தவர்களின் வேண்டுகோள்களாலும் ஒத்திவைக்கப்பட்டதால் இந் நிலை உருவாகியுள்ளது.

சனாதிபதித் தோதலை அடுத்து உருவாகியுள்ள புதிய அரசியல் சூழலில் கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைப்பது தொடர்பாக 17

## முதல்வர் பதவி இழுபறியில் ?

கிழக்கு மாகாண சபையில் ஆட்சியை ஏற்படுத்தும் நோக்கில் நடைபெற்றுவரும் பேச்சுக்களில் முதலமைச்சர் பதவி தொடர்பான இழுபறிநிலை தொடர்வதாகவே தெரிகின்றது.

சனாதிபதித் தோதல் அறிவிக்கப்பட்ட பின்னர் தமிழத் தேசியக் கூட்டமைப்பு , முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன புதிய சனாதிபதிக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தியதால் கிழக்கு மாகாண ஆட்சிக் கட்டில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தூக்கியெறியப்பட்டது.

அதையடுத்து கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டுள்ள கட்சிக் 17

## “ஆட்சி அமைப்பது தொடர்பாகப் பேசிவருகின்றேன்”

கிழக்கு மாகாண சபையில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான ஆரம்பக்கட்டப் பேச்சுக்களில் தான் ஈடுபட்டுவருவதாக கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவரான திரு. தண்டாயுதபாணி ஊடகமொன்றுக்கு செவ்வியுள்ளார்.

இப் பேச்சுக்களை அவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் உடனும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் உடனும் நிகழ்த்துவதாகத் தெரிவித்துள்ள அவர் 16ம் திகதிக்குள் இறுதி முடிவு எட்டப்பட்டு விடும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதனை உறுதிப்படுத்தும் முகமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் சபீக் ரஜாப்தீன் "ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்க 17

## தேசிய நிறைவேற்றுச் சபை அங்கத்தவராகச் சம்பந்தன்



100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய நிறைவேற்று சபை என்ற உயர் சபையை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இச்சபையின் முதல் கூட்டம் 15ம்திகதி 17

## பயணக் கட்டுப்பாடு நீக்கம்

இலங்கையின் வடக்குக்கு செல்லும் வெளிநாட்டவர்களுக்காக விதிக்கப் பட்டிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை வைத்திருப்போர் வடக்கு செல்வதற்கு முன்னைய அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

இந்தநிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இன்று இடம்பெற்ற முதலாவது பாதுகாப்பு சபை கூட்டத்தின்போது இந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டது.

இலங்கையில் அமைதியான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் 17




aat
SRI LANKA
இன்று புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
VEAL BUSINESS COLLEGE
No.159A, Sea View Road, Trincomalee
026 222 76 22 / 0777 555 738

Sugirtha Stationers

காகிதாதிகள் மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள்
378/380 Court Road, Trincomalee
026 2225699 - 0775151336
அரச அங்கீகாரம் பெற்ற வினியோகத்தர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## பிராந்தியத் தலைமைகளின் பலவீனம்...

**தேசிய** அரசியலை நோக்கிய தமிழர்களின் முன்நகர்வானது ஒருங்கு படுத்தப்பட்டு முன்நகர்த்தப்படும் வாய்ப்பானது கடந்து சென்ற சனாதிபதித் தேர்தலின் ஊடகத் தமிழர்களுக்குக் கிட்டியுள்ளது.

தமிழர்களின் அரசியல் தலைவர்கள் மும்முனைப்பட்டிருந்ததுடன் அவர்களின் பின்னாள் மக்களிற் சிலரும் அணி வகுத்திருந்தனர். அதுவே சனநாயகத்தின் அடிப்படைப் பண்பை பிரதிபலித்தும் இருந்தது.

அம்மும் முனையானது வடக்குகிழக்கு முழுவதற்குமான அணியான தமிழத் தேசியக் கூட்டமைப்பையும். வடக்கிற்கு மட்டுமான ஈ.பி.டி.பி யையும். கிழக்கிற்கு மட்டுமான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளையும் கொண்டிருந்தது.

இம்மும்முனைக் களத்தில் சனாதிபதித் தேர்தல் உட்புகுந்த போது இரு முனைகள் மகூிந்தவையும் ஒரு முனை மைத்திரியையும் ஆதரித்திருந்தது.

அப்போதுள்ள தமிழரின் சூழலும் சாதகமாய் அமைய வடக்குகிழக்கில் பெரும்பாலான தமிழர்களின் வாக்குகள் மைத்திரிக்கு விழுந்தது.

மைத்திரியின் வெற்றியானது மற்றைய சனாதிபதி வேட்பாளரை ஆதரித்த ஏனைய இரு தமிழ் முனையங்களையும் தோல்வியில் வீழ்த்தியது.

அதாவது வடமாகாண சபைத் தேர்தலின் பின்னர். தமிழர்கள் தமது தலைவர்களாக இம்மும்முனையில் ஒரு முனையை மட்டும் தெளிவாகத் தேர்ந்தெடுத்த தேர்தலாக. இத்தேர்தலைப் பதிந்துள்ளனர்.

ஆனால் மீண்டும் மீண்டும் தமிழர்கள் தமது தலைமையை யாருடைய கைகளில் ஒப்படைக்கின்றனரோ அவர்களின் பிராந்தியத் தலைமைகளான மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேசச சபை அங்கத்தவர்கள் மக்களின் ஆதரவில் சிறுகச் சிறுக சறுகிச் செல்வது அதிகரித்து வருவதை அனைவரும் சிந்திக்க வேண்டியதொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழர்களின் சிந்தனையானது ஒருமுகப்படுவதென்பது மிகக் கடினமானதொரு நிலையில். இயற்கையின் வரத்தால் தற்போது ஒரு முனைப்பட்டுள்ள அவர்களின் சிந்தனைகளை சரியானதொரு அரசியல் பாதையில் செலுத்துவதற்குத் தேவையான பலத்தைப் பெற்றுக்கொள்ள மக்கள் சார்ந்த அரசியற் செயற்பாடுகளை பிராந்திய மற்றும் பிரதேசத் தலைமைகள் முன்னெடுக்க வேண்டும்.

உதாரணமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் அமைச்சுப் பதவிகளை கையேற்கவில்லை என்பதற்கான அடிப்படைகளை மக்கள் தெரிந்துகொள்ளும் வழிவகைகளை பிரதேசத் தலைமைகள் ஊடாக மக்களுக்கு அறிவுறுத்த வேண்டியது கட்டாயம்.

இதற்கான சரியான ஊடகங்கள் எவையென்பதை தலைமைகள் அந்ததந்தப் பிரதேசத்துக்குப் பொருத்தமானவற்றை அடையாளம் கண்டு அவற்றின் ஊடாக முன்னெடுக்க வேண்டும்.

தமிழர் அரசியல் என்பது பேசப்படும் பொருளாக மாற்றமடைய உள்ளகத் தலைமைகள் இயங்க வேண்டும். ஏனெனில் கடந்த பல வருடங்களாக தமிழரின் அரசியல் என்பது சாதாரண பொது மகனுக்கும் அப்பாற்பட்டதொன்றாக இருந்து வந்தது.

வாழ்வைத் தக்கவைக்க வேண்டுமாயின் அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்க வேண்டிய நிலை அக்காலத்தில் உணரப்பட்டதால் பேசப்படாப் பொருளான தமிழரின் அரசியலானது. ஆயுதப் போரின் முடிவின் பின் அடுக்களைக்குள்ளும் பேசப்படும் பொருளாக மாற்றமடைய வேண்டிய தேவையினை காலம் மீண்டும் உருவாகியுள்ளது.

இவ்வாறானதொரு உருவாக்கத்தின் போது புதிய தலைமுறைக்குச் சரியானதொரு அரசியல் பார்வையை உருவாக்க வேண்டிய தலையாய கடமை உள்ளூர் அரசியல் தலைவர்களின் முன் விரிந்துள்ளது. அதனை அவர்கள் செவ்வனே நிறைவேற்ற வேண்டும். அ∴தில்லாவிடில் உள்ளகத் தலைமைகளின் பலவீனம் எதிர்வரும் தோதல்களில் வெளிப்படையாகவே தெரியவரும்.

-மாயன்-

## நகரப் பகுதியில் டெங்கு அபாயம்





திருகோணமலை நகர்ப் பகுதியில் டெங்கு நோய் அபாயம் தோன்றியுள்ளதாகச் சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

நகரப்பகுதிகளின் கஸ்தூரி நகர் மற்றும் வித்தியாலயம் வீதி ஆகிய பிரதேசங்களில் அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நுளம்புப் பெருக்கத்தை அடுத்து அவ்விடங்கள் சுகாதார அதிகாரிகளின் கண்காணிப்புக்கு உட்படுத்தப் பட்டதுடன் நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் புகையும் விசிறப்பட்டுள்ளது.

## சம்பூர் மக்கள் வீடு திரும்பும் காலம் விரைவில் வரும்

-அச்சுதன்-

வாழ்விடங்களை இழந்து பல துன்பங்களுடன் வாழும் சம்பூர் மாணவர்களின் அறநெறிக்ளை வளர்ப்பதற்காக அறநெறிகளை கற்பிக்கும் ஆசிரியர்கள் மிகவும் ஊக்கத்துடன் செயற்பட்டு வருவதை காணமுடிகின்றது என மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் தலைவர் சிவஸ்ரீ இ. பாஸ்கரன் குருக்கள் தெரிவித்தார்.

கிளிவெட்டி பட்டித்திடல் நலன்புரி முகாம்களில் வாழும் சம்பூர் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாண இந்து மாமன்ற தலைவர் அவர்களின் அனுசரனையுடன் மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இந் நிகழ்விற்கு தலைமை தாங்கி நடத்தியபோது பாஸ்கரன் குருக்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில்

தமிழ் மக்களாகிய நாம் எமது வாக்கு பலத்தால் அரசாங்கத்தை மாற்றியுள்ளோம். இது தான் இறைநீதி இறைநீதி ஆரம்பமாகியுள்ளது. இறைவன் ஆன்மிகத்தின் மூலம் உங்களுக்கு உறுதி தருவார். சம்பூர் மண்ணில் நீங்கள் மீள் குடியேறும் நாள் மிக விரைவில் ஏற்படும். அதற்கு புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் என்றார் பாஸ்கரன் குருக்கள்.

## கள்ளவலையைக் கோரி ஆர்ப்பாட்டம்

உயர்ந்தபாடு கடற்கரைப் (சமுத்திரகம) பகுதியில் சட்ட விரோத வலைகளை பயன்படுத்தி மீன்பிடி நடைபெறுவதாகத் கிடைத்த தகவலை அடுத்து அப்பிரதேசத்திற்கு விரைந்த காவல்துறையினர் அவ்வாறு மீன்பிடியில் ஈடுபட்ட படகொன்றைக் கண்டு கொண்டனர்.

இச்சம்பவம் கடந்த 15ம் திகதி நடைபெற்றுள்ளது. இதனையடுத்து குறித்த படகு மற்றும் சட்டவிரோத மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

இதனை் தொடர்ச்சியாக கடும் முறுகலொன்று மணிக்கூண்டுக் கோபுர முன்றலில் அன்றைய தினமே நிகழந்துள்ளது.

முறுகலில் ஈடுபட்ட தரப்பினர் படகை மீளக் கோரியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(மூலம்-படங்கள் கதிரவன்)



## பாலத்திருத்த வேலைகள் ஆராய்வு

கிண்ணியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில், ஜனாதிபதி மைதிரிபால சிறிசேன வழங்கிய வாக்குறுதிகளின் படி, குட்டிகராச்சி, குறிஞ்சங்கேணி பாலங்களின் நிர்மானப்பணிகளின் ஆரம்ப கட்ட வேலைகள் தொடர்பில், திருகோணமலை மாவட்ட ஐ.தே.க. தவிசாளரும் முதூர் தொகுதி அமைப்பாளருமான எம்.ஏ.எம்.மஹ்ரூப் செவ்வாய்க்கிழமை(13) நேரில் சென்று பார்வையிட்டார்.

திருகோணமலை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர்களினால் பாலங்கள் அமைப்பது தொடர்பாக தவிசாளருடன் இதன் போது கலந்துரையாடப்பட்டது. அத்துடன், தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் ஆலங்கேணி-நெடுந்தீவு வீதியை மேலும் விஸ்தரிப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

## மகரஜோதிப் பெருவிழா

தொடுவாய் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து செல்வநாயகபுரம் ஹரிஹரசுதன் ஐயப்ப ஆலயத்திற்கு மகர ஜோதியை ஒட்டி நடத்தப்பட்ட இருமுடி ஊர்வலம். (கதிரவன்)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறி மாறி வந்த அரசாங்கங்கள் எங்களை பகடைக் காய்களாக்கின


## மட்டக்களப்புச் செய்திகள்

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமையால், மாறிமாறி வந்த அரசாங்கங்கள் ஏமாற்றி எங்களை பகடைக்காய்களாக நினைத்ததே தவிர, இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் அவர்கள் எடுக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடி விவேகானந்தா மகளிர் வித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட அதிபர் கட்டடத்தை வெள்ளிக்கிழமை (16.01.2015) திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "நாங்கள் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தோம். அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களை விட, கூடுதலான சேவைகளை நாம் செய்துள்ளோம் என்பதையிட்டு பெருமிதம் அடைகிறோம். எதிர்க்கட்சி வரிசையில் நாம் இருந்தாலும், பொதுமக்களின் தேவைகளை கணிசமானளவு செய்துள்ளோம். எமது தமிழ் இனத்துக்கு தேவையான பல முக்கிய காரியங்களை எதிர்க்கட்சி வரிசையிலிருந்து செய்துள்ளோம். தமிழ் இனம் வேண்டிநிற்கின்றவை எவையெவை என்று அறிந்துள்ளவர்கள் நாங்களே என்ற காரணத்தால், எமது வேலைகள் தமிழர் உரிமைகள் சார்ந்ததாக இருந்தாலும் கூட, இவ்வாறான சேவைகளை மேற்கொள்கின்றோம்.

அரசியலில் கொடி கட்டிப்பறந்த எமது இனம், கடந்தகால வரலாற்றில் தேய்ந்துபோனது யாவரும் அறிந்ததே. இதற்கு காரணம் புரையோடிப்போன இனப்பிரச்சினை என்பதை அனைவரும் அறிவார்கள். இந்த இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமையால், மாறிமாறி வந்த அரசாங்கங்கள், ஏமாற்றி எங்களை பகடைக்காய்களாக நினைத்தார்களே தவிர, இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை. இதனால், ஆயுதப்போராட்டம் ஆரம்பித்து கடந்த 30 வருடகால வரலாற்றில் எமது மக்கள் மிகவும் இன்னல்களை அனுபவித்தனர். இன்று ஓரளவு நியாயமான, சுமுகமான சூழலில் நாம் இருந்தாலும், கடந்தகாலத்திலிருந்து இற்றைக்கு இரு வாரங்களுக்கு முன்னர்வரையும் 2009ஆம் ஆண்டு போர் மௌனித்ததன் பின்னரும் நாம் வேறொரு பயங்கரவாதத்தால் ஆட்கொள்ளப்பட்டோம். அது அரசாங்க பயங்கரவாதம். இந்த அரசாங்க பயங்கரவாதத்தால் தாக்கப்பட்ட நாம், 2015.01.09ஆம் அன்றிலிருந்து ஓரளவு மீட்சி பெற்றுள்ளோம். இந்த மீட்சிக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாரிய ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. தமிழர்களின் புரையோடிப்போன பிரச்சினைகளை புதிய ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளோம். அத்தனைக்கும் அவர் பச்சைக்கொடி காட்டியுள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பச்சைக்கொடி காட்டியுள்ளார். இது எவ்வாறு செல்லப்போகின்றது என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்கவேண்டும். இதற்காக எமக்கு தந்த அமைச்சுப்பதவியை கூட நாம் ஏற்கவில்லை. எமது இலக்கு அமைச்சுப்பதவியை ஏற்பதல்ல. அரசாங்கத்துடன் ஒத்துழைப்போம். எமது இலக்கு வேறொன்றை நோக்கியது. தமிழர்களின் புரையோடிப்போன பிரச்சினை தீர்க்கப்படவேண்டியதாக உள்ளது. அன்றைய அரசாங்கத்தால் எமது தமிழ் பகுதிகள் இராணுவமயமாக்கப்பட்டன. எமது காணிகள் சுவீகரிக்கப்பட்டன. வடக்கு, கிழக்கில் மட்டும் 6,000 ஏக்கருக்கும் அதிகமாக சொந்தக்காணிகள் பறிக்கப்பட்டன, கிழக்கில் காணிகள் இருக்கும் இடங்களில் சிங்களக் குடியேற்றங்கள். இதனை யார் தட்டிக்கேட்டார்கள். தட்டிக்கேட்க யாரும் வரவில்லை. தப்புகள் நடக்கும்போது தட்டிக்கேட்க வேண்டியவர்கள் பேசாமல் இருந்தார்கள். ஆனால், அந்தப் பிரச்சினையை தட்டிக்கேட்டு நாடாளுமன்றத்திலும் குரல் கொடுத்து நீதிமன்றம்வரை சென்றது மட்டுமல்லாது, சர்வதேசம் வரை கொண்டுசென்றவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே தவிர, வேறு எந்தக்கட்சியும் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் நல்வாழ்வுக்காக சோதனை, வேதனைகளை தாங்குகின்ற கட்சியாக இருக்கின்றது.



எமது இலக்குகள் தீரும் வரை நாம் அமைச்சுப்பதவிகளை எடுப்பதற்கு தயாராக இல்லை. அமைச்சுப் பதவிகளை நாம் எடுத்தால், எமது சமூகத்துக்கு ஏதேனும் செய்யலாமென்று சிலர் தெரிவிக்கின்றார்கள். ஆனால், அமைச்சுப் பதவிகளை நாங்கள் பெற்றுக்கொண்டால், எமது வாய்கள் அடைக்கப்படும்"

## பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நஷ்டஈடு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை கமநலசேவைப் பிரிவில் 2013 மற்றும் 2014ஆம் ஆண்டு பெரும்போகத்தின்போது, வரட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்ட 98 விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 2,800 ரூபாய் படி நஷ்டஈட்டுக் காசோலைகளை வெள்ளிக்கிழமை (16.01.2015) வழங்கப்பட்டது.



## கொள்ளையிட்ட பொருட்கள் மீட்பு



மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 39ஆம் கொலனி திக்கோடை கிராமத்திலுள்ள வீடொன்றை 29.12.2014 அன்று உடைத்து கொள்ளையிட்ட 75,000 ரூபாய் பெறுமதியான பொருட்களை புதன்கிழமை (14.01.2015) மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தொலைக்காட்சி, மின்விசிறி, நீர்ப்பம்பி உள்ளிட்ட பொருட்களையே மீட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். இது இவ்வாறிருக்க, சந்தேகத்தின் பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டு மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## 13 கைதிகள் விடுவிப்பு

பரிசுத்த பாப்பரசரின் விஜயத்தையொட்டி, பொதுமன்னிப்பின் கீழ் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து 13 கைதிகள் புதன்கிழமை (14.01.2015) காலை விடுதலை செய்யப்பட்டனர். சிறு குற்றங்களுக்காக தண்டனை அனுபவித்துவந்த 13 கைதிகளே விடுதலை செய்யப்பட்டதாக மட்டக் களப்பு சிறைச்சாலையின் பிரதம அத்தியட்சகர் ஏ.பிரியங்கர தெரிவித்தார். இதன்போது, அருட்தந்தை ஏ.ஜெரிஸ்டன் உபதேசம் செய்தார்.




## வீடு தீக்கிரைக்குள்ளானது

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட மாமாங்கம் பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது. செவ்வாய்க்கிழமை (13.01.2015) அன்று மாலை 5.00மணியளவில் மாமாங்கம் முதலாம் குறுக்கு வீதியில் உள்ள எஸ்.விஸ்வநாதன் என்பவரின் வீட்டிலேயே இந்த தீவிபத்து இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். மின்னொழுக்கு காரணமாகவே இச்சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பாரம்பரிய நிகழ்ச்சிகள்

தைத்திருநாளை சிறப்பித்து கடுக்காமுனை விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் 15.01.2015 வியாழக்கிழமை மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

விளையாட்டுக் கழக தலைவர் கந்தப்போடி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கடுக்காமுனை வாணி வித்தியாலய அதிபர், ஆசிரியர், கிராம சேவை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



## குடிநீர் வேலைத்திட்டம்

போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகள் கடந்தகாலத்தில் குடிநீர் பற்றாக்குறையை எதிர்நோக்கிய நிலையில், இந்தப் பகுதிகளுக்கு குழாய்நீர் விநியோகத்தை மேற்கொள்ளும் வகையில் இணைப்புகளை கொண்டு செல்லும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்டத்திலிருந்து போரதீவுப்பற்றுக்கு குடிநீர் விநியோகத்திட்டம் கொண்டுவரப்பட்ட நிலையில், பிரதேசங்களுக்கான இணைப்புகளை கொண்டுசெல்லும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. வெல்லாவெளியிலிருந்து மாலையர்கட்டு பிரதேசத்துக்கு குழாய்களை பொருத்தும் பணி முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

## உலர் உணவுப் பொருள் வழங்கி வைப்பு

தைப்பொங்கலை முன்னிட்டு மட்டக்களப்பு, வாகரைப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மதுரங்குளம், குஞ்சன்குளம் ஆகிய கிராம மக்களுக்கு, மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை, வியாழக்கிழமை (15.01.2015) உணவுப் பொருட்கள் வழங்கி வைத்தது.



மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் நேரடியாக இவற்றை வழங்கி வைத்தார். சுவிடன், ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம் மற்றும் அவுஸ்ரேலியா மனிதநேய அன்பர்களின் நிதி உதவியுடனேயே இந்த உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

## சுயதொழில் ஊக்குவிப்பு

மட்டக்களப்பு, கல்லாறு மத்திய விளையாட்டுக் கழகத்தினால், வலது குறைந்த ஒருவரின் சுயதொழிலை ஊக்குவிக்கும் வகையில், அரிசி அரைக்கும் ஆலை அமைப்பதற்கான நிதி வழங்கி வைக்கப்பட்டதுடன் அதற்கான அடிக்கல்லும் புதன்கிழமை (14.01.2015) நாட்டப்பட்டது.



கல்லாறு பிரதேசத்தில் வசித்து வரும் எழில்வேந்தன் என்பவருக்கே, மூன்று இலட்சம் 'ரூபாய் நிதியில் இக்கட்டடம் அமைத்து கொடுக்கப் படவுள்ளது. இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ப.நடராசா கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தர்.

## பாதணிகள் பரிசளிப்பு

காத்தான்குடி குபா இளைஞர் கழகத்தின் சமூக எழுச்சி திட்டத்தின் கீழ், பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகள் மற்றும் பைகள் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (12.01.2015) மாலை காத்தான்குடி அல் ஹிறா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

குபா இளைஞர் கழகத்தின் தலைவர் எம்.எல்.எம்.சபீர் தலைமையில் நடைபெற்றுள்ளது இந்நிகழ்வு. இதில் பல மாணவர்களுக்கு அர்கள் பாடசாலை செல்லத் தேயையான பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# தேசிய செய்திகள்

## விலைபோனாரா பஷில்?



அமெரிக்க பிரசைகளான பசில் ராஜபக்ச மற்றும் டளஸ் அழகபெரும ஆகியோர் அமெரிக்காவின் தேவைக்கு அமைய ராஜபக்ச அரசாங்கத்தை கவிழ்க்க இரகசியமான சதித் திட்டத்தை அரங்கேற்றியுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இவ்வாறு சர்வதேசத் தமிழ் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அச் செய்தியில் பசில் ராஜபகச' அமெரிக்காவுக்கு தப்பிச் சென்றதுடன் சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை ராஜினாமா செய்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்சரும் சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தருமான ஒருவர், மேற்படி இரு முன்னாள் அமைச்சர்களும் அமெரிக்காவின் ஒப்பந்தம் ஒன்றை இரகசியமான முறையில் நிறைவேற்றியுள்ளனர் என

## அமலன் கொலை வழக்கு மேல்நீதிமன்றில்



சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவன் ஜெயரட்ணம் அமலன் கொலை வழக்கு விசாரணை சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் படி மேலதிக விசாரணைக்காக 14ம் திகதி யாழ். மேல்நீதிமன்றுக்கு மாற்றப் பட்டுள்ளது.

பொன் அணிகளின் போர் கிரிக்கெட் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவன் ஜெயரட்ணம் அமலன் அடித்து கொலை செய்யப்பட்டிருந்தார்.

இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் இவர் துடுப்பாட்ட மட்டையினால் அடித்து கொல்லப்பட்டார். இந்த கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு கடந்த 8 மாதங்களாக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையிலேயே சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் படி மேலதிக விசாரணைக்காக யாழ். மேல்நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது. கொலை தொடர்பில் கைதான சந்தேக நபர்கள் 11 பேருக்கும் எதிரான பூர்வாங்க சாட்சி விசாரணைகள் முடிவுற்றிருந்த நிலையில், கடந்த வழக்கு தவணைகளில், சாட்சிகள் மீதான சுருக்க முறை விசாரணை மன்றில் இடம் பெற்று வருகிறது.







இலங்கையின் அரச தலைவர்களுடன் பாப்பரசர்



மடு அன்னையின் திருச்சொருப மரச் சிற்பத்துடன் பாப்பரசர்

## எதிர்க்கட்சித் தலைவர் நிமல்



எதிர்க்கட்சி தலைவராக நிமல் சிறிபாலடி சில்வாவும் எதிர்க்கட்சி பிரதம கொறடாவாக டப்ளியு டி ஜே செனவிரத்னவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழுவினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## 170 மில்லியன் கடன் சஜின் மறுப்பு



தனக்குச் சொந்தமான எரிபொருள் நிலையத்திற்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக் கொண்டமைக்காக இன்று வரை 170 மில்லியன் ரூபாய்களை சஜின் வாஸ் குணவர்த்தன இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டும் எனச் செய்திகள் வெளியாகின.

கடந்த அரசாங்கத்தில் அதிரம் மிக்கவராகக் காணப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன வெளிவிவகார அமைச்சைக் கண்காணிக்கும் பொறுப்பு உடையவராக அப்போதைய சனாதிபதியால் நியமிக்கப் பட்டிருந்தார்.

அண்மையில் பிரித்தானியாவிற்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி நொனிஸ் அவர்களைத் தாக்கியதான சர்சையில் இவர் சிக்கியிருந்ததும் குறிப்பிடத் தக்கது. புதிய அரசு பதவியேற்றவுடன் இவர் புதிய அரசுடன் இணைக்கப்படக் கூடாது என மக்கள் போராட்டம் ஒன்று அண்மையில் முன்னெடுக்கப் பட்டிருந்தது.

எனினும் அவர் இவ்வாறு தான் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் திற்கு கடனெதையும் செலுத்தத் தேவையில்லை எனத் தெரிவித்ததுடன் செய்தி பொய்யானது என தெரிவித்துள்ளார்.

## நண்பரக் கொலை செய்தது யோகஷித்த ராசபக்சவே!

இலங்கை றக்பி விளையாட்டு வீரரான மொஹமட் வஷிம் தாஜுதீன் என்பவரை யோசித்த ராஜபக்ச கொலை செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

யோசித்த கடற்படையை சேர்ந்த மேலும் இரண்டு படையினருடன் இணைந்து இந்த கொலையைச் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு 5 பார்க் வீதியில் தாஜுதீனை கொலை செய்து அவரது காருக்குள் சடலத்தை போட்டு எரியூட்டியுள்ளதாக கூறப்படுகிறது.

யோஷித்தவின் முன்னாள் காதலியான யசாரா அபேநாயக்க என்ற யுவதி இந்த பரப்பரப்பான தகவலை வெளியிட்டுள்ளதாக த இண்டிபெண்டன் இணையத்தளம் தெரிவிக்கின்றது.

தாஜுதீன் தன்னை காதலிப்பதாக சந்தேகம் கொண்டதால் யோசித்த ராஜபக்ச, அவரை கொலை செய்துள்ளதாகவும் மொஹமட் வாஷிம் தாஜுதீன், யசாராவின் பால்ய நண்பர் எனவும் அப்போது அவர் ஹெவ்லோக் விளையாட்டுச் சங்கத்தின் றக்பி அணியில் விளையாடியதுடன் இலங்கை றக்பி அணியில் உப தலைவராகவும் இருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### முன்னாள் காதலி யசாரா



குறித்த விளையாட்டு வீரரை கொலை செய்து காரில் போட்டு எரித்த சம்பவம் தொடர்பான காவல்துறை விசாரணையை மூடி மறைக்குமாறு சிரேட்ட பிரதிப் காவல்மா அதிபர் அனுர சேனாநாயக்க வுக்கு கூறியுள்ள துடன் சகல தகவல்களையும் அழிக்குமாறும் யோஷித்த ராஜபக்ச, உத்தரவிட்டிருந்தார் எனவும் நண்பர் கொலை செய்யப்பட்டதை தொடர்ந்து யோஷித்தவுடனான காதல் தொடர்புகளை துண்டித்து கொண்ட யசாரா பின்னர், ராஜபக்ச குடும்பத்தினரின் தலையீட்டுடன் குடும்பத்துடன் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மஹிந்தவின் கொள்கலன்களுக்கு சீல்

ஜனாதிபதி தேர்தலின் போது பகிர்ந்தளிப் பதற்காகக் கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படும் மூன்று பாரிய கொள்கலன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றுள் தேநீர்க் கோப்பைகள், பீங்கான்கள், கணினிகள், முன்னாள் ஜனாதிபதியின் புகைப்படம் பொறிக்கப்பட்ட பீங்கான்கள், சிவப்பு நிற சால்வையுடன் கூடிய டி-சேர்ட்கள் ஆகிய காணப்பட்டுள்ளன.

அம் மூன்று கொள்கலன்களையும் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்திலிருந்து மீட்ட காவல்துறையினரே அவற்றுக்குச் சீல் வைத்துள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் 27ஆம் திகதி, தங்கொட்டுவையில் அமைந்துள்ள போசிலன் நிறுவத்திடமிருந்து இந்த மூன்று கொள்கலன்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ள போதிலும், அதற்கான உரிமையாளர்கள் என்று இதுவரையில் எவரும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் முடிவில் மேலும் பல தகவல்கள் வெளிவரலாம் எனத் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## இலங்கைக்குள் வருமா இந்தியாவின் தேசிய புலனாய்வுப் பிரிவு ?

தென்இந்தியாவில் உள்ள இஸ்ரேலிய மற்றும் அமெரிக்கத் தூதுவராலயங்களைத் தகர்க்க மேற்கொள்ளப்பட்ட சதி தொடர்பான விசாரணைகளை இலங்கையில் முன்னெடுக்க தனது தேசிய புலனாய்வுப் பிரிவை இந்தியா இலங்கைக்குள் அனுப்புவது தொடர்பாக முடிவுகளை எடுக்க இந்தியா காத்துக் கிடக்கின்றது.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவராலயம் இதற்கான அனுமதியை இலங்கை அரசிடம் கோராமல் கடந்த 3 மாத காலமாக இழுத்துவருகின்றது.

2010ம் ஆண்டில் இருநாடுகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட எம்லாட் ஒப்பந்தம் மூலம் ஒரு நாட்டுக்குள் மற்றொரு நாடு தேவையேற்படும் போது விசாரணைகளுக்கௌன தனது அணியை அனுப்ப முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலுள்ள பாகிஸ்தானியத் தூதரகத்தின் விசா வழங்கும் அதிகரியான சுபிர் சித்தீக் இத்தாக்குதல் திட்டத்தின் பின்புலமாகச் செயற்பட்டார் என இந்தியா கடந்த காலங்களில் குற்றஞ்சாட்டியிருந்தது.


இக்குற்றச்சாட்டிற்கான தகவல்களை மலேசிய அரசு இந்தியாவிற்குக் கசிய விட்டிருந்தது. அதனையடுத்து இலங்கையைச் சேர்ந்த ஹுசைன் என்பவர் இந்தியாவில் பாகிஸ்தானுக்காக உளவு பார்த்த குற்றச்சாட்டில் கைதாகி ஐந்து வருடச் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நிலையில் இந் நாசகாரத் தாக்குதல் தொடர்பாக மேலதிக விசாரணைகளை இலங்கையில் முன்னெடுக்க இந்தியா திட்டமிட்டிருந்தது.

## குடும்பக்கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சைக்கு காற்றடிக்கும் பம்பிகள்



இந்திய ஒரிஸாவில் கடந்த வெள்ளியன்று குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை முகாம் ஒன்றில், அறுவை சிகிச்சைக்கு வந்திருந்த பெண்களின் வயிற்றை ஊதிப் பெரிதாக்க, சைக்கிளுக்குக் காற்றடிக்கும் பம்புகளை மருத்துவர்கள் பயன்படுத்தினர் என்ற செய்தி வெளியாகியுள்ளது.

## நவம்பரில் ஈராக்கில் சாவு 1232 காயங்களுக்குள்ளானோர் 2434



ஈராக்கில் இயங்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவி அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் கடந்த நவம்பரில் கொல்லப்பட்ட ஈராக்கியர்களின் தொகை சுமார் 1,232 எனத் தெரியவந்துள்ளது. பயங்கரவாதத் தாக்குதல்கள் மற்றும் கலவரங்களால் மேலும் 2434 பேர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் அவ்வறிக்கை கூறுகின்றது.

2014ம் ஆண்டின் முதற் 11 மாதங்களில் ஆக்ககுறைந்தது 12000 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டும் 22000 பேர் காயமடைந்துமுள்ளதாக இவ்வுதவி அமைப்பு அறிவித்துள்ளது.

## உலகின் மிகப் பெரும் மிருக வேள்வி

-அவரது வேண்டுதல் பலித்திருந்தது. அவரது மகன் பல நற்றுக்கணக்கானவர்களில் ஒருவனாக அரச உத்தியோகம் ஒன்றுக்குள் ஈர்க்கப்பட்டிருந்தான். அவரது வேண்டுகோளுக்கு அமைய ஆடு ஒன்றைக் கடவுளுக்கு பரிசளித்தார் அவர். அந்த ஆட்டின் தலை ஒரே வெட்டில் நிலத்தில் உருண்டது -



உலகின் மிகப் பெரும் மிருக வேள்வி நேபாளத்தின் தென் பகுதியில் நடந்தேறியுள்ளது. "கதீமை" என்ற கடவுளின் கோவிலில் இந்த வேள்வி நடைபெற்றுள்ளது.

இந்தியாவின் எல்லைப் புறக் கிராமங்களில் இருந்து கூட மக்கள் கலந்து கொண்ட இந்தத் திருவிழாவில் சுமார் 5 மில்லியன் மக்கள் வருடாந்தம் கலந்துகொள்வதாக உள்ளூர் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வெள்ளி மற்றும் சனி ஆகிய தினங்களில் நடைபெற்ற இவ் வேள்வியில் முதலில் குளு மாடுகளும் பின்னர் ஆடுகளும் வேள்வியிடப்பட்டன.

## "எனது பெயர் எனக்கு மட்டுமே"

### வடகொரிய அதிபர் அறிவிப்பு




வட கொரியாவில், நாட்டின் தலைவர் கிம் ஜாங் உன்னின் பெயரை வைத்துக் கொண்டுள்ள மற்றவர்கள் தங்களின் பெயர்களை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த 2011ஆம் ஆண்டே, தற்போதையத் தலைவரின் தந்தை கிம் ஜான் இல் உயிருடன் இருந்தபோதே இதற்கான உத்தரவு விடுக்கப்பட்டிருந்தது என தென் கொரிய ஊடங்கள் தெரிவிக்கின்றன.

புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு கிம் ஜான் உன் என்று பெயரிடக்கூடாது என்றும், ஏற்கனவே அந்தப் பெயரைக் கொண்டுள்ளவர்கள் தமது பிறப்புச் சான்றிதழ் உட்பட அனைத்து ஆவணங்களிலும் அதை மாற்ற வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் அந்த ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

இதன் காரணமாக எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது தெரியவில்லை என்றாலும், சுமார் 20 சதவீதமான கொரியக் குடும்பங்கள் கிம் எனும் பெயரைக் கொண்டுள்ளார்கள். அதே போல ஜாங் உன் எனும் பெயரும் அரிதானது இல்லை.

## லுபாங்கோவின் மேன் முறையீடு தோல்வி



த ஹேக் நகரிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்ட முதலாவது நபரான காங்கோ ஆயுதக் குழுத் தலைவர் தாமஸ் லுபாங்காவின் மேன்முறையீட்டை அந்த நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சிறார்களைப் படையில் சேர்த்ததாக குற்றம் காணப்பட்ட தீர்ப்புக்கும் அவரது 14 ஆண்டு சிறைத் தண்டனைக்கும் எதிராக லுபாங்கா மேன்முறையீடு செய்திருந்தார்.

காங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்குப் பிராந்தியத்தில் பத்தாண்டுகளுக்கும் மேலாக நடந்துவந்த மோதல்களின்போது, 11 வயதினர் உள்ளடங்கலாக பெருமளவிலான சிறார்களை போரிடுவதற்காக கடத்திச் சென்றதாக வழக்குத் தொடுநர்கள் கூறியிருந்தனர்.

அங்கு பெண்பிள்ளைகள் பாலியல் அடிமைகளாக பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

## சீனாவில் அதிகரிக்கும் ஊழல்



சீன அரசானது ஊழலுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள போதும் அந் நாட்டில் ஊழல் அதிகரிக்கும் என சர்வதேச ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

அவ் எதிர்வுகூறலின் பயனாக சீனா ஊழல் எதிர்வுகூறல் மதிப்பீட்டு புள்ளிகளை குறைவாகப் பெற்றுத் தரவரிசையில் நிலையில் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த வருடத்தில் 80வது இடத்தில் இருந்த சீனா இவ்வருட மதிப்பீட்டில் 100வது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது,

## "கொல்லப்பட்ட நண்பிகளுக்காகப் பழிவாங்கும் வரை ஓயப் போவதில்லை" - மீத்யா றஹ்ஹா



கொல்லப்பட்ட எனது நண்பிகளுக்காக நான் பழிவாங்காமல் விடப் போவதில்லை என இருபத்தியிரண்டு வயதான குர்திஸ் படைப் பெண் தளபதியொருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதப் படையினருக்கு எதிராகப் போரிட்டு வரும் மேற்படி குர்திஸ் இனப் பெண் தளபதி ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகள் சுமார் ஐந்து யார் தூரத்தில் உள்ள போதும் கூட வீரமாகப் போரிட்டு தன்னையும் தனது அணியையும் காப்பாற்றியுள்ளார்.

" நான் அந்தச் சண்டையில் எனது மிக நெருக்கமான நண்பியை இழந்தேன். அவள் எங்களைக் காப்பதற்காகத் தன்னைத் தானே வெடிகுண்டுகளைச் சுமந்தவாறு வெடித்துச் சாம்பலானாள். யுத்தம் செய்வது எவ்வளவு சோகமானது என்பதை அக்கணத்தில் நான் உயர்ந்தேன். ஆனாலும் மறுவர்களாகிப் போன எனது நண்பியைப் போன்ற பலரது நினைவுகள் எம்மைத் தொடர்ந்தும் போராட வைக்கின்றன" என அவர் தெரிவித்துள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிச்சம் நாளைக்கு

சர்மாவுக்குத் தன் ரேடியோ ஞாபகம் வந்தது. தன் ஒரே நகையான வளையலை காமு அடகு வைக்கச் சொன்னது நினைவு வந்தது. கூடவே சிரிப்பும் வந்தது.

"சர்மாஜி. மேலே உங்களுக்கான ஆர்டரை இவுரு கிட்டயே கொடுத்தனுப்பி இருக்காங்க. ரொம்ப தூரத்துல ஒரு மோசமான ஏரியாவுக்கு உங்களை மாத்தியிருக்காங்க. இன்னைக்கிக் காலையே உங்களை ரிலீவ் பண்ணச் சொல்லி உத்தரவு"

சர்மாவுக்கு வியர்த்துக் கொட்டிற்று. நெஞ்சில் ஏதோ அடைப்பது போல. குடும்பம் இப்போதுள்ள நிலையில் திடீரென்று இவ்வளவு தூரம் மாறிச் செல்வது வெள்ளம் தலைக்கு மேல் போவது போல.

"மானேஜர் சார் ஒரு ஹெல்ப்..."

மானேஜர் எழுந்து கொண்டார் பழக்க தோஷம்...

-கெஞ்சலாக அல்ல, உரிமைக் கண்டிப்புடன் சர்மா பேசினார். "டிரான்ஸ்பர்ல போனா ஒரு மாச சம்பளம் டி.ஏ. அட்வான்ஸ் ரெண்டாயிரம் சேர்த்து கேஷ் இப்பவே தர முடியுமா சார்?"

"இப்பவே வாங்கிக்கங்க... ஆல்த பெஸ்ட்!"

தன் இடத்துக்கு வந்தபோது அந்த ஆசாமி எதிர் சீட்டில் உட்கார்ந்தபடி இவரை எகத்தாளமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். சர்மா புன்னகைக்க அவருக்குத் திகைப்பு.

இரவு. கூடத்து ஊஞ்சல் விட்டுவிட்டு முனகுகிறது. சங்கிலியில் முதுகைச் சாய்த்தபடி சர்மா மெலிதாக ராகம் ஒன்றை மெல்ல இசைத்து அதில் ஆழ்ந்து திளைக்கிறார்.

கோவிலிலிருந்து வரும்போதே காமுவுக்கு குதூகலம். "ரகு கோயில்லயே வந்து சொன்னான். பிராவிடண்ட் ஃபண்டு லோன் இன்னைக்கே கெடைச்சுடுத்தா?"

"பின்னே? நான் ஹெட் கிளார்க் இல்லியோ?"

காமாட்சி மன நிறைவுடன் திரும்பினாள்.

"காமு, சீக்கிரம் தட்டு வை. ரொம்பப் பசிக்கிறது"

"போறது, இப்பவாவது பசிக்க ஆரம்பிச்சிருக்கே. நேத்திக்கி இருந்ததுக்கு இப்ப ஒங்க முகம் தெளிவா இருக்குன்னா?"- குழம்புவதும் தெரியும் தெளிவதும் அவளுக்குத் தெரியும்... அவள் அவரில் பாதியாச்சே!

## தொடர்கதை

"காமு, புதுசு புதுசா ஊர்களும் ஜனங்களும் பாக்கணும் போல இருக்கு... போவோமா?"

"ஓ, போவோமே!"


மிச்சத்தை நாளைக்குச் சொல்லலாம்..



முற்றும் ... ...

# அம்மா - புள்ளை

## சிறுகதை



அதிவேகமாக சுழலும் பூமியில் மக்களும் ஒரு எந்திரம் போல வாழ வாழ்கையின் முக்கியத்துவம் கூட தெரியாது வாழும் இளமை பருவம், பள்ளி பருவம் ஒரு பொக்கிஷம் .அந்த பொக்கிஷம் அனைவருக்கும் கிடைக்காது .

கணேஷ் 9 ஆம் வகுப்பு மாணவன் ஒரு தனியார் பள்ளியில் படிக்கிறான். பயந்த சுபாவம் கொண்டவன். தந்தை சிறு வயதில் தவறி விட்டார். தந்தை ஒரு அரசு நிறுவனதில் வேலை பார்த்தார். வேலையில் இருக்கும் போது உயிர் பிரிந்ததால் அந்த வேலை அவர் மனைவி செல்லம்மாள் கொடுக்கபட்டது. செல்லம்மாள் 1980ல் 12 ஆம் வகுப்பு முடித்தவள். அவளுக்கு ஏற்றாற் போல் ஒரு வேலை வழங்கப்பட்டது. அம்மா செல்லம்மாளுக்கு வெளி உலகம் தெரியாது தன் மகன் வேலை வீடு என்று வாழ்பவள்.

கணேஷ் படிப்பில் கெட்டி,கொஞ்சம் விளையாட்டில் ஆர்வம் உண்டு. ஒரு நாள் தூரத்து எழுத்து மங்கலாக தெரிகிறது என்றான். மறுநாள் அவனை அழைத்துகொண்டு செல்லம்மாள் அரசு மருத்துவமனைக்கு சென்றாள். கணேஷை பரிசோதித்த டாக்டர் தூர பார்வை கண்ணாடி அணிந்தால் சரி ஆகிவிடும் என்றார். மருத்துவர் அறிவுரை படி கண்ணடி வாங்கி கொடுத்தாள் செல்லம்மாள் . அவனும் கண்ணாடி அணிவது ஒரு மாறுபட்ட அனுபவம், தனக்கு அழகு சேர்பதாக நினைத்து கொண்டான்

வருடங்கள் நகர கணேஷ் 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றான். கணேஷ் படிப்பில் கவனம் செலுத்த ஆரமித்தான் .மறுபடியும் அவனுக்கு தலை வலி மற்றும் கண் வலி வந்தது. அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றாள் செல்லம்மாள் .மீண்டும் அதே தான் சொன்னார் மருத்துவர். பக்கத்து வீட்டு மாமி தனியார் மருத்துவமனையில் கொண்டு பரிசோதித்து பாருங்கள் என்றார். ஏன் நாம் போககூடாது என்று அந்த தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றாள். அவர்கள் நெடு நேரம் பரிசோதித்து பார்த்தனர். பின்பு ஒரு மருத்துவரிடம் அழைத்து சென்றனர். அவர் ஏதோ ஆங்கிலத்தில் பேச செல்லம்மாளுக்கு புரியவில்லை. கணேஷ், மருத்துவர் சொல்லும் வார்த்தைகள் அவனுக்கு பரிச்சியம் இல்லாதவை. இருந்தாலும் புரிந்தது போல் தலை ஆட்டிவிட்டு வந்துவிட்டான்.

12 ஆம் வகுப்பு பொது தேர்வு நெருங்கியது அவன் மீண்டும் அந்த வலியில் துடித்தான் செல்லம்மாள் தேர்வு முடிந்த உடன் மருத்துவமனைக்கு அழைத்து போனாள். அப்போது தான் அவனுக்கு ஒரு அரிய நோய் இருப்பதை அறிந்தனர். அவனுக்கு அந்த நோயின் அறிகுறிகள் அதிகம் இருந்தது அந்த நோய் அவன் இரண்டு கண்களையும் பாதிக்கும் அபாயம் இருந்தது. அதை அந்த மருத்துவமனை சரியான முறயில் விளக்கவில்லை அவனுக்கு தற்காலிகமாக காண்டக்ட் லென்ஸ் பயன்படுத்த சொன்னார்கள் ஒரு கண் தான் பாதிக்கபட்டு இருப்பதால் அவன் அதை பயன்படுத்தவில்லை செல்லம்மாள் விவரம் தெரியாததால் எதுவும் சொல்லவில்லை.

12 ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றான். நல்ல மதிப்பெண் என்பதால் நல்ல கல்லூரியில் இடம் கிடைத்தது அவன் வாழ்க்கையின் திருப்பு முனை அந்த கல்லூரி வாழ்க்கை ஒரு வருடம் கல்லூரி விடுதியில் தங்கினான். பின்பு செல்லம்மாள் கணேஷை பிரிந்து வாழ முடியாமல் தன் வேலையை சென்னைக்கு மாற்றி கேட்டு வந்து விட்டாள்.
கணேஷ் வாழ்க்கையின் அனைத்து இன்பங்களும் அனுபவிக்க வேண்டும் என்பது செல்லம்மாளின் ஆசை அவன் இஷ்டம் போல் விட்டுவிட்டால்.

கணேஷ்க்கு வலிகள் இருந்தாலும் சுற்றம் அவனை அதை மறக்கடித்தது கல்லூரி. 3 ஆம் ஆண்டில் மீண்டும் வலி அதிகம் ஆனது அவன் அப்போது தான் தனக்கு என்ன நோய் என்று தீவிரமாக கேட்டான். அவன் இரண்டு கண்ணிலும் நோய் வந்து விட்டதாக தெரிய வந்தது. அவனால் சரியாக பார்க்க முடியவில்லை. இரவில் பார்வை ரொம்ப மோசமாகிவிட்டது. அவன் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது மீண்டும் மருத்துவமனை அழைத்து சென்றாள்.

மருத்துவர் கோபத்துடன் நான் முன்பு சொல்லி இருந்தது போல் ஒரு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் முதலில் இடது கண்ணில் பின்பு வலது கண்ணில் செய்ய வேண்டும் என்றார். அவள் சேர்த்து வைத்து இருந்த தொகையில் சிறிது எடுத்து இடது கண்ணில் அறுவை சிகிச்சை செய்தாள். அவன் வலியில் துடித்ததை விட செல்லம்மாள் துடித்தாள். கணேஷ் வழியில் துடித்தான் மூன்று மாதம் கழித்து மீண்டும் வலது கண்ணில் அறுவை சிகிச்சை சோதனை செய்யும் போது அவன் அந்த நோய் பற்றி விவரம் வேண்டும் என்றான்.

மருத்துவர் அவனிடம் என்ன சந்தேகம் உள்ளதோ கேள் என்றார்.
கணேஷ் : இந்த நோய் என்னக்கு எப்படி வந்தது?
மருத்துவர் : இது யாரிடம் இருந்து தோற்றும் நோய் இல்லை. நீ அதிகம் கண்கள் கசக்கும் பழக்கம் உள்ளவன் அதுவே இந்த நோய்க்கான முதல் காரணம்.
கணேஷ் : இந்த நோய் எல்லோருக்கும் வருமா?
மருத்துவர் : இல்லை இது 10000 த்தில் ஒருவருக்கு தான் வரும் நீ கவலை படதே குணாபடுத்திடலாம்
கணேஷ் :என்னால முடியல எப்போ இந்த நோய் குணமாகும்?
மருத்துவர் : இந்த ஒரு அறுவை சிகிச்சை அப்புறம் எல்லாம் சரியாய் போய்டும்.

வலது கண்ணிலும் அறுவை சிகிச்சை முடிந்தது. அவன் கவலை அதிகம் ஆனது அவன் முன்பு போல் வெளிய செல்ல முடியவில்லை இதை அவன் நண்பர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவன் பார்வை முன்பை விட மோசமாகிவிட்டது. இதை அவனால் அம்மாவிடம் சொல்ல முடியவில்லை. யாரும் இல்லா வேளையில் தனியே அழுது புலம்புவான். அவனால் எதுவும் செய்ய முடியவில்லை

அறுவை சிகிச்சைக்கு பின்னும் இரண்டு கண்களினதும் நிலைமை மோசமாகிவிட்டது. இதை அவன் அம்மாவிடம் சொல்ல முடியாமல் சொல்ல அவள் பதறி போனால் உடனே அழைத்து சென்றாள் மருத்துவரிடம்.

செல்லம்மாள் : என் மகனுக்கு வந்து இருக்கும் நோய் என்னனு நான் தெரிஞ்சிக்கலாமா எனக்கு புரியும் வகையில் சொல்லுங்கள் என்றாள்.
மருத்துவர் : உங்கள் மகனுக்கு வந்து இருக்கும் நோய் keratoconus கருவிழிக் கூம்பல் என்று சொல்லுவார்கள் இந்த நோய் கண் பார்வையை மெல்ல அழிக்கும் இதை சரியாக பார்க்காமல் விட்டால் கண் பார்வையை இழந்து விடுவர்.
செல்லம்மாள் : இதற்கு தீர்வு இல்லையா ??
மருத்துவர் : ஒரே தீர்வு கருவிழி மாற்று சிகிச்சை தான் .அதுவும் எல்லாருக்கும் செய்ய முடியாது அதற்கு நிறைய விதி முறை இருக்கு.

செல்லம்மாள் கவலையுடன் வெளியே வந்தாள். என்ன செய்வது யாரு செய்த பாவம் என் மகனை காவு வாங்குதோ. கணேஷுக்கு சில ஆண்டுகளுக்கு முன்னே இதை பற்றி தெரியும். சொன்னால் அம்மா வருத்தப்படுவார் என்று சொல்லவில்லை. செல்லம்மாள் கணேஷை நன்றாக பார்த்து வந்தாள் .

கணேஷ் தன்னால் அம்மாவுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை என்ற வருத்தப்பட்டான். அவனை நோய் முழுமையாக விழுங்கியது பார்வையை இழந்தான். கணேஷ் செல்லம்மாள் இருவரையும் சோகம் சூழ்ந்தது. செல்லம்மாள் அன்று வேலைக்கு கட்டாயம் செல்ல வேண்டும் என்றவுடன் கணேஷ் ஒரு ஏக்கத்துடன் அம்மாவை பார்த்தன்.

கணேஷ் "இந்த உலகத்தில் நம்மால் வாழ முடியும் ஆனால் ஒரு உயிர் உள்ள பிணம் போல் தான் வாழ வேண்டும். நான் என் அம்மாவுக்கு எதுவும் செய்யவில்லை இனி நான் என்ன செய்வது?" ஒரு காகிதம் எடுத்தான், எழுதினான்

"என் அன்பு அம்மாவுக்கு
என்னை இத்தனை வருடம் கஷ்டப்பட்டு வளர்த்ததுக்கு என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நான் பட்ட துன்பம் உனக்கு தெரிய வேண்டாம் என்று நினைத்தேன் விதி விடவில்லை என்னை வென்றது. நிகழ்காலம் உன் மகன் பெயர் சொல்லும் என் உடல் உறுப்புகள் அனைத்தையும் தானம் செய்து விடு. இது தான் என் இறுதி ஆசை "
உன் அன்பு மகன்
கணேஷ்"

கண்ணீருடன் அம்மா புகை படம் பார்த்து கொண்டு தனக்கு மருத்துவர் கொடுத்த மருந்தை அளவுக்கு அதிகமாக அருந்தினான். அதில் இருக்கும் வேதியியல் அவன் உயிரை எடுத்தது. அவன் இறுதி கண்ணீர் துளி வேறு ஒருவனின் வாழ்க்கையில், பட்டு போன செடியில் ஊற்றும் அமிர்த நீர்

- கீதா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுரசு

## இருப்பை உணர்தல்

இழுத்துப் பூட்டப்பட்ட
கதவின் வெளியே
இருட்டு .. உள்ளே
வெறுமை...

நீ போய்விட்டாய்
இந்த நாள்
முடிந்துவிட்டது...

சுவரில் ஓடும்
பல்லிகளையும்
மெதுவாய் வீசும்
மின் விசிறியையும்
வெறித்துப் பார்த்திருக்கும்
என்னையும் தவிர...

உயிர்ப்புடன் எதுவும்
இவ் வீட்டிலில்லை....

நீ போய்விட்டாய்...

மென்னொளிப் புன்னகை.
முகஞ் சுருக்கும் சினம்
பளீரென அழுகை
பள பளக்கும் கருவிழிகள் -
உதடு
இறுக்கி ஓரிரு முத்தம்

உனது மொழியின் ஒலிகள்
உனது மௌனத்தின் இறுக்கம்
உனது பார்வையின் வெப்பம்
உனது குதியற் சலங்கையொலி

எதுவுமிங்கில்லை...
இந்த நாள்
இப்போதே இறந்தது.. ..

நீ போய்விட்டாய்...

எனினும்
என்னைத் தொடரும்
நிழலின் வடிவில்
நீ என்னுடன் தான்
இருக்கின்றாய். .. ..

-- மாயன் --
தலைமுரசு ஆசிரியர்



## என் உயிர்க் காதலனே



இதுவரை காணாத உணர்வு நீ
உணராத உணர்வு நீ
பேசாத வார்த்தை நீ
நாளை என் கனவு நீயடா!

எல்லோருக்கும் மண்ணில்
பூத்த மலரே மனம்
உன் உயிர் உள்ளவரை நேசி
விதியிடம் சொல்
உனக்கும் எனக்குமான
பயணம் தொடரும் என்று

எல்லோரும் உணர்வதில்லை
காதல் என்ன வென்று
உணர்பவர்கள் புரிவதில்லை

தொலைதூரம் சென்ற உன்
தொலைப் பேசி அழைப்புக்காய்
என் இதயம் காத்திருக்கும்

அன்பான வார்த்தைகளின் மீது
தீராத ஆசை கொண்டு
உனக்காக காத்திருப்பேன்
உன் காதலியாக

எஸ்.வினோதினி
சீதனவெளி

## ஆசை

மனிதர்கள் அனைவருடனும்
புன்னகை பூத்து நிற்க ஆசை.....!
முகம் வாடிய மலர்களால்
ஓய்ந்து போகிறது மகிழ்ச்சியின் உதிர ஓசை.....!
பிரிவினை அற்ற உண்மையான
பாசத்திற்கு ஆசை .....!
முட்கள் இதயத்தை குத்துவதால்
வலிக்கிறது உயிர் திசை ....!
எல்லோருடனும் சம நிலையில்
பழக ஆசை ....!
விழிகளாளோ தூர வீசி எறிகிறார்கள்
நசுங்குகிறது இதயத் தசை .....!
பணத்திற்காக வாழாமல் குணத்திற்காக
வாழ ஆசை ....!
நெருங்கி வருவது இல்லை அனைவரும்
ஒட்டிக் கொள்ளும் பணத்தின் பசை .....!
உண்மையாக வாழ ஆசை .....!
பொய்யாய் தூரத்தில் தள்ளி விடுகிறார்கள்
தனிப்பள்ளத்தில், தவிக்கவே உயிர் ஓசை .....!

- கே.அஷிம் -
இக்பால் நகர், நிலாவெளி

## அரியசுவை

தமிழைப் பார்க்கிறேன் - அதன்
தரத்தைப் பார்க்கிறேன்
அமுதை உணர்கிறேன் - அடடா,
அரிய சுவையடா!

குறிலும் உள்ளதாம் - நெடிலும்
கூட உள்ளதாம்!
அறிய அறியவே - நமக்கும்
அறிவும் வளருதாம்!

"வன்மை" உள்ளதாம் - 'மென்மை'
வரவும் உள்ளதாம்!
நன்மை 'இடைமை' யாம் - அதுவும்
நாடி நிற்குதாம்!

உயிரும் மெய்யுமாய் - இயங்கும்
உடலைப் போலவே,
பயிரும் பசுமையும் - இணைந்த
பயன் தமிழ் வாழ்க!

- தாமரைத்தீவான் -

## சலங்கை கட்டியாடும் சமரிங்கு ஆரம்பமாகியிருக்கு

இலங்கைத் திருநாட்டில்
எதிர்பார்த்த தேர்தலின்று
இரண்டு வருடங்களை
முந்திக் கொண்டு வந்திருக்கு!


கலங்கரை விளக்கமாக
காட்சிதரும் பதவிக்கு
சலங்கை கட்டி யாடும்
சமரிங்கு ஆரம்பிச்சிருக்கு!

சரியான போட்டியென்று
சகலரும் கதைக்கிறார்கள்
ஒலி ஒளி ஊடகங்கள் இங்கு
பத்திரிகைத் தகவல்களும்
மக்கள் காணச் செய்கிறது!

கட்சித் தாவல்களும்
கண்டன அறிக்கைகளும்
பரீட்சய மானதுதான் என
பரவலாகச் சொல்கிறார்கள்!

எப்படித்தான் சொன்னாலும்
செப்படிதான் செய்தாலும்
தப்புக்களை செய்தவரை
குப்புறத் தள்ளிவிட மக்கள்
குறிவைத் திருக்கிறார்கள்
வாக்காளர் வாக்குகளே
மகுடத்தைத் தீர்மானிக்கும்!

சேனையூரான்



## இது குளக்கோட்டன் சமூகம்

வரலாற்றுப் பக்கம்

ஜீவா நான் ஊருக்கு வந்துவிட்டேன்" என்ற உற்சாகமான குரல் எனது அன்றைய நாளைச் சந்தோசத்துடன் தொடங்கி வைத்தது. நீண்ட நாட்களாக நான் எதிர்பார்த்திருந்த அந்தக் குரலுக்குரியவர் கலாநிதி சரவணபவன் அவர்கள். திருகோணமலையின் பண்டைய வரலாற்றினை இலகு தமிழில் கால ஒழுங்குக்கு அமைய 'வரலாற்றுத் திருகோணமலை', 'காலனித்துவ திருகோணமலை' என்ற இருநூல்களை ஒழுங்குபடுத்தப்பட்ட வரலாற்று ஆவணங்களாக நமக்கு உருவாக்கித்தந்தவர். பார்ப்பதற்கும், பழகுவதற்கும் எளிமையான, இனிமையான மனிதர்.

ஒரு வாசகனாக அவருடைய நூலுடனான அறிமுகம் 2003ல் வெளிவந்த 'வரலாற்றுத் திருகோணமலையுடன்' ஆரம்பமானது. ஈழத்தமிழரின் வரலாற்றுத் தடங்களை கால ஒழுங்கு நிரலில் வரிசைப்படுத்தி எழுதுவதில் பல சிரமங்கள் உள்ளதாயினும், கிடைக்கும் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு திருகோணமலையின் பெருங்கற்கால ஆதிக்குடிகள் முதல் போர்த்துக்கீசரின் வருகைக்கு முன்னுள்ள காலப்பகுதி வரையான வரலாற்றினைப் பதிவு செய்திருந்தது இந்நூல்.

பலமுறை வாசித்தும் இன்றுவரை சுவாரிசம் குன்றாமல் இருக்கும் 'வரலாற்றுத் திருகோணமலை' என்ற நூலின் முதல் மூன்று அத்தியாயங்களும் திருகோணமலையின் ஆதிக்குடிகள் தொடர்பான சான்றாதாரங்களை பிராமிக் கல்வெட்டுக்கள், சங்ககால இலக்கியங்கள், தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம், புராணங்கள் என்பவற்றின் உதவி கொண்டு விரிவாக ஆராய்கிறது.

அதைத் தொடர்ந்து வரும் அத்தியாயம் திருக்கோணேஸ்வரத்தின் தோற்றகாலம் தொடர்பான தேடல்களின் ஆவணப்படுத்தலாக அமைகின்றது. அதனைத் தொடர்ந்து வரும் தென்னிந்திய அரசுகளின் எழுச்சிக்காலம் என்ற அத்தியாயம் திருகோணமலை வரலாற்றில் நேரடியான அரசியல், சமூக, பண்பாட்டுப் பாதிப்புக்களை உருவாக்கிச் சென்ற பல்லவ, சோழ, பாண்டிய அரசுகளின் மேலாதிக்கம் தொடர்பாக ஆராய்கின்றது. இதில் குறிப்பாக சோழப் பேரரசு எழுச்சியுற்றிருந்த காலத்தில் திருகோணமலை கொண்டிருந்த முக்கியத்து வத்தினைப் புரிந்து கொள்வதற்கு உறுதுணையான பல சாசன ஆதாரங்களை முன்வைத்திருப்பது குறிப்பிடத்தது.

இவற்றைத் தொடர்ந்து திருகோணமலைப் பிரதேசத்தில் காலத்தால் அழியாத பதிவுகளை விட்டுச் சென்ற கஜபாகு, குளக்கோட்டன், வன்னிபங்கள் தொடர்பான ஆவணப்படுத்தல்கள் சரித்திர ஆதாரங்களுடன் இடம்பெற்றிருந்தது. நூலின் இறுதி அத்தியாயங்கள் திருகோணமலை சமூகத்தின் சமூக வழமைகள், மதங்கள், தொல்மரபுகள் என்பவற்றின் ஆராய்வுகளுடன் நிறைவுபெறுவதாக அமைந்திருந்தது.

வாசித்து வியந்த எழுத்தாளர்களுடன் பேசிப்பழகக் கிடைத்த வாய்ப்புகள் அற்புதமானவை. அவ்வாறானதொரு அரிய வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்தது ஜீவநதி வலைப்பதிவு (www.geevanathy.com) வரலாற்றுத்துறை சார்ந்த ஆர்வத்துடன் தொடர்ந்து ஒரு தலைமுறையினரின் (வேலாயுதம், தங்கராசா, ஜீவராஜ்) கட்டுரைகளைப் பிரசுரித்து வரும் ஜீவநதி வலைப்பதிவு இணைய வெளியூடாக எனக்குப் பல அறிஞர்களின் அறிமுகங்களை உருவாக்கித்தந்திருக்கிறது.

இணையவெளி அறிமுகம் தரையில் சந்திப்பாக இடம்பெற்ற நாளும் வந்தது. 2010 இல் ஒரு மாலை வேளையில் மிக எளிமையான தோற்றத்தில், அவரது இரண்டாவது வரலாற்று நூலான 'காலனித்துவ திருகோணமலை' நூல் வெளியீட்டு அழைப்பிதழுடன், பெருந்தன்மையோடு எனது வீட்டுக்கு வந்திருந்தார் அவர். கேட்பதற்கு நிறையக் கேள்விகள் என் மனதில் இருந்தபொழுதிலும், அவரது நூல் வெளியீட்டு வேலைகளை கருத்தில் கொண்டு ஒரு குறுகிய சந்திப்பாக அது அமைந்திருந்தது. இருந்தும் ஒவ்வொரு எழுத்தாளனும் தான் எழுதிமுடிக்காத பல நூல்களை மனநூலகத்தில் சுமந்தபடி சமூகத்தில் சாதாரணமாக உலவிக் கொண்டு இருக்கிறான் என்ற அடிப்படை உண்மையை என்னில் பதியவைத்த சந்திப்பாக அமைந்தது அன்றைய முதல் சந்திப்பு.




காலனித்துவ திருகோணமலை என்ற நூல் திருகோணமலை வரலாற்றினை ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்களின் கொடி திருகோணமலைக் கோட்டையில் ஏற்றப்பட்ட 1623 ஆம் ஆண்டு முதல், திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் இருந்து பிரித்தானியக் கொடி இறக்கப்பட்ட 15.10.1957 வரையான காலப்பகுதியினை பதிவு செய்கிறது இந்நூல். இலண்டன், நெதர்லாந்து, பிரித்தானிய ஆவணக் காப்பகங்களின் ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு சுவாரிசமான ஆனால் அவ்வாணங்கள் சொல்லும் கருத்துக்கள் மீதான விமர்சனமற்ற வரலாற்றுப்பதிவாக அமைகிறது இந்நூல்.

தொடரும்.....

வைத்திய கலாநிதி
த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்புணர்வின் தேர்வு



பொது வேட்பாளர் திரு. மைத்திரிபால ஸ்ரீசேன தொடர்பாக தமிழ் மக்களிடையே சிறியதொரு எதிர்பார்ப்பொன்று உருவாகி வருவது தவிர்க்க முடியாதுள்ளது.

2006ல் கிழக்கில் இருந்தும் 2009ல் வடக்கில் இருந்தும் யுத்தம் ஓய்ந்துள்ள போதும் வடக்குகிழக்குத் தமிழ் மக்கள் தமது வாழ்வியலின் அடிப்படைக் கூறுகளில் யுத்தத்தை எதிர்கொண்டே உள்ளனர் என்பது உண்மையே.

அதனை பல நாடுகளும் அமைப்புக்களும் வெளிப்படையாகக் கூறியும் உள்ளன.

தமிழர்களின் வாழ்வியலின் அடிப்படைக் கூறுகளில் விரும்பத்தகாத அல்லது ஏற்றுக்கொள்ளத் தகாத திணிப்புக்களை எண்ணிக்கையில் பெருமளவாகவுள்ள சிங்கள மக்கள் தமிழர்களின் தாயகப் பிரதேசத்தில் மேற்கொண்டுவருவது தமிழ் மக்களின் வாழ்வியலைப் போர்க்காலப் பண்பிலேயே தேக்கி வைத்துள்ளது. அபிவிருத்தி என்ற பெயரில் நடைபெறும் சூறையாடல்களையும் அதன் பால் மீளவும் இழப்புக்களையும் மக்கள் அனுபவித்தே வருகின்றனர்.




காணி அபகரிப்பு, சட்டவிரோதக் குடியேற்றங்கள், தமிழர்களின் வரலாற்றுச் சின்னங்களை பௌத்த சிங்கள மயமாக்குதல், தமிழர்களின் வரலாற்றுச் சின்னங்களை அழித்தல் என வெளிப்படையாகத் தொடரும் நடவடிக்கைகள் ஒருபுறமும் மறுபுறத்தில் மக்களின் நாளாந்த நடவடிக்கைகளில் அரசியல்வாதிகளின் செல்வாக்கு, சிறு மற்றும் விவசாயத்தொழில்களில் படையினரின் தலையீடும் சந்தையில் அவர்கள் செலுத்தும் செல்வாக்கும், வீதிப் போக்குவரத்துக் காவல்துறையினரின் சில தான்தோன்றித்தனமான நடவடிக்கைகள் எனவும் தொடரும் முரண்பாடுகளால் மக்கள் சலிப்படைந்திருப்பதுடன் எதிர்மறை மனவியல்புக்குத் திரும்பவும் தொடங்கியுள்ளனர்.

கிழக்கில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் சிலராலும், காவல்துறையிலுள்ள முஸ்லிம் படையினராலும் உருவாக்கப்படும் இனக்குரோதச் செயற்பாடுகள் தமிழ் மக்களை இருமுகப்படுத்தப்பட்ட அடக்கு முறைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளி வருகின்றன.

இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள இயைபற்ற சூழலில் வாழும் மக்கள் தமது தார்மீக எதிர்ப்பைப் பதிவிடுவது என்பது வடக்கில் சற்றுச் சாத்தியமாக உள்ளதெனினும் கிழக்கில் அவ்வாறான நிலை தளர்வாகவே உள்ளது.

உதாரணமாக வடக்கில் காணிச் சுவீகரிப்பிற்கான அளவீட்டு நடவடிக்கைகளுக்கு அங்குள்ள அரசியல் தலைவர்களால் மக்கள் மயப்படுத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் பெருமெடுப்பில் நிகழ்ந்தமையானது அங்குள்ள மக்கள் சிறிதளவேனும் அச்சம் களைந்து தமது தார்மீக எதிர்பை வெளியிட்டு தமது உள்ளக் கிடக்கைகளை வெளிக்கொணர்வதற்குரிய வாய்ப்பாக அதனைப் பயன்படுத்தவும் முடிந்துள்ளது.



ஆனால் கிழக்கில் அவ்வாறானதொரு நிலையை ஏற்படுத்துவதில், அதாவது தமிழ் மக்கள் தமது தார்மீக எதிர்பை வெளியிடுவதற்கான வாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக மாறியுள்ளமையும் அதற்கான முக்கிய காரணியாக மக்களை ஒன்றிணைக்க முடியாதுள்ள தமிழ் அரசியல் தலைமைகளின் பலவீனமும் காணப்படுகின்றன.

இந்நிலையானது ஒட்டுமொத்த அதிருப்தியொன்றை ஆளம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மீது ஏற்படுத்தியுள்ளதுடன் அவ் அதிருப்தி நிலை நீறு பூத்த நெருப்பாகவே தமிழ் மக்கள் மனங்களில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே சனாதிபதித் தேர்தலின் அறிவிப்பு வெளியாகியுள்ளது. முக்கியமாகத் தமிழ் மக்களின் மனநிலையானது அதிருப்தியில் உறைந்திருப்பதைச் சற்றேனும் சிந்திக்காமல் சனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டமையானது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது வாக்கு வங்கியினை நிரப்புவதற்குத் தனியாக சிங்கள மக்களிலேயே தங்கியிருக்கின்றது என்பதை வெளிப்படையாக எடுத்துக்காட்டியுள்ளது.

அத்துடன் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுடனான அரசின் உறவுகள் பாதிப்படையத் தொடங்கியுள்ள நிலையில் சனாதிபதி தேர்தல் அறிவிப்பு வெளியானது மேற்சொன்ன கருத்தை மேலும் ஸ்திரமாக்கியுள்ளது.

முஸ்லிம் மக்களுக்கு மேலும் ஓர் அதிர்ச்சி வைத்தியமாக பொது பல சேனாவும், ராவண பலயவும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளருக்குத் தமது ஆதரவை வெளிப்படையாகத் தெரிவித்ததும் அதனை அக்- கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ஏற்றுக்கொண்டதும் அமைந்துள்ளது. கடும்போக்குச் சிங்கள மக்களினதும், சிங்கள அடிப்படைவாதத்தை தமது தாரக மந்திரமாகக் கொண்டுள்ள சிங்கள மக்களதும் மனங்களைத் திருப்திப்படுத்தும் இந்த நடவடிக்கையின் மூலம் ஆளுங்கட்சி தமது வாக்கு வங்கியில் தமிழ், முஸ்லிம் மக்களிற்கு இடமில்லை எனச் சூசகமாகத் தெரிவித்துள்ளது.

இவ்வாறு மாறியுள்ள தேர்தல் களத்தில் தமிழ் மக்கள் தமது மனக்கிடக்கையினை வெளிப்படுத்தவும், அரசின் நடவடிக்கைகளுக்குத் தமது தார்மீக எதிர்ப்பை வெளியிடவும் கிடைத்துள்ளதோர் சந்தர்ப்பமாகவே இந்த சனாதிபதித் தேர்தல் அமைந்துள்ளது.



எதிர்ப்பு அரசியலின் பாற்பட்டுப்போகும் இந்த வாய்ப்பில் தமிழ் மக்களிற் பெரும்பாலானோர் அரசிற்கு எதிரானவரின் பக்கம் சாயும் மனப்போக்கைக் கொண்டிருப்பது இயற்கையே.

இங்கு எதிர்ப்பு உணர்வின் தாக்கத்தில் மூழ்கிக் கிடக்கும் தமிழ் மக்கள் அடுத்த தேர்வை நோக்கி வேறுவழியின்றித் திருப்பப் படுகின்றார்கள் என்பதே உண்மை.

அதற்கும் அப்பால் அந்த இரண்டாவது தெரிவு தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்க முயலுமா என்பதையிட்டுச் சிந்திப்போமானால் தமிழ் மக்களின் முன் எஞ்சிக்கிடப்பது கேள்விக் குறிகளாகவே இருக்கும்.

முதலாவதாக மைத்திரிபால ஸ்ரீசேன இவ்வளவு காலமும் தமிழர் விரோதப் போக்கைக் கொண்ட அரசாங்கத்தின் பிரதம அமைச்சர்களுள் ஒருவராகவே இருந்து வந்துள்ளார். அப்போதெல்லாம் தமிழருக்குத் தீங்கு விளைவிக்கும் தீர்மானங்களையிட்டு எவ்வித எதிர்பொலிகளையும் அவர் எழுப்பியதாக பதிவில்லை. அடுத்து அவர் மகிந்த ராஜபக்சவினால் முக்கியமாகப் பயன்படுத்தப்படும் ஒரு வார்த்தையான "காட்டிக்கொடுக்க மாட்டேன்" என்ற அதே வாத்தையினைப் பின்பற்றிப் பயணிப்பவராகவே உள்ளார். அதனால் உள்நாட்டில் நடைபெற்ற படுகொலைகள் தொடர்பான விசாரணைகளை, உள்நாட்டு விசாரணையைக் கூட, எந்தளவிற்குப் புதியவர் முன்னெடுக்கப் போகின்றார் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

மேலும் தமிழர் விரோதப் போக்கை வெளிப்படுத்திவரும் ஜாதிக ஹெல உறுமய கட்சி எதிரணிக் கட்சி வேட்பாளருடன் செய்துகொண்டுள்ள வெளிப்படையான ஒப்பந்தமானது தமிழருக்குத் தீங்கு விளைவிக்கும் சில சரத்துக்களையும் கொண்டிருப்பது தெரிந்ததே. அதனை ஏற்று வெளிப்படையாக புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளரிடம் எந்தளவிற்கு தமிழர் பிரச்சனை தொடர்பான புரிந்துணர்வு உள்ளது என்பது தெரியவருகின்றது.

இரண்டு பிரதான வேட்பாளர்களும் தமது பேருரைகளில் தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக பேச முனையவில்லை என்பதை இங்கு கவனத்தில் கொள்ளலாம். எவ்வளவுக்கெவ்வளவு தமிழர் பிரச்சனைகளை பேசுவதைத் தவிர்க்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் இருவரும் தவிர்த்து வருகின்றனர்.

இந்நிலையில் ஒரு வேட்பாளரால் மற்றைய வேட்பாளரின் மீது தமிழர் ஆதரவுப் போக்கையோ அப்போக்குச் சார்ந்து புலிச்சாயத்தையோ பூச முடியாமல் இருப்பது இம்முறைத் தேர்தலில் கவனிக்கக்கூடியதொன்று.

ஆளுங்கட்சியின் வேட்பாளர் வெளிப்படையான புலி எதிர்ப்புக் கொள்கையை தமிழர் விரோதப் போக்காக வெளிப்படுத்தி விட்டவர் என்பது அனைவருக்கும் தெரிந்திருக்கின்ற நிலையில், எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் ஆளுங்கட்சியின் கூடாரத்தில் இருந்து வெளியேறிச் சென்றவர் என்பதால் புலி மற்றும் தமிழர் விரோதப் போக்கின் பண்புடனேயே செயற்படுவார் என்பதை உட்கிடையாக சிங்கள மக்கள் புரிந்துகொள்ளத் தலைப்பட்டுள்ளனர். அதனைத் தமிழ் மக்களும் புரிந்துகொண்டுள்ளனர்.

எனவே பொது வேட்பாளருக்கான தமிழர்களின் ஆதரவானது எதிர்ப்புணர்வின் அடிப்படையிலும், தடுக்கப்பட்டுள்ள தமது மனித உரிமை மற்றும் எண்ணங்கள் எவையென்பதை அறியச் செய்வதற்காகவும் தனாகவே உருவாக்கப்படுகின்றது.

இதனை நன்றாகப் புரிந்துகொண்டுள்ள ஆளும் கட்சியானது முற்றுமுழுதாக சிங்கள மக்களை மட்டும் குறிவைத்துத் தனது வாக்கு வங்கியின் கதவுகளைத் திறந்து விட்டுள்ளது. தமிழ் மக்களின் தடுமாற்றம், தமிழ் தலைமைகளினால் யாரை ஆதரிப்பது என்று சரியாகத் தீர்மானம் எடுக்க முடியாதிருப்பதும் கடும் குழப்பங்களை உருவாக்கி வரும் இவ்வேளையில் சிங்கள மக்களின் வாக்குகளை மட்டுமே கொண்டு வெறியொன்றை ஈட்டிக்- கொள்ள ஆளும் கட்சி தனது தந்திரோபாயங்களைத் தற்போதுவரை விரித்துவிட்டது.

இத்தனித்தந்திரோபாயத்தினால் ஆளுங்கட்சியால் வெற்றியொன்று ஈட்டப்படுமானால் அதன் பின்னர் தமிழ் மக்கள் கடும் பின்விளைவுகளை மீளவும் எதிர்கொள்ளவே நேரிடும்......!

–வெட்டியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

GALAXY A

## MOBILE

### ஸ்மார்ட் ஃபோன் வீழ்ச்சி



உலக அளவில் ஸ்மார்ட்போன் சந்தை வளர்ச்சியடைந்து வரும் நிலையில் கடுமையான போட்டித் தன்மையும் அதிகரித்துள்ளது. இந்நிலையில் அடுத்து வரும் சில வருடங்களில் ஸ்மார்ட்போன்களின் விலை குறையும் என இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு வரும் ஐ.டி.சி. ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

### அப்பிள் நன்கொடை



02.12.2014 அன்று எயிட்ஸ் நோய்க்கான விழிப்புணர்வு தினமாக உலகெங்கிலும் அனுஷ்டிக்கப்பட்டது. இதற்கு அப்பிள் நிறுவனம் தனது ஒவ்வொரு நிலையங்களிலிருந்தும் விற்பனை செய்யப்பட்ட சாதனங்கள் மூலம் பெறப்பட்டா இலாபத்தில் ஒரு தொகையை நன்கொடையாக வழங்கியிருந்தது. அத்துடன் தனது நிறுவனத்தில் உள்ள லோகோவை சிவப்பு நிறத்தில் மாற்றியமைத்திருந்தது.

இதேவேளை எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய RED எனும் அப்பிளிக்கேஷனை உருவாக்கி iOS அப்பிளிக்கேஷன் ஸ்டோரினூடாக தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### GALAXY A

சம்சுங் நிறுவனம் S தொடர் கைப்பேசிகளிலிருந்து தற்போது A தொடர் கைப்பேசிகளை வடிவமைத்து அறிமுகப்படுத்துவதில் ஆர்வம்காட்டி வருகின்றது. இதன் அடிப்படையில் Samsung Galaxy A7 எனும் புதிய ஸ்மார்ட் கைப்பேசி வடிவமைக்கப் பட்டுள்ளது.

Samsung GALAXY A7



இதன்படி 5.2 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய தொடு திரையினைக் கொண்டு ள்ளதுடன் Qualcomm Snapdragon 615 Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, சேமிப்பு நினைவகமாக 16GB கொள்ளளவு என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவை தவிர 12 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 4.7 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பனவும் தரப்பட்டுள்ளன.

## INFOMATION TECHNOLOGY

### விண்வெளி தோல்வியா!?



விண்வெளிக்கு விண்வெளி ஆய்வாளர்களை அனுப்பி ஆய்வுகளை மேற்கொள்ளுதல் என்பதற்கு அப்பால், அங்கு மனிதக் குடியேற்றங்களை நிறுவுதல், சுற்றுலாத் தலங்களை அமைத்தல் போன்ற விடயங்களை முன்னெடுப்பதற்கான சாத்தியங்கள் குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றன. புவியின் மேற்பரப்புப் போன்று ஏனைய விண்பொருட்களின் மேற்பரப்புக்கள் மனித வாழ்விற்கு உகந்தவையாகக் காணப்படவில்லை. அம்மேற்பரப்புக்களில் உயிரினங்கள் வாழ்வதற்கேற்ற உவப்பான காலநிலை இல்லை எனவும் தெரிய வருகின்றது.

### தூக்க மயக்கமா!! – விழித்தெழ



வெளிநாடுகள் பலவற்றில் இவ்வாறான இலத்திரனியல் உபகரணங்கள் இருக்கின்றன. இருப்பினும் மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து உருவாக்கியுள்ள புதிய இலத்திரனியல் பொறிமுறையின்படி கமெரா வாகனத்தின் சாரதி இருக்கைக்கு முன் பொருத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

தூக்கமயக்கம் ஏற்படும் போது கண் இமை எத்தனை முறை மூடித் திறக்கின்றன, தூக்க மயக்கத்தில் சாயும் சந்தர்ப்பங்கள் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சாரதிக்கு சமிக்ஞைகள் மூலம் உணர்த்தப்படும் வகையில் இந்த பொறிமுறையை மாணவர்கள் உருவாக்கியுள்ளனர்.

## OTHER

### அன்லொக் செய்ய

அப்பிளின் மொபைல் சாதனங்களில் தரப்பட்டுள்ள TouchID தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி அவற்றினை லாக் செய்யவும், அன்லாக் செய்யவும் புதிய அப்பிளிக்கேஷன் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. FingerKey எனும் இப்புதிய அப்பிளிக்கேஷன் 256-bit AES என்கிரிப்ஷனை (Encryption) அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப் பட்டுள்ளது.


### கணனியையும் தாக்கும் எபோலா



எபோலா வைரஸ் பற்றிய போலியான தகவல்கள், இமெயில்கள் மூலம் உலகெங்கும் வலம் வருகின்றன. அத் தகவலில், எபோலா பற்றி உலக சுகாதார நிறுவனம் ஓர் அறிக்கையினைத் தந்துள்ளது, இதை அவசியம் படியுங்கள், மற்றவர்களுக்கும் பரப்புங்கள் என்ற எச்சரிக்கை செய்தி தரப்பட்டுள்ளது.

அதைப் படிக்க லிங்க் ஒன்றும் தரப்படுகிறது, இதனை கிளிக் செய்தால் உடனே மால்வேர் ஒன்று உங்கள் கணனியை பாதித்து அஞ்சல் வழியாக இன்னொருவருக்கு அனுப்புகிறது. அதில் உங்கள் கணனியின் பாஸ்வேர்ட், வங்கிக் கணக்கு எண், அதற்கான பாஸ்வேர்ட் எண், கிரெடிட் கார்டு எண் என அனைத்து தனி நபர் தகவல்களும் செல்கின்றன.

### Razer Nabu



ஸ்மார்ட் கைப்பேசிகளுக்கு பதிலாகவும், உடல் ஆரோக்கியத்தைப் பேணவும் உதவும் வகையில் Razer Nabu ஸ்மார்ட் கைப்பட்டி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் கைப்பட்டி கடந்த 2ம் திகதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. Android 4.3 இயங்குதளம் அல்லது அதற்கு பின்னரான பதிப்புக்களில் செயற்படக்கூடிய இச்சாதனமாது iOS, மற்றும் Android சாதனங்களுடன் இணைத்து பயன்படுத்த முடியும்.

### கணனியிலும் வாட்ஸ் அப்

WhatsApp

ஸ்மார்ட் போன் வைத்து இருப்பவர்கள் பெரும்பாலும் வாட்ஸ்- அப் இல்லாமல் இருக்க மாட்டார்கள். அதே சமயம் கணனி பயன்பாட்டிலும் கூட வாட்ஸ் அப்பை எதிர்பார்க்கலாம். கணனியிலும் வாட்ஸ்- அப் பதிவிறக்கம் செய்யலாம்.

1. கணனியில் வாட்ஸ் - அப் பயன்படுத்த முதலில் bluestacks வேண்டும். அதனால் இந்த ஆண்டிராய்டு எமுலேட்டரை முதலில் பதிவிறக்கம் செய்து வைத்து கொள்ள வேண்டும்.
2. பதிவிறக்கம் செய்த bluestacks ஐ கணனியில் இன்ஸ்டால் செய்ய வேண்டும்.
3. bluestacks இன்ஸடலேஷன் முடிந்தவுடன் ஸ்டார்ட் மெனு சென்று ஸ்டார்ட் bluestacks என்று டைப் செய்து க்ளிக் செய்ய வேண்டும்.
4. ப்ரோகிராம் லோட் ஆனதும் சர்ச் பாக்ஸ் சென்று வாட்ஸ்-அப் மெசஞ்சர் என்று டைப் செய்து க்ளிக் செய்ய வேண்டும்.
5. வாட்ஸ் அப் அப்ளிகேஷன் பதிவிறக்கம் ஆனதும் அதை ரன் செய்யுங்கள்.
6. அடுத்து உங்க மொபைல் நம்பர் மற்றும் லொகேஷனை வாட்ஸ்-அப்பில் என்டர் செய்யுங்கள்.
7. உங்க மொபைல் நம்பர் வெரி.:.பை ஆனதும் உங்க கணினியில் வாட்ஸ்-அப் பயன்படுத்த ரெடியாகி விடும்.

## குறுக்கெழுத்து புதிர் 038

முடிவுத் திகதி : 11.12.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | க | 3 | | | 4 | 18 ச | |
| | | ■ | வ | 19 | ■ | த | | ■ |
| ■ | 5 | ம | | | ■ | | | 20 |
| 6 | ன் | 7 | | | | | 8 | |
| | ■ | ■ | ■ | 21 | ■ | 9 | ம் | |
| 10 | | | 22 | | ■ | | 11 | டி |
| 12 வ | | | | 13 | 23 | | | 24 |
| | 14 | | | ■ | ன | ■ | ம் | |
| 15 | ண் | | 16 | த் | | 17 | | |

### இடமிருந்து வலமாக

1. தச்சுத் தொழிலாளர்களின் பாதுகாவலர்.
2. கைதிகளுக்கு வழங்கப்படும் தண்டனைகளுள் ஒன்று - குழம்பியுள்ளது.
3. ஒருவரின் ஆதிக்கத்தின் கீழ் வாழ்பவர்.
4. வித்தியாசமான மூக்கைக் கொண்ட நடிகர்.
5. சேற்றில் மலரும் பூ
6. நிறையவற்றைக் குறிக்கும் பொதுச்சொல்.
7. விளையாடுவதற்குரிய இடம்.
8. ஒருவர் மீது வீணாக சுமத்தப்படுவது
9. ஏழு நாட்களைக் கொண்டது - திரும்பியுள்ளது.
10. இயக்குனர் ஒருவர்
11. தோல்வி ஒவ்வொன்றும் வெற்றிக்கான இது ஆகம்.
12. முருகக் கடவுள் காதல் வயப்பட்டது
13. ஒவ்வொரு பிறந்த நாளின் போதும் அதிகரிப்பது
14. கண்ணகி எரித்தது
15. ஏழு சுடு நீர் கிணற்று காணப்படும் இடம்.
16. வயதானவர்கள் செல்லும் சுற்றுலா இதுவும் ஆகலாம்.
17. தற்காலத்தில் இலங்கையில் அதிகளவில் நிறுவப்படும் வணக்கஸ்தலம் - திரும்பியுள்ளது.

### மேலிருந்து கீழாக

1. நெருப்பு தருவது
2. முஸ்லிம்கள் சாத்தானை இவ்வாறு அழைப்பர்
3. விதைகளைக் கொண்டுள்ள இதை சமைக்கப் பயன்படுத்துவர்
4. இசைக்கருவிகளில் ஒன்று
06. இது சொல்லும்
8. நூல் கொண்டு விளையாடு விளையாட்டுக்களில் ஒன்று
9. இது இருக்குமிடத்தை வைத்து பெறுமதி கூற முடியாது - குழம்பியுள்ளது
10. தொடர்ந்து குடிப்பதனால் நேரடியாக பாதிக்கப்படுவது
14. விவசாயம் செய்யத் தொடங்கும் முன் இதனை பரிசீலிக்க வேண்டும்
18. பாம்பின் ஒத்த சொல்
19. சைவ சமயத்தினர் இறந்தோரை ............ செய்வர்
20. ஆடிகளில் ஒன்று
21. இது மிதித்து அருந்ததி பார்ப்பர் - குழம்பியுள்ளது
22. சுவாமிக்கு விசிரப்படுவது
23. பாரமானதை இவ்வாறும் கூறலாம்

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ.*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

### புதிர் 037 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கா | 18 வ | ல் | 19 து | றை | ■ | 2 ச | தி | ■ |
| 3 து | ப் | 20 ப | ட் | டா | ■ | ந் | 4 சே | னை |
| ■ | 5 பு | ட் | ட | ம் | ■ | 6 அ | ர | ன் |
| 7 அ | ட் | டி | கை | ■ | 8 கா | ம | ன் | ■ |
| 9 லை | க் | கா | 10 மு | க் | 21 தி | 11 த | ண் | டு |
| 12 சி | வ | தா | னு | ■ | ர | ம் | ■ | ■ |
| த் | ■ | ■ | 13 வி | ப | 14 வி | ர | க் | 22 தி |
| து | ■ | ■ | 15 த | ன் | ய | ன | ■ | க |
| 16 அ | த் | து | வை | த | ம் | 17 சு | வா | தி |

### பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

*செல்வன். வீ. மதுஷன்*
*1ஏ. டொக்யாட் வீதி, திருகோணமலை.*

*செல்வி. எம். தனுஷா*
*21. 4ம் குறுக்குத் தெரு, திருகோணமலை.*

*செல்வி. எம். எச். அஷாம்*
*201. நிலாவெளி, திருகோணமலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Happy B'day to Rajini



லிங்கா படம் ரஜினியின் பிறந்த நாளான டிசம்பர் 12-ந் தேதி ரிலீசாகிறது. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதனால் ரசிகர்கள் இரட்டிப்பு சந்தோஷத்தில் இருக்கிறார்கள். ரஜினி பிறந்த நாளையும், லிங்கா படம் ரிலீசையும் ஒன்றாக கொண்டாட தயாராகி வருகிறார்கள்.

தியேட்டர் உரிமைகள், வெளிநாட்டுக்கான உரிமைகள் என ரூ.200 கோடி வரை வியாபாராமாகி இருப்பதாக கூறப்படுகிறது.

## கன்னத்தில் அறை - கவுர் கான்



தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிவரும் கவுர் கான் சமீபத்தில் மும்பை பிலிம் சிட்டியில் ஒரு நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். அப்போது முகமது மாலிக் என்ற ரசிகர் மேடையில் திடீரென ஏறி அவரை கன்னத்தில் ஓங்கி அறைந்தார். இஸ்லாமிய பெண்ணாக இருந்து எப்படி இவ்வாறாக அரைகுறையுடன் நடனமாடுகிறீர்கள் என்று திட்டியுமுள்ளார். உடனடியாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அவரை பிடித்து பொலிசில் ஒப்படைத்துள்ளனர்.

## மீண்டும் ரசிகர் மன்றம்

### அஜித் தெரிவிப்பு



கலைத்த தனது ரசிகர் மன்றங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார் அஜித். மீண்டும் மன்றம் ஆரம்பித்தால் அதை எப்படி நடத்த வேண்டும், மன்றத்தில் செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என கூடவே பல நிபந்தனைகளையும் போடப் போகிறாராம் அதில் உறுப்பினர்களாக உள்ள ரசிகர்கள் நற்பணியை மட்டுமே செய்ய வேண்டும். எந்தவொரு அரசியல் கட்சிக்கும் மன்றம் சார்பிலோ தனிப்பட்ட முறையிலோ ஆதரவு அளிக்கக் கூடாது என்றும் தெரிவிக்கவிருப்பதாக தெரிய வந்துள்ளது.

## விஷால் - காஜல் ஜோடியா?



பாண்டியநாடு, நான் சிகப்பு மனிதன் போன்ற படங்களின் பின் 3வது முறையாகவும் விஷால், லட்சுமி மேனன் இணைய இருந்தனர். இருந்த போதும் தற்போது நடைபெற இருக்கும் பிளஸ் 2 தேர்வை மேனன் எழுத இருப்பதால் காஜல் அகர்வால் ஒப்பந்தம் செய்யப்பட்டதாக தெரிகிறது.

## பாடகியாகும் மேனன்

ஒரு ஊர்ல ரெண்டு ராஜா படத்தில் ஒரு பாடலை பாடிய அவர் அனைவரின் பாராட்டையும் பெற்றார். இப்போது பிரந்தின் "சாஹசம்" படத்தில் ஒரு பாடலை பாடியுள்ளார்.தமன் இசையில், மதன் கார்க்கி வரிகளில் அந்த பாடலை பாடியுள்ள லக்ஷ்மி மேனன், வருங்காலத்தில் நல்ல வாய்ப்புகள் வந்தால் பாடுவதை தொடரப்போவதாக தெரிவித்துள்ளார்.

## கவர்ச்சிக் கன்னி சென்சாரில்



லக்ஸ் பாப்பா என செல்லமாக அழைக்கப்பட்ட கவர்ச்சியில் கொடி கட்டிப் பறந்த புளோரா சைனி, மும்பையில் சென்சார் போர்டில் உறுப்பினராக நியமனமாகி பாலிவுட் படங்களுக்கு கத்தரி போட்டுக்கொண்டிருக்கிறார். விஷயத்தை கேள்விப்பட்டவர்கள் கவர்ச்சி நடிகையான இவர் சென்சாரில் எப்படி இடம்பிடித்தார் என்கிறார்கள். இவருக்கு என்ன சினிமா தெரியும் என்றும் புலம்புகிறார்கள்.




## பூ நடிகை - தளபதி கூட்டு

தளபதியை எப்படியாவது தனது தயாரிப்பில் நடிக்கவைத்துவிடவேண்டும் என்பது பூ நடிகையின் விருப்பம். சமீபத்தில் உலக நாயகனின் பிறந்தநாள் பார்ட்டியில் தளபதி நடிகர் பங்கேற்றார். அப்போது பூ நடிகை தளபதியிடம் சம்மதம் வாங்கியதாக தெரிகிறது.

# சினிமுரசு

## திரை விமர்சனம்

### இயக்குனர் எம்.பி.கோபியின் மகேஷ், ஆருஷி நடிக்கும் வேல்முருகன் போர்வெல்ஸ்



வேல்முருகன் போர்வெல்ஸ் என்ற பெயரில் கிராமம் கிராமமாக சென்று போர் போடும் தொழில் செய்து வருகிறார் கஞ்சா கருப்பு. இதில் நாயகன் மகேஷ், பாண்டி மற்றும் சிலர் வேலை செய்கிறார்கள். ஒருநாள் உள்ளூர் டி.வி.யில் நாயகி ஆருஷியை பார்க்கிறார். மகேஷ் எப்படியாவது அந்த பெண்ணை திருமணம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்கிறார். இந்நிலையில் கஞ்சா கருப்பு வெளியூர் செல்கிறார். இதனால் பொறுப்புகளை மகேஷிடம் ஒப்படைத்து, பல இடங்களில் போர் போட வேண்டியது உள்ளது என்று அதன் விவரங்களையும் கொடுத்து விட்டு செல்கிறார்.

ஆனால் உடன் வேலை செய்யும் பாண்டியோ நாயகியின் கிராமத்தில் தண்ணீர் பற்றாக்குறை உள்ளது. அங்கு சென்று இலவசமாக போர் போட்டு கொடுத்தால் அந்த கிராமத்து மக்களிடம் நல்ல பெயர் கிடைக்கும் என்று கூறி அழைத்து செல்கிறார். நாயகனும் அங்கு போர் போட்டு தண்ணீர் எடுத்து உடனே கிடைக்கும்படி செய்கிறார். அதனால் தண்ணீர் பிடிப்பதில் பெண்களிடையே சண்டை ஏற்பட்டு, அது ஊர் கலவரமாக மாறுகிறது. அந்நேரத்தில் ஊர் தலைவரான நாயகியின் அப்பா ஊரை சமாதானப்படுத்தி, இதற்கு காரணமாக இவர்களையும், இவர்களது பொருட்களையும் ஊரைவிட்டு வெளியே விடாமல் ஊர் மக்களுக்கு சேவை செய்ய வைக்கிறார். இறுதியில் ஊர் மக்களிடமிருந்து நாயகன் தப்பித்தாரா, காதலே இல்லாத ஊரில் நாயகியிடம் காதலை சொல்லி இணைந்தாரா இல்லையா என்பதே மீதிக்கதை.



நாயகன் மகேஷ் மிக யதார்த்தமாக நடித்து ரசிக்க வைக்கிறார். நாயகி ஆருஷி கிராமத்து பெண்ணாக தாவணியில் திரையில் அழகாக இருக்கிறார். இயக்குனர் எம்.பி.கோபி கிராமத்தில் நடக்கும் எதார்த்தமான கதையை மிகவும் அழகாக திரைக்கதை அமைத்து படமாக்கியிருப்பது பாராட்டத்தக்கது.

மொத்தத்தில் வேல்முருகன் போர்வெல்ஸ் 'கலகலப்பு'.

## சினிமா கிசு கிசு



திருமணத்துக்கு பிறகு சினிமாவில் நடிப்பதை குறைத்து கொண்ட தேவயானிக்கு தற்போது 40 வயதாகிறது. வீட்டில் கணவர், குழந்தைகளை கவனித்து வந்த அவர் திடீரென ஆசிரியை வேலையில் சேர்ந்து இருக்கிறார்.

கோயில் கட்டும் அளவுக்கு குஷ்புவுக்கு ரசிகர்கள் உண்டு என்ற காலம் போய் தற்போது திட்டி தீர்க்கும் அளவுக்கு ரசிகர்கள் சேர்ந்து விட்டனர்.

ரோஹித் ஷெட்டி இயக்கத்தில் ஷாருக்கான் நடிக்க உள்ள புதிய படத்தில் ஐஸ்வர்யாராய் நாயகியாக நடிக்க உள்ளாராம். முன்னதாக இப்படத்தில் கஜோல் நடிக்க உள்ளதாக செய்தி வெளியானது குறிப்பிடத்தக்கது.

எதற்கெடுத்தாலும் துணிச்சலாக விமர்சனம் செய்யும் நடிகைகளில் ஒருவர் சமந்தா. இவரிடம் ஹீரோ, ஹீரோயின் இருதரப்புமே எச்சரிக்கையுடனே பழகி வருகின்றனர்.

இதுவரை சராசரியான வாலிபன், அப்பாவியான கதாபாத்திரங்களில் நடித்த ஜெய் புகழ் படத்தில் ஆக்சன் வேடம் ஏற்று நடிக்க இருக்கிறார். இது ஒரு ஆக்சன் மற்றும் த்ரில்லர் கலந்த படமாக இருக்கும்.

எனது தந்தை சக்தி கபூர் 700 படங்களுக்கு மேல் நடித்துள்ளார். இது ஒரு சாதனை, அசாத்தியமானது. எனவே அவருக்கு கின்னஸ் சாதனை அமைப்பு கின்னஸ் சாதனை படைத்தவர் என்ற அங்கீகாரத்தை வழங்க வேண்டும் என்று நடிகை ஷ்ரத்தா கபூர் கோரிக்கை விடுத்துள்ளார்.

- தனது உறவினரை திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தி 15 வயது பெண்ணை கடத்தியதாக ஏற்கனவே சனா கான் மீது குற்றம்சாட்டப்பட்டது. போலீசிலும் புகார் அளிக்கப்பட்டது. இதனை சனாகான் மறுத்துள்ளார்.
- ட்விட்டர், .:பேஸ்புக்கில் போலி கணக்குகள் பெருகி வருவதால், அதிகாரப்பூர்வமாக சமூக வலைதளங்களில் இணைந்தார் நடிகர் சூரி.
- அஜீத் தன்னை வைத்து வீரம் படத்தை எடுத்த சிவாவின் இயக்கத்தில் மீண்டும் நடிக்கிறார். அந்த படத்தில் அஜீத் ஸ்லிம்மாக இருக்க வேண்டுமாம். அதனால் அவர் மூன்று வேலையும் காய்கறிகள், பழங்களை தான் சாப்பிடுகிறாராம்.
- ஹன்சிகா, நயன்தாராவைத் தொடர்ந்து உதயநிதியின் 'கெத்து' படத்தில் மூன்றாவது நாயகியாகியிருக்கிறார் எமியை. தனது 'ரெட் ஜெயண்ட் மூவீஸ்' நிறுவனம் மூலம் அவரே இப் படத்தை தயாரிக்கிறார்.
- நடிகர் சிம்பு நடிப்பில் டிசம்பர் மாதம் வெளியாகவிருந்த வாலு திரைப்படம், பிப்ரவரி மாதம் வெளியாகும் என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இது நம்ம ஆளு ஏப்ரல் மாதமளவில் வெளியாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் - 30

# தமிழர் நாம் சரிவை நோக்கிச் செல்கின்றோமா?

(வி.என்.சந்திரகாந்தி)



மனித இனம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்றது. ஆதிகாலத்தில் மக்கள் பல்வேறு தேசங்களிலும் நீர் நிலைகளை அண்டியும் குழுக்கள் குழுக்களாகவும் வாழ்ந்தனர். அதனால் பல சமூகங்கள் உலகில் தோற்றம் பெற்றன. குளிர்பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் நல்ல உடல் வளர்ச்சி பெற்றவர்களாகவும் வெள்ளை நிறமுடையவர்களாகவும் காணப்பட்டனர். வெப்பமான பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள் வலிமையான உடல் வளர்ச்சியும் கறுப்பு நிறமுடையவர்களாகவும் காணப்பட்டனர். இது ஒரு பொதுவான கண்ணோட்டம்தான். ஆனால் தமிழர் நாம் இரண்டாம் பிரிவை சேர்ந்தவர்கள் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.



இந்திய நாட்டின் தென் பகுதியில் நாவலந்தீவு என்னும் பெரும் நிலப்பரப்பு இருந்தது. அப் பகுதியில் தோன்றிய மக்களே தமிழர்கள் ஆவர். தமிழகத்தின் தென்பகுதி தற்போதுள்ள குமரிமுனைக்கு பல நூறு கிலோமீற்றர் தெற்கே விரிந்து கிடந்தது. உலகிலேயே மிகவும் நாகரீக முன்னேற்றம் அடைந்த மக்களாக அவர்கள் வாழ்க்கை அமைந்திருந்தது. தென்மதுரை கடல் கொந்தளிப்பால் மூழ்குண்டு போனது. உலகளாவிய மட்டத்தில் தற்போது அங்கு ஆய்வுகள் நடக்கின்றன. தமிழனே உலகின் முதல் தோன்றல் என்று அவ் ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

தென்பகுதியிலிருந்து தமிழ் மக்கள் சிறிதுசிறிதாக இந்தியாவின் வடமேற்கு பகுதியான சிந்து சமவெளி வரை சென்று குடியேறினர். சிந்து சமவெளி நாகரீகம் உண்மையில் தமிழர் நாகரீகம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். மொகஞ்சதாரோ கரப்பா நாகரீகத்துக்கும் சிந்துவெளி நாகரீகத்துக்கும் இடையே தொடர்புகள் உண்டு. இரண்டுமே கி.மு 2500 வருடங்கள் பழமைவாய்ந்தன.

இன்று தழிழர் பிரதானமாக இந்தியாவின் தமிழகத்திலும் இலங்கையின் வடக்குகிழக்கு பகுதியிலும் வாழ்ந்தாலும் பொருளாதார நோக்கங்களுக்காக உலகின் பல நாடுகளிலும் குடியேறி பரவி வாழ்கிறார்கள். அவர்கள் வாழும் நாடுகளில் உள்ள மொழிகளை கற்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் அவர்களுடைய பிள்ளைகள் இருக்கின்றார்கள். கல்வியானது தொழில் வாய்ப்பை நோக்கமாக கொண்டதாக உள்ளதுடன் கலப்பு திருமணத்திற்கும் வழிவகுப்பதாக உள்ளது. இவையெல்லாம் குறுகிய நோக்கங்களை கொண்டிருக்கிற தேயன்றி எமது சமூக மேன்மைக்கானவை அல்ல.

தமிழ் மொழிக்கு இவ்வகையில் ஏற்பட்ட வீழ்ச்சியை வெறுமனே அசட்டை செய்யமுடியாது.

தமிழ் மொழி பாரிய இலக்கிய வளத்தை உடையது. ஒரு சமூகத்தின் நாகரீகத்தை இலக்கியம் காலம் காலமாக எடுத்தியம்பவல்லது. தமிழ்ச்சங்கம் அமைத்து வளர்ச்சி கண்ட தமிழ் மொழி நற்றிணை முதல் அகநானூறு, புறநானூறு வரையான எட்டுத்தொகை நூல்களையும் திருமுறுகாற்றுப்படை முதல் மலைபடுகடாம் வரையான பத்துப்பாட்டு நூல்களையும் திருக்குறள் முதல் நாலடியார் வரையான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களையும் எமக்கு தந்துள்ளது. ஐம்பெரும் காப்பியங்கள் தழிழுக்கு பெரும் அணிசேர்ப்பன.

கால ஓட்டத்தில், தமிழகத்திலும் சரி தமிழ் ஈழத்திலும் சரி கனதியான இலக்கியங்கள் தோன்றவில்லை. ஆங்கிலேயர் வருகையின் பின் தோன்றிய இலக்கிய வகைகளான நாவலும் சிறுகதையும் பெரிதாக சாதிக்கவில்லை. சரித்திரம் படைக்கவில்லை. வெறும் விமர்சனங்களே அவற்றை தூக்கி வைத்திருக்கின்றன. புலம் பெயர்ந்தோர் இலக்கியம் தற்காலிகமானதே. ஆங்கிலத்தில் போல அறிவு நூல்கள் தமிழில் தோன்றவில்லை. விஞ்ஞானம் வளர்ச்சிகண்ட அளவுக்கு தமிழ் மொழியில் கலைச்சொற்கள் பூரண வளர்ச்சி பெறவில்லை. சொல்லப்போனால் 'மொபைல்', 'ரீ.வி' ,'ஹெலி', 'வெப்சைட்', 'பேஸ்புக்' போன்ற ஏராளமான சொற்களுக்கு நாம் பேச்சுவழக்கில் அடிமைப்பட்டுள்ளோம்.

விஞ்ஞானத்தில் எமது வளர்ச்சி என்ன? பூகோளமயப்படுத்தலில் எமது பங்களிப்பு என்ன?

அடுத்து நாம் தழுவியுள்ள இந்துமத கலாச்சாரம் உலகத்தில் தமிழர்கள் சார்பில் தனி முத்திரையை பதித்திருந்தது. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்புராணம், திருப்புகழ், திருப்பல்லாண்டு இன்னும் தமிழர் சிந்தனையின் ஆற்றலை உணர்த்துகின்றன. இராமகிருஷ்ணர், விவேகானந்தர், ரமணமகரிஷி ஆகியோருக்கு பின் இன்று இந்துக்கோயில்கள் வெறும் வியாபார ஸ்தலங்களாகிவிட்டன. இந்துமத கலாச்சாரத்தை வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

சுவாமிகள் என்று வேடம் தரித்துக்கொண்டு நடிகைகளை ஆச்சிரமங்களுக்கு அழைக்கும் நிலைதான் இன்று நீடிக்கின்றது!

அடுத்து அரசியலை எடுப்போம்...உலகத் தமிழர்களின் தலைவர் என்று கொண்டாடப்பட்ட தலைவரும் தமிழகத்தில் இருக்கிறார். மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற ஆனால் உயர் நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்ட அரசியல் தலைவியும் தமிழகத்தில்தான் இருக்கின்றார்.

ஒரு கணம் கண்களை மூடிக்கொண்டு சிந்தித்துப் பாருங்கள். இவர்களின் தலைமைத்துவத்தால் தமிழினம் மீட்சிபெற ஏதாவது வழி பிறக்குமா? தமிழக அரசியல், தேர்தலை மையமாகக் கொண்டது. குட்டையை குழப்புவதுதான் பல அரசியல்வாதிகளினதும் வெளிப்பாடாக இருக்கிறதேயல்லாமல் ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள் அரிதிலும் அரிதே! அதைவிட பணம் புரட்டுவதும் சொத்து சேர்ப்பதும் குடும்ப அரசியலும் தான் அங்கு நடக்கின்றது. ஒரு நூற்றாண்டு போனாலும் இப்படியான தமிழர்களால் தமிழ் சமூகத்திற்கு என்று ஒரு விமோசனத்தை ஏற்படுத்த முடியுமா?

அடுத்து நாம் என்ன செய்கின்றோம் என்று பார்ப்போம். எமது இனம் சுதந்திரமாக வாழ்வதற்கு நாம் மூன்று தசாப்தகால முயற்சி எடுத்தோம். தமிழ் சமூகம் கால் ஊன்றி நிற்க, உலகில் ஒரு பிரதேசத்தை உருவாக்க இதுவரை முடிந்ததா? பலவெற்றிகளை சம்பாதிக்கும் திறன் இருந்தும் கூட அவற்றை சேமித்து நிரந்தர வைப்பில் இட எம்மால் முடிந்ததா? சந்தர்ப்பங்களை நழுவவிட்டோம். எம்மினம் எதிரியால் அழிந்தது ஒரு பக்கம் போக நாமே எம்மினத்தையும் எம்மினத்தின் வளங்களையும் சக்தியையும் அழித்தோம். எமது பிடிவாதம் காரணமாகவும் பிறர் ஆலோசனைக்கு செவிமடுக்காமை காரணமாகவும் இன்று அரைக்கிணறு தாண்டியநிலையில் உள்ளோம். எல்லாமே தலைவிதி என்றாகி விட்டது போல இருக்கின்றதா? சரிவை நோக்கி செல்லும் நாம் எப்படி அதில் இருந்து மீட்சிபெறலாம் என பார்ப்போம்.

அண்மையில் ஒரு செய்தியை படிக்கமுடிந்தது. சீனதேசம் அயல் நாடுகளுடன் சுமூகஉறவை பேணுவதால்தான் அமெரிக்காவை விட சகலதுறைகளிலும் உயர்ச்சியடைய முடிந்ததாக அச்செய்தி கூறுகின்றது. குறைந்தது நாம் வடக்குகிழக்கில் சுமூகநிலையை தோற்றுவிக்கவேண்டும். இராணுவமும் பொலீசும் இன்று மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றார்கள். சூதாட்ட அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். சமூகத்திற்காக உழைப்பவர்களையும் கைத்தொழில், விஞ்ஞானம், பொறியியல் மொழி, மத வளர்ச்சிக்காக உழைப்பவர்களையும் இனம் கண்டு ஊக்குவிக்க வேண்டும். அப்போதுதான் எமது சமுதாயம் உயர்ச்சி பெறும்!

---

ஒரு மனிதன்... ஒரு வாழ்வு... அவன் மனசாட்சி...

# சாதாரணமானவனின் மனது

சஞ்சயன் செல்வமாணிக்கம்

இன்றும் நிலக்கீழ் ரயிலின் தாலாட்டுப் போன்ற அசைவில் என்னை மறந்திருந்தேன். கையில் சேகுவேராவின் மோட்டார் சைக்கில் குறிப்புகள் இருந்தும் மனம் அதில் லயிக்க மறுத்தது. வாசிக்க வேண்டும் என்று நான் விரும்பினாலும் மனது என் விருப்பத்திற்கு எதிராக இயங்கிக்கொண்டிருந்ததால் புத்தகத்தை மூடிவிட்டு சுற்றாடலை அவதானித்துக் கொண்டிருந்தேன்.

எனக்கு முன் இருக்கையில் ஒருவர் தன்னை மறந்து ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார். நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவரின் வலது ஆள்காட்டி விரல் மூக்குக்குள் நுளைந்து, சுரங்கம் தோண்டியது. அந்த விரலை தன்னை மறந்த நிலையில் அப்படியே வாய்க்குள் வைத்தார், சூப்பினார். மனிதருக்கு 35 வயதிருக்கும். மிக அழகாய் உடுத்திருந்தார். மனிதர்களால் நிரம்பியிருக்கும் நிலக்கீழ் தொடரூந்தில் இப்படி செய்கிறாரே என்று யோசித்துக் கொண்டிருக்கையில் கண்ணை மெதுவாய் நிமிர்த்தி தன்னை யாராவது கவனிக்கிரார்களா என்று பார்த்தார். நான் அவரைப் பார்த்துக் கொண்டிருப்பதை அவர் பார்க்க முதல் கண்களை தாழ்த்திக் கொண்டேன். தன்னை எவரும் கவனிக்கவில்லை என்று ஆறுதல்பட்டிருப்பாரோ?

இப்படித்தான் நிலக்கீழ் தொர்டருந்தில் மூக்கு குடைவதில் இருந்து சில குறிப்பிட முடியாத இடங்களை கண்மூடி சொறிந்து தம்மை மறப்பவர்கள் வரை காணக் கிடைக்கிறது.

அன்றொரு நாள் இரவு 11 மணிபோல் வீடு நோக்கி வந்து கொண்டிருக்கிறேன். இருவர் தம்மை மறந்து ஏகத்துக்குமாய் முத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள். பயப்படாதீர்கள்.... ஆணும் பெண்ணும் தான். வயது 20க்குள் இருக்கும். அவர்களின் வேகம் என் அடிவயிற்றை கலக்கிக் கொண்டிருந்தது. இருப்பினும் நிலமை மோசமாவதற்குள் அவர்கள் இறங்கிக் கொண்டார்கள். தொடருந்தால் இறங்கும் போதும் முத்த மழை முடிந்ததாயில்லை. அருகில் இருந்தவர் அர்த்தத்துடன் புன்னகைத்தார். நானும் சிரித்தேன்.

நான் தொடருந்தில் பயணிக்கும் போது புன்னகைக்கும் மனிதர்கள், தனக்குத் தானே பேசிக் கொள்பவர், யாரையோ திட்டிக் கொண்டிருப்பவர், தன்னை மறந்து அழுபவர்கள் என்ற பலரையும் கண்டிருக்கிறேன். ஒவ்வொரு தொடரூந்தும் எத்தனை எத்தனை கதைகளை சுமந்து கொண்டு மௌனமாய் ஓடிக்கொண்டிருக்கிறது, வாழ்க்கையைப் போல.

புகையிரத நட்புகள் அல்லது இரயில் சினேகங்கள் என்று கூறப்படும் நிகழ்வுகளுடன் எனக்கும் சில அனுபவங்கள் உண்டு. அதன் சுவைகளையும் சுமைகளையும் அறியக் கூடியதாயிருக்கிறது.

நானும் சில வருடங்களுக்கு முன் ஒருத்தியை சந்தித்தேன். 15 நிமிட பயணத்துக்குள் நண்பர்களாகிப் போனோம். அவளின் பார்வையும், துருதுருக்கும் கண்ணும், மொழியின் இனிமையும் அவளை மறக்க முடியாதாக்கியிருக்கிறது.

ஏறத்தாள தினமும் அவளை சந்திப்பேனா என்ற நப்பாசையுடன் தான் தொடரூந்தில் ஏறுகிறேன். இன்று வரை மீண்டும் நாம் சந்தித்துக் கொள்ளவில்லை. நாம் சந்திக்கும் சந்தர்ப்பம் இல்லை என்றும் சொல்வதற்கில்லை.

அவள் அப்படி ஒன்றும் பெரிய பெண் இல்லை. அவளுக்கு 4 - 5 வயதிருக்கலாம். பனிக்காலத்தில் ஒரு நாள் காலை நான் நின்றிருந்த புகையிரத நிலையத்தில் நின்றிருந்தாள், தனது தமிழ்ப் பெற்றோருடன். அழகான உடை. பனிக்கால உடையில் அவளின் அழகு பெரும் அழகாயிருந்தது. அழகான தொப்பி, அதற்கேற்ற பனிக்காலத்து மேலாடை, பனிக்கரடியின் கால்கள் போன்ற அழகான சப்பாத்து. கையிலே சிறு பை என நின்றிருந்தாள். புகையிரதம் வர நாம் ஏறிக் கொண்டோம். அதிஸ்டவசமாய் எனக்கு உட்காருவதற்கு இடம் கிடைக்க, அவள் என்னருகில் தன் தந்தையின் கால்களை கட்டிப்பிடித்தபடியே நின்றிருந்தாள்.

[illegible] சிறு இடம் கொடுத்து உட்காரச் சொன்னேன். அம்மாவை நிமிர்ந்து பார்த்தாள். அனுமதி கிடைத்ததும் அருகிலே உட்கார்ந்து கொண்டாள்.



புகையிரதம் பனியினுள் ஓடிக் கொண்டிருந்தது. நாம் நண்பர்களாகிக் கொண்டிருந்தோம். அவளின் பெயர் கேட்டபோது "கிளவ்டியா" என்று சொன்னாள். எனது நண்பர்கள் இருவருக்கு இதே பெயரில் குழந்தைகள் இருப்பதால் அப் பெயரை இலகுவாய் நினைவில் நிறுத்த முடிந்தது. தான் குழந்தைகள் காப்பகத்திற்கு போவதாயும், தனது உணவுப் பெட்டியினுள் ஒரு சாக்லேட் உண்டு என்றும், அப்பாவுடன் மாலை வீடு வருவதாயும் மழலைத் தமிழும் நோர்வேஜியன் பாஷையும் கலந்தும் சொல்லிக் கொண்டிருந்தாள். அவளின் அழகிலும், மழலை மொழியிலும் என்னை இழந்து போயிருந்தேன். அவளின் பெற்றோர் இடையிடையே என்னை பார்த்து சிரித்தபடி இருந்தனர்.

அவள் இறங்கும் போது கையைக் காட்டியபடியே போனாள். புகையிரதம் நகர ஜன்னலினூடாக கையைக் காட்டினேன். அழகாய் புன்னகைத்து கையசைப்பது தெரிந்தது.

கடந்த முன்று வருடங்களாக, நான் தினமும் பயணிக்கும் தொடரூந்தில் அவளைச் சந்திக்கலாம் என்று நப்பாசை ஏனோ எனக்குள் இருந்து கொண்டேயிருக்கிறது. ஏன் என்ற காரணத்தை தேடுவதை தவிர்த்து, அந்த ஏகாந்தத்துடன் தினமும் பயணிக்கிறேன்.

இன்றைய நாளும் நல்லதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி ஒரு விதி செய்வோம் - பெண்களே!!

...நாட்டு நடப்பு...

கிவுலக்கடவல திருகோணமலை மாவட்டத்தை சார்ந்த மிகவும் பின்தங்கிய சிங்களப் பிரதேசமாகும். அங்கு ஜீவனோபாயமாக மக்கள் விவசாயத்தையே நம்பி இருக்கின்றனர். அன்றிலிருந்து இன்றுவரை முறையான போக்குவரத்து வசதிகளோ அங்கு இல்லை.

ஆஷா அங்குள்ள சிங்கள மகாவித்தியாலயத்தின் க.பொ.த (சாதாரணம்) வகுப்பு மாணவி. அவளின் குடும்பம் விவசாயத்தை நம்பியே வாழ்ந்தது. இன்று எங்கும் தொழில் ரீதியில் போட்டிகள் அதிகரிப்பதால், அவளின் தந்தை விவசாயத்துடன் தனது காணி அருகில் சிறிய தேனீர் கடையொன்றையும் நடாத்தி வந்தார்.

அவர்களின் குடும்பத்தில் மொத்தம் மூன்று பேராக இருந்தாலும் இன்றைய வாழ்க்கை செலவை அவர்களால் சமாளிக்க முடியாதிருந்தது. ஆஷா எப்படியும் ஓர் அரசாங்க தொழிலையே நம்பியிருந்தாள். உயர்தரத்தில் சித்தி கொண்டாலும் பல்கலைக்கழகம் சென்று கல்வி கற்கும் வசதிகள் அவளுக்கு இருக்கவில்லை.


பண்டார இலங்கை தரைப்படையிலிருந்து பாய்ந்து வந்தவன். இரண்டு தடவைகள் மிலிட்டரி பொலிசார் அவனை கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றாலும் அவன் அங்கு ஒழுக்கமாக நடந்து கொள்ளவில்லை. அவனுக்கு எதிராக பல தடவைகள் ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெற்று உரிய தண்டனை வழங்கப்பட்டாலும் அவனை எந்த வகையிலும் திருத்த முடியாதென தீர்க்கமான முடிவுக்கு வந்தார் அங்குள்ள கட்டளை இராணுவ அதிகாரி.

யுத்த காலத்தில் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு இடம்பெற்ற வேளையில் கிவுலக்கடவல பௌத்த விகாரையின் பிரதம தேரரின் சிபார்சின் பேரிலே அவன் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டான். அவன் உண்மையில் நாட்டுப் பற்றுக் காரணமாக அங்கு சேரவில்லை. எட்டாம் வகுப்பு வரை படித்தவனுக்கு இந்த நாட்டில் யார் அரசாங்க வேலை கொடுக்கப் போகிறார்கள்? சமூகத்தில் தனக்கொரு அந்தஸ்து வேண்டும் என்ற நோக்கிலே இராணுவத்தில் சேர்ந்தான். சோம்பேறிகளுக்கு இராணுவத்தில் என்ன! எந்தவொரு படையிலும் இடமில்லை. அந்த சீருடை அணிய வேண்டுமென்ற ஆசையிலும், ஆயுதங்களை கரங்களில் ஏந்த வேண்டுமென்ற அவாவிலுமே அன்று பலர் படைகளில் போய் சேர்ந்து கொண்டனர்.

அவ்வாறே யுத்த காலத்தில் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் பலரும் தங்களுக்கு விருப்பமான ஆயுதக் குழுக்களுடன் போய் சேர்ந்து கொண்டனர். பலர் பலவந்தமாக சேர்த்துக் கொள்ளப்பட்டமையையும் இங்கு சுட்டிக் காட்டுதல் பொருத்தமானதே.

கிவுலக்கடவல பண்டார முன்னாள் இராணுவ வீரன் என்பதால், ஊரில் அவனுக்கு சற்று மரியாதை இருந்தது. இருப்பினும் அவனது தரம் குறைந்த செயற்பாடுகள் அந்த மரியாதையை குறைத்துக் கொள்வதற்கு காரணமாக இருந்தன. அவனது அளவற்ற அட்டகாசத்தை பலர் விரும்பாவிடினும் பயத்தின் காரணமாக அவனின் தீய செயல்களை தட்டிக் கேட்க எவரும் அங்கு முன்வரவில்லை.

பண்டாரவுக்கு அங்கு அரசியல் செல்வாக்கும்



இருந்தது. அவன் இராணுவத்தில் கடமையாற்றியதால் எவரையும் கண்டு அஞ்சும், அடிபணியும், சுபாவம் அவனிடத்தில் அறவே இல்லை. அங்குள்ள உள்ளூர் அரசியல்வாதிகள் அவனை தத்தமது சமூக விரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி வந்ததால் அவன் அங்கு தனிக்காட்டு இராஜாவாக திகழ்ந்தான். நம் நாட்டில் பாரிய குற்றச் செயல்களுக்கு காரணமாக இருப்பவர்களும் அதற்கு துணை போகிறவர்களும் அரசியல் வாதிகளே. தீய செயல்களை கைதட்டி வரவேற்பவர்கள் அச்செயல்களை பாராட்டி அவற்றை இன்னும் மேம்படுத்துபவர்கள் நமது நாட்டில் அன்று கூட அதிகம் பேர் வாழ்ந்தார்கள் என்பதற்கு பல வரலாறுகள் நம் நாட்டில் உள்ளன. காலம் சென்ற முன்னாள் இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வந்த சமயம் அவரை தாக்கிய கடற்படை வீரனை அன்று பலர் பாராட்டினர். அவருக்கு மாபெரும் வரவேற்பும் அவரது ஊரில் கிடைத்தது. முழுநாடே வெட்கி தலைகுனிய வேண்டிய வேளையில் பலர் அவருக்கு புகழாரம் சூட்டினர்.

அன்று பயணிகளுடன் வெளிநாட்டு விமானத்தை கடத்திய சேபால என்பவர் பலராலும் வரவேற்கப்பட்டு பாரிய பாராட்டை நமது நாட்டுமக்கள் அவருக்கு வழங்கி இருந்தனர். இவ்விதமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அதீர செயற்பாடுகளை தென் பகுதி மக்களில் பலர் புரிந்து வந்தனர். வடபகுதியிலும் உலகம் வியக்க வைக்கும் அளவுக்கு அசூர செயற்பாடுகளில் ஈடுபட்ட பல இளைஞர்கள் யுத்த காலத்தில் இருந்தார்கள்.

கிவுலக்கடவல பண்டாரவிடம் அப்படியான தீரச் செயல்கள் இல்லாவிடினும் அப்பகுதியில் தான் ஒரு 'தாதா' வாக தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். பெண்கள் விசயத்தில் அவனிடம் இருந்த அளவுக்கு அதிகமான வேட்கை அந்த ஊரில் பாரிய பிரச்சினைகளை தோற்றுவிக்க தவறவில்லை.

பாடசாலைக்கு சென்று வரும் மாணவிகளைக் கூட அவன் விட்டு வைப்பதில்லை. களவு, கற்பழிப்பு, அடிதடி, கொலை என்றெல்லாம் பல வழக்குகள் அவனுக்கு எதிராக பதிவாகினாலும் அவன் எதையும் பொருட்படுத்துவதே இல்லை.

பண்டாரவுக்கென ஒரு கோஷ்டி கிவுலக்கடவல பகுதியில் இருந்தது. மக்கள் அந்தக் கோஷ்டியை கண்டு அச்சம் அடைந்தாலும் அவர்களுக்கெதிராக காவல் துறையிடம் சென்று புகார் கொடுக்க அஞ்சினர். காவல்துறையினர் கூட தம் தொழிலையும், தம் உயிரையும் காப்பாற்றிக் கொள்வதற்காக எதையும் கண்டும் காணாத மாதிரி நடந்து கொண்டனர்.

அன்று முச்சக்கர வண்டியொன்றுக்குள் ஒரு இளம் பெண்ணின் பெரும் அழகைக் குரலுடன் 'ஐயோ என்னை காப்பாத்துங்க, காப்பாத்துங்க' எனும் பாரிய சத்தம் கேட்டது. அந்த முச்சக்கர வண்டி மிக வேகமாக சந்தியை கடந்து சென்றது. வீதியின் இருமருங்கிலும் மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர அந்த இளம் பெண்ணை காப்பாற்ற எவரும் முன்வரவில்லை.

அந்த முச்சக்கர வண்டி அங்கு எதிராக வந்து கொண்டிருந்த அத்தனை வாகனங்களையும் முட்டி மோதிக் கொள்ளுமளவுக்கு வேகமாக சென்றாலும் அது எந்தவொரு விபத்திலும் சிக்காது தெய்வாதீனமாக தப்பிக்கொண்டு முன் சென்று கொண்டிருந்தது. ஆனாலும் நான்கு வீதிகள் சந்திக்கும் ஒரு சந்தியில் பாரிய வாகன நெரிசல் இடம்பெற்றதால் முச்சக்கர வண்டியால் ஒரு அங்குலமேனும் அசைய முடியவில்லை.

அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அந்த முச்சக்கர வண்டிக்குள் அகப்பட்டிருந்திருந்த அந்த இளம் பெண் அவளை இறுக்கமாக பிடித்திருந்த கரங்களை உதறித்தள்ளி விட்டு வெளியில் பாய்ந்து ஓடினாள். அங்கு வாகன நெரிசல் ஏற்பட்டிருந்ததால் அவளை கடத்திக் கொண்டு வந்தவர்களால் அவளை துரத்திப் பிடிக்க முடியவில்லை.

அங்கு வீதியால் சென்று கொண்டிருந்தவர்கள் ஏதோ, சின்னத்திரைக்கான காட்சி படமாக்கப்படுவதாக நினைத்து அந்த இளம் பெண் அங்கு நிறுத்தப்பட்டிருந்த பல வாகனங்களுக்கிடையில் நெளிந்து வளைந்து ஓடுவதை மட்டும் பார்த்தார்களே தவிர எவரும் ஆபத்தில் சிக்குண்டு அப் பெண்களை காப்பாற்ற முன்வரவில்லை.

அந்த முச்சக்கர வண்டியில் வந்த இருவர் அதிலிருந்து இறங்கி அவளை மிக ஆத்திரத்துடன் அங்கும், இங்கும் ஓடியவாறு தேனார்களே தவிர, அவளை அவர்களால் துரத்திப்பிடிக்க முடியவில்லை. ஆனால் அந்த சனக் கூட்டத்தில் மிக உரத்து ஒன்றை மாத்திரம் சகலரும் கேட்கும் படி கூறி இருந்தார்கள்.

'அவளுக்கு செய்ய வேண்டியதெல்லாம் செய்து போட்டம், அவள் போனாள் போகட்டும்' என்று கூறி விட்டு அவர்கள் வந்த முச்சக்கர வண்டியில் ஏறி திரும்பிப் போனார்கள். அதில் வந்தவர்கள் வேறுயாருமல்ல கிவுலக்கடவல பண்டாரவும் அவனது சகாக்களுமே.

'எப்படியோ தப்பினேன், பிழைத்தேன்' என அந்த இளம் பெண் தனது நண்பி ஒருவருடைய வீட்டிற்குள் தஞ்சம் புகுந்திருந்தாள். நடந்த சம்பவத்தை ஒன்று விடாது, வரிவரியாக அழுதவாறே தனது நண்பியிடம் அவள் கொட்டித் தீர்த்தாள். நண்பி அவளைத் தேற்றி, அவளது வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய் அவளது பெற்றோர்களிடம் நடந்ததை கூறிவைத்தாள். அந்த இளம் பெண்ணால் எந்தவொரு வார்த்தையையும் வாய் திறந்து பேச முடியாத அளவிற்கு மனதில் கவலையும், பதட்டமும் நிறைந்திருந்தன.

பெற்றோரால் ஆறுதல் சொல்வதை விட வேறு என்ன இருக்கிறது? இப்படியொரு கேவலமான சம்பவம் தங்கள் குடும்பத்திற்கு என்றுமே நடக்காததினால் அவர்கள் கூட அழுது தங்கள் கவலையை போக்கிக் கொண்டனர்.

பண்டாரவின் பிடியில் இருந்து அந்த இளம் பெண் தப்பியதே பெரிய விசயம். அவளால் வெளியில் கூட போக முடியவில்லை. அவள் எத்தனை நாட்களுக்கு வீட்டுக்குள் முடங்கிக் கிடப்பது! அன்று காலை தாயார் கோப்பி கோப்பையுடன் மகளின் அறைக்குப் போனாள். அவள் அங்கு இல்லை. தாயாருக்கு ஒரே பதற்றம். வெளியில் வந்து எட்டிப் பார்த்தாள் அங்கும் மகளை காணவில்லை. குசினிக்கு பின்புறமாக சென்று பார்த்த பொழுது ... ...

அங்கு அவள் மயக்கமுற்ற நிலையில் இருந்தாள். பெற்றோர் அவளை அனேக தடவை கூப்பிட்டுப் பார்த்தும் அவள் கண்களை திறக்கவே இல்லை. உடனடியாக கிவுலக்கடவல மருத்துவ மனைக்கு அவளை கொண்டு சென்றார்கள். அவசர பிரிவு சுறுசுறுப்பாக இயங்கியும் அவளின் உயிரை காப்பாற்ற முடியவில்லை.

அவள் தனக்கு நேர்ந்த அந்த துர் சம்பவத்தினால் ஊரில் முகம் கொடுக்க முடியாது தற்கொலை செய்து கொண்டாள். மேலும் அளவுக்கதிகமான தூக்க மாத்திரைகளை ஒரே தடவையில் அவள் உட்கொண்டதாலே அந்த மரணம் நிகழ்ந்தது என இறுதி மருத்துவ அறிக்கையில் தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

அவள் வேறு யாருமல்ல கிவுலக்கடவல மகாவித்தியாலயத்தில் க.பொ.த (சாதாரணம்) பரீட்சை எழுதிய மாணவி ஆஷாவே. பண்டார பல தடவைகள் தன்னை விரும்பும்படி அவளுக்கு தொந்தரவு கொடுத்து வந்தான். அவனது தொல்லையை ஆஷாவால் பொறுக்க முடிவதில்லை.

ஒரு நாள் அவள் தனது காலில் இருந்த செருப்பைக் கழற்றி அவனை தாறுமாறாக தாக்கினாள். இந்த விடயம் அங்கு ஒருவருக்குமே தெரியாது. அவளை பழிவாங்கவே பண்டார அன்று அவளை கடத்திக் கொண்டு சென்றான். ஆனால் தெய்வாதீனமாக ஆஷா முச்சக்கர வண்டியில் இருந்து தப்பி ஓடியதால் அவளது கற்பு காப்பாற்றப்பட்டது. இருப்பினும் அவ்வூர் மக்கள் மத்தியில் அவன் பொய்யாக கூறிய வார்த்தை ஆஷா வீணாக தற்கொலை செய்து கொள்ள காரணமாக இருந்தது.

**- பாலையூற்றான் -**



## விநோதங்கள்

### பாம்பினுள் சாதனை

அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தை சேர்ந்த பால் ரோசலி என்ற சாகசக்காரர், 25 அடி நீளம் கொண்ட 400 பவுண்டு எடை கொண்ட பெண் அனகோண்டா பாம்புக்குள் நுழைந்து சாதனையை படைத்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், நான் பாம்பை அதிகம் காயப்படுத்தி விடக் கூடாது என்பதால் மிகவும் மென்மையாக இருக்கும் வகையில் ஸ்னேக் புரூப் (Snake Proof) அணிந்து கொண்டேன். அந்த உடை பாம்பைப் பாதிக்காத வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்றார்.



### கருப்பை மாற்றப்பட்டது

பிரித்தானியாவில் கருப்பை இன்றி தாயாக முடியாத மகளுக்கு அவரது தாய் தனது கருப்பையை தானமாக கொடுத்துள்ளார். பிரித்தானியாவில் குழந்தை பெற முடியாத பெண் ஒருவர் தாயின் கருவை பெற்று அறுவை சிகிச்சை மூலம் அழகான குழந்தை ஒன்றினை பெற்றெடுத்து ஆரோக்கியமாக இருக்கிறார்.

இதுகுறித்து மருத்துவர்கள் கூறுகையில், பிரித்தானியாவில் சுமார் 15000 பெண்கள் கருப்பை பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### இது தேவையா???



வெனிசுலா நாட்டில் மருத்துவராக உள்ளவர் மானுவேல் அல்வராடோ (60). இவர் கடந்த அக்டோபர் மாதம் 22ம் திகதி பகோடா நகருக்குச் செல்லும் விமானத்திற்காக அமெரிக்காவின் மியாமி சர்வதேச விமானநிலையத்தில் காத்திருந்தார். இந்நிலையில் இவரிடம் பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணை செய்தபோது, தான் கொமடி செய்வதாக நினைத்து சி-4 எனப்படும் வெடிபொருட்கள் தன்னிடம் இருப்பதாக தெரிவித்துள்ளார். இதனையடுத்து மருத்துவரின் உடமைகளை சோதனை செய்த அதிகாரிகள்

மருத்துவர் கூறியது பொய் என உறுதி செய்தனர். எனினும் வெடிகுண்டு புரளியை பரப்பி, வீண் பரபரப்பை உண்டாக்கியதற்காக இவருக்கு 90,000 டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

### 5 நிமிடத்தில் கோடி

அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் கசினோ சூதாட்ட நிலையமொன்றில் 14 மில்லியன் டொலர்களை (சுமார் 183 கோடி இலங்கை ரூபா) வென்ற பின்னர் அப்பணம் முழுவதையும் தொண்டுப் பணிகளுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

லாஸ் வேகாஸ் நகரிலுள்ள சூதாட்ட நிலையமொன்றில் மேற்படி நபர் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளார். அவர் ஐந்தே நிமிடங்களில் 1.4 கோடி டொலர்களை வென்று கோடீஸ்வரராகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



### காப்பாற்றியவர் உயிரிழப்பு

ஜேர்மனியின் .:.பிராங்பர்ட் அருகே உணவகம் ஒன்றின் கழிப்பறையில் இளம்பெண் ஒருவரின் அழுகுரலை கேட்ட Tugce Albayrak, அங்கு சென்றுள்ளார். அப்போது அந்த பெண்ணை அங்கே ஒரு கும்பல் தொல்லை செய்ததை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார். இதையடுத்து அந்த கும்பலிடம் இருந்து அந்த பெண்ணை காப்பாற்ற போராடிய அவர் ஒருவழியாக அந்த கும்பலை அங்கிருந்து விரட்டியுள்ளார்.

பின்னர் அந்த கும்பலில் இருந்த ஒருவர் திரும்பிவந்து, இவரை மட்டையால் தலையில் தாக்கியதாக கூறப்படுகிறது. இதில் பலத்த காயமடைந்த அந்த பெண் மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் அரசியல்

# பிறந்துள்ளது

# இறுதியாக ஒரு வழி



ஜனாதிபதி தேர்தலில் முதலாவது தடையை எதிர்கட்சிகள் மிக அற்புதமாக கடந்துள்ளன. இந்த வெற்றிகரமான செயற்பாட்டிகான பாராட்டும், பெருமையும், மைத்திரிபாலசிறிசேன, சந்திரிகா குமாரதுங்க, ரணில் மற்றும் மங்களவிற்கு செல்லவேண்டும்.

ஆளுங்கட்சி வேட்பாளர் தோல்வியடைவார் என்பது எந்த வகையிலும் இன்னமும் நிச்சயமான விடயமல்ல,எனினும் முதல் தடவையாக அதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன, அதற்கான வாய்ப்புகள் தோன்றியுள்ளன--இது [illegible]பெரும் பாய்ச்சலாகும்.

இலங்கையின் ஏனைய அரசியல் வாதிகளை விட மைத்திரிபால சிறிசேன நல்லவருமல்ல, மோசமானவருமல்ல, அவர் பொது வேட்பாளராக போட்டியிடுவதில் மிகவும் நம்பிக்கை அளிக்கின்ற விடயம் இதுதான்-

இலங்கை அரசியல் கடந்த சில வருடங்களில் வீரபுருசர்களையும், கதாநாயகர்களையும், மீட்பர்களையும் அளவுக்கதிகமான எண்ணிக்கையில் சந்தித்துள்ளது. நாட்டிற்கு மீண்டும் அவ்வாறான ஒரு தலைவர் அவசியமில்லை.நாட்டை மீட்க வந்தவராகவும், வீழ்ச்சியற்றவராகவும், தவிர்க்க முடியாதவராகவும் தன்னை [illegible]திக்கொள்ளும் ஒரு தலைவர் அவசியமில்லை.

நாடு மீண்டும் கரடுமுரடான ஜனநாயகத்திற்கு திரும்ப வேண்டும். அரசியல்வாதிகளுக்கே உரிய சிறிய தீமைகளுக்கு பழக்கப்பட்ட, வாரிசு அரசியலையும், முடியாட்சியையும் உருவாக்க விரும்பாத சாதாரண அரசியல்வாதியின் காலத்திற்கு நாடு திரும்பவேண்டும்.

ஆளுங்கட்சி வேட்பாளர் தோற்கடிக்கப்பட்டால் இலங்கை எதிர்கொள்கின்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டிவிடாது.ராஜபக்சாக்களின் தோல்விக்கு பின்னரும் பல பிரச்சினைகள் தொடரும், ஆனால் நாடு எதிர்கொண்டுள்ள பாரிய அபாயங்களுக்கு ஆளுங்கட்சி வேட்பாளர் தோல்விக்கு பின்னர் முடிவுகாணலாம். அவர்களின் தோல்வியுடன் அவை காணமாற்போய்விடும்.

ஜனநாய விரோத குடும்ப ஆட்சியும், வாரிசு அரசியல் திட்டமும் முடிவுக்கு வரும், சிங்களபேரினவாதம் ஓரளவுக்காவது கட்டுப்படுத்தப்படும். சிறுபான்மை இனத்தவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என எதிர்பார்க்கலாம்.

இராணுவ மயப்படுத்தப்படுதலை தடுத்து நிறுத்தலாம் அல்லது அகற்றலாம், வடக்கு ஆக்கிரமிப்பு நிலையிலிருந்து ஜனநாயக சூழலிற்கு திரும்பலாம். நாட்டின் பொருளாதாரத்தை பலனற்ற பாரிய அபிவிருத்தி திட்டங்களிலிருந்து காப்பாற்றலாம்.

நீதிதுறை மத்தியில் நீதியை மீண்டும் ஏற்படுத்தலாம், அதேபோன்று அதிகாரிகள் மத்தியில் தொழிற்சார் தன்மையை உருவாக்கலாம், நாம் இழந்த ஜனநாயக சுதந்திரம் மற்றும் உரிமைகளை மீண்டும் எற்படுத்தலாம்.

வெளிவிவகார கொள்கையை பொறுத்தவரை சீனா நோக்கி தலைதெறிக்க ஓடுவதை நிறுத்தி மீண்டும் அணிசேரா கொள்கைக்கு திரும்பலாம்.

ஆளுங்கட்சி வேட்பாளர் ஆட்சிக்காலத்தில் உருவாகிய அவர்களின் நிர்வாகத்தால் ஏற்படுத்தப்பட்ட இந்த பிரச்சினைகளுக்கு அவர்களை வெளியேற்றுவதன் மூலமாக தீர்வை காணலாம். இது யதார்த்தபூர்வமான எதிர்பார்ப்பு -போராடுவதற்கு தகுதியான விடயம்.

மிகவும் வலிமை வாயந்த ஜனாதிபதி முறையை நீக்குவதும், சமநிலையான அரசியல் முறையொன்றை ஏற்படுத்துவதும் தற்போதைய அரசியல் அவசியமாகவுள்ளது. எனினும் அரசாங்கத்தின் மீது அதிருப்திகொண்டுள்ள சிங்கள மக்களை கவர்வதற்கு இந்த விடயம் மாத்திரம் போதுமானதல்ல.

சில மாதத்திற்கு முன்னர் மாற்றுக்கொள்கை நிலையம் மேற்கோண்ட ஆய்வுகளின் மூலம் தெரியவந்த விடயங்கள் வாக்காளர்கள் எங்கு நிற்கின்றார்கள் என்பதை புரிந்துகொள்ள உதவியாக அமையலாம். இந்த ஆய்வுகளின் படி 73 வீதமான இலங்கையர்களும், 81 வீதமான சிங்களவர்களும் சிங்களம் மாத்திரமே இலங்கையின் தேசிய மொழி என கருதுவதும், 64 வீத இலங்கையர்களும், 61 வீத சிங்களவர்களும் நல்லிணக்க ஆணைக்குழு வென்றால் என்னவென்று தெரியாத நிலையிலிருப்பதும் தெரிய வந்துள்ளது.

இவ்வாறான ஒரு புள்ளிவிபரத்தை அடிப்படையாக வைத்து சிந்திக்கும் போது இலங்கையின் பெரும்பான்மையான மக்களுக்கும், சிங்களவர்களில் பெரும்பான்மையானவர்களுக்கும், நிறை-வேற்று அதிகார ஜனாதிபதியின் உண்மையான ஆபத்து குறித்து தெரிந்-



திருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

பெரும்பான்மையான மக்கள் ராஜபக்ச அரசாங்கத்தின் மீது அதிருப்தியடைந்திருப்பதற்கு காரணம் அவர்களின் வாழ்க்கை தரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினாலேயே என்பது முக்கியமான விடயம்.

ஏகாதிபத்திய, சர்வாதிகார ஜனாதிபதி முறை என்பது நீக்கப்படவேண்டியதே, எனினும் இது தேர்தலில் வெற்றியை பெற்றுத்தரக்கூடிய சூத்திரமல்ல.

எதிர்கட்சிகளின் பொதுவேலை திட்டத்தில் சிறுபான்மை இனத்தவர்களுக்கான உறுதிமொழிகள் உள்ளடக்கப்படுவது எவ்வளவு அவசியமானதோ, அதே போன்று சாதாரண பொதுமக்களுக்கான நிவாரணங்களும் அவசியம். இவ்வாறான ஒரு பொருளாதார கோணத்தை புகுத்தாவிட்டால், பல வாக்குகளை இழக்கநேரிடும். ஆகக்குறைந்த அரசியல் வேலைத்திட்டம் போன்று, ஆகக்குறைந்த பொருளாதார திட்டமும் அவசியம். இது இல்லாவிட்டால் மக்கள் மத்தியில் தமது பொருளாதார நிலை குறித்து காணப்படும் அதிருப்தியை எதிர்கட்சிகளால் பயன்படுத்த முடியாத நிலை உருவாகும்- ஆளுங்கட்சி வேட்பாளர் வெற்றிபெறுவார்.

## அவர்கள் அடுத்து என்ன செய்வார்கள்???

அரசாங்கம் தன்னை கடுமையாக விமர்சிக்கும் சுவரொட்டிகளை பல இலட்சம் 'ரூபாய் செலவில் தயாரித்துள்ளதாக ரணில் கடந்த வெள்ளிக்கிழமை ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் சிலரிடம் தெரிவித்தார். தானே பொதுவேட்பாளர் என்ற நம்பிக்கையிலேயே அவ்வாறான சுவரொட்டிகள் அச்சடிக்கப்பட்டுள்ளன என தெரிவித்த அவர் அரசாங்கத்தை அவற்றை அழித்துவிடுமாறு சிரித்துக் கொண்டே தெரிவித்தார்.

ஆளுங்கட்சியினர் ராஜபக்சாக்கள் அற்புதமான விதத்தில் குருடர்களாக்கப்பட்டிருக்கலாம், ஆனால் அவர்கள் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளனர்.

முதலாவது தடையை தாண்டியுள்ளதன் அர்த்தம் போட்டியில் வெற்றி கிட்டி விட்டது என்பதல்ல, ஆளுங்கட்சி வேட்பாளரிடம் இன்னமும் அரசாங்கத்தின் வலிமையுள்ளது. அவர்கள் ஆட்சியை காப்பாற்றுவதற்கு மாத்திரம் போராடவில்லை. அவர்கள் தங்கள் வாழ்க்கைக்காக போராடுகின்றனர். இதன் காரணமாக அவர்கள் மிகக் கடுமையாக, மூர்க்கத்தனமாக, தீவிர வன்முறையுடன் போராடுவார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் காடையர்களின் தாக்குதலில் ஏற்கனவே இரண்டு ஐக்கிய

**"இலங்கையின் ஏனைய அரசியல் வாதிகளை விட மைத்திரிபால சிறிசேன நல்லவருமல்ல, மோசமானவருமல்ல, அவர் பொது வேட்பாளராக போட்டியிடுவதில் மிகவும் நம்பிக்கை அளிக்கின்ற விடயம் இதுதான்"**

என்பதற்கான அறிகுறியிது.

இலங்கையை பொறுத்தவரை தற்போதைய அரசாங்கம் என்பது தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயம் என்ற மனோநிலை காணப்படுகின்றது, அவர்களின் ஆட்சியை எதிர்ப்பது தேசத்திற்கு ஆபத்தை ஏற்படுத்துவதாகும், இதன் தொடர்ச்சியாக அரசாங்கத்தை ஜனநாய ரீதியில் தோற்கடிப்பதற்கு மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும், நாட்டிற்கு இழைக்கும் துரோகமாகும்,

இந்த மனப்பான்மை மைத்திரி பொதுவேட்பாளராக அறிவிக்கப்பட்டவுடன், வெளிப்பட்டுள்ளது, எதிர்கட்சிகள் துரோகமிழைப்பதாகவும், சதித்திட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் ஏற்கனவே குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இது நாட்டை பிரித்து, ஸ்திரத்தன்மை இழக்கச்செய்து, குழப்பத்திற்குள் தள்ளும் வெளிநாடுகள்-மற்றும் புலம்பெயர்ந்த தழிழர்களின் சதியெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான மனோநிலையில் உள்ள ஆபத்து என்னவென்றால் இது ஜனநாய ரீதியிலான எதிர்ப்பிற்கு எதிராக பாரிய அளவிலான ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விடுவதை நியாயப்படுத்துவது தான்.

ஆளுங்கட்சியினர் சட்டபூர்வமான மற்றும் சட்டவிரோத வன்முறைகளை எதிர்கட்சிகள் மீது கட்டவிழ்த்து விடுவார்கள், அவர்கள் வேறு என்ன செய்வார்கள்? முற்றுகைக்குள் சிக்கியுள்ள தேசம் அல்லது அரசு குறித்து கற்பனை கதைகளை உருவாக்குவார்கள். புதிய புலிகள் அல்லது ஜிகாத்போராளிகள் குறித்த அச்சத்தை உருவாக்க சில நடவடிக்கைகள் இடம்பெறலாம், அவர்களாவே மிகவும் ஆபத்தான தேசிய பாதுகாப்பு நெருக்கடியொன்றை உருவாக்கி தேர்தலை பிற்போடலாம், அல்லது எதிரணியினர் மீது நடவடிக்கை எடுப்பதன் மூலமாக தேர்தலை களவாடலாம்.

பொதுமக்கள் மத்தியில் விவாதங்களை தடுப்பது, தகவல் சுதந்திரத்தை கட்டுப்படுத்துவது, பதட்டம் மற்றும், அச்ச உணர்வை ஏற்படுத்துவதன் மூலமாக பல சர்வாதிகாரிகள் பாரிய தேர்தல் வெற்றிகளை பெற்றுள்ளனர்- வன்முறையை பயன்படுத்தாமாலே அவர்கள் அதனை சாதித்துள்ளனர் என நோபல் பரிசுபெற்ற அமர்த்தியாசென் ஒரு முறை தெரிவித்தார்.

ஆளுங்கட்சியினர் இதனையே எதிர்வரும் தேர்தலில் செய்ய முயன்றனர், ஆனால் அச்சத்தை ஏற்படுத்தும் அவர்களது முயற்சிகளுக்கு மைத்திரிபால பெரும் பின்னடவை அளித்துள்ளார். அடுத்து வரும் வாரங்களில் சாத்தியமான சகல முறையையும் அமுல்படுத்த ஆளுங்கட்சியினர் முயல்வார், மக்களை அச்சத்தின் பிடியில் சிக்க வைப்பதற்கும், எதிர்க்கட்சிகளை விமர்சனம் செய்து மௌனமாக்கி அழிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகயையும் அவர்கள் செய்யலாம்.

எதிர்க்கட்சிகள் இதுவரை மிக அற்புதமாகச் செயற்பட்டுள்ளன. ஆனால் எதிர்வரும் நாட்களிலேயே கடும் சவால்கள் காத்திருக்கின்றன.

**-திசராணி குணசேகர-**

தமிழில் ரஜீவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்


01. மெல்லிய கம்பித் தடம் ஒன்றினால் 7cm ஆரையுடைய வட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வட்ட கம்பித்தடம் வெட்டி நீட்டப்பட்டு சதுர வடிவத் தடமாக மாற்றப்பட்டுள்ளது. இச்சதுர வடிவ தடத்தின் பரப்பளவு யாது?

02. $2x - 4y = 2$, $x + y = 4$ என்னும் ஒருங்கமை சமன்பாட்டு சோடியை தீர்க்காமல் (ஒ-ல)இன் பெறுமானத்தைக் காண்க.

03. சாய்சதுரம் ஒன்றின் மூலைவிட்டங்கள் இரண்டினதும் நீளங்கள் முறையே 16cm, 12cm ஆகும். இச்சாய்சதுரத்தின் பக்க நீளத்தைக் காண்க.

04. நேர்விளிம்பு, கவராயம் cm, mm அளவிடை ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டி

1. AB = 8cm, கோணம் ABO = 90பாகை, BO = 4cm ஆகுமாறு ஒரு முக்கோணி ABO ஐ அமைக்க.




2. AB ஐB இல் தொடுவதும் O வை மையமாகவுடையதுமான வட்டத்தை அமைக்க.

3. நீர் வரைந்த வட்டத்திற்கும் பக்கம் AB இற்கும் இடையிலான தொடர்பை எழுதுக.

4. AB=AC ஆகுமாறு C என்னும் புள்ளியை வட்டத்தின் மீது குறித்து CO வை இணைக்க.

5. முக்கோணி AOB= முக்கோணம் AOC என நிறுவுக.

6. பக்கம் AC ஆனது Cயில் வட்டத்தை தொடுகிறது எனக் காட்டுக.

7. உருவில் BC// DE ஆகும். x இன் பெறுமானத்தைக் காண்க.

05. தற்போது தந்தையினதும் மகனினதும் வயதுகளிற்கிடையிலான விகிதம் 4 : 1 ஆகும். 6 வருடங்களுக்கு முன்னர் தந்தையினதும், மகனினதும் வயதுகளுக்கிடையிலான விகிதம் 7:1 ஆகும். தற்போது மகனின் வயது t வருடங்கள் எனின்,

அ. தற்போது தந்தையின் வயதை t சார்பில் தருக.

ஆ. 6 வருடங்களுக்கு முன்னர் தந்தையினதும் மகனினதும் வயதுகளுக்கிடையிலான விகிதத்தை சார்பில் தருக.

இ. விகிதசமன் தொடர்பை எழுதுவதன் மூலம் தந்தையினதும் மகனினதும் தற்போதைய வயதுகளைக் காண்க?

ஈ. இன்னும் x வருடங்களில் தந்தையின் வயது மகனின் வயதின் இரு மடங்காகும் எனின், x இல் ஓர் சமன்பாட்டை அமைத்து x ஐக் காண்க.

06. $2x^2 + 7x + 5$ என்ற கோவையில் x இன் குணகம் யாது?

07. $5^2/_7$ இனை முறைமையில்லாப் பின்னமாகத் தருக.

08. ரூபா 500 பெறுமதியான மணிக்கூடு ஒன்றினை 15வீத இலாபம் பெற என்ன விலைக்கு விற்க வேண்டும்?

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**

## பாடம் : விஞ்ஞானம்

01. இரண்டு நரம்புக் கலங்கள் சந்திக்கும் இடம் எவ்வாறு அழைக்கப்படும்?
1. இரன்வியரின் கணு  2. நரம்பு நாருறை
3. நரம்பிணைப்பு  4. உட்காவு நரம்பு முனை

02. வன்கூட்டுத்தசையின் இயல்புகளைப் பின்வரும் எந்த விடை சரியாகக் குறிப்பிடுகின்றது?
1. வரிகள் உள்ளது, இச்சைவழி இயங்குகின்றது.
2. வரிகள் உள்ளது, இச்சைவழி இயங்காதது.
3. வரிகள் இல்லாதது, இச்சைவழி இயங்குகின்றது.
4. வரிகள் இல்லாதது, இச்சைவழி இயங்காதது

03. பின்வரும் எந்த அங்கிகள் அழுகல் தாவரம் எனப்படும்?
1. தமது உணவை தாமே உற்பத்தி செய்யும் அங்கிகள்
2. வேறு அங்கிகளை உணவாகக் கொள்ளும் அங்கிகள்
3. இறந்த விலங்குப் பகுதிகளையும், தாவரப் பகுதிகளையும் சார்ந்திருக்கும் அங்கிகள்
4. பச்சைத் தாவரங்களை மாத்திரம் உணவாகக் கொள்ளும் அங்கிகள்

04. மனிதர்களிடையே காணப்படும் பரம்பரை நோயாக அமையாதது எது?
1. கழலை  2. குருதியுறையா நோய்
3. நிறக்குருடு  4. அரிவாட் கலக் குருதிச்சோகை

05. இயக்கு நரம்பின் தொழில்
1. தெறிப்பு வில்லில் மாத்திரம் பங்குபற்றல்
2. மூளையிலிருந்து முண்ணானுக்கு மாத்திரம் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்
3. மைய நரம்புத் தொகுதியிலிருந்து தசைகளுக்குக் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்
4. புலனங்கங்களிலிருந்து மைய நரம்புத் தொகுதிக்குக் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்

06. கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல் பயிரிடும் பணிகளில் பல்வேறு தொழில்களுக்காக தாவர ஓமோன்களைப் பயனுறுதி வாய்ந்த விதத்தில் பிரயோகிக்கலாம். எனினும் தாவர ஓமோன்கள் நிறைவேற்ற முடியாத தொழில்
1. சிறு கிளையை வேர்விடச் செய்தல்
2. களைகொள்ளியாகச் செயற்படச் செய்தல்
3. பருவமல்லாத போது பூக்களும் காய்களும் உண்டாகச் செய்தல்.
4. பீடைகொல்லியாகச் செயற்படச் செய்தல்

07. $0.5 moldm^{-3}$ செறிவுடைய NaOH இன் 600ml கரைசலின் செறிவை $0.3 moldm^{-3}$ ஆக்குவதற்கு சேர்க்கவேண்டிய நீரின் அளவு?
1. 200ml  2. 300 ml  3. 400 ml  4. 600 ml

08. மின்பகுப்பின் மூலம் மின்முலாமிடும் போது யாதாயினும் ஓர் உலோக மேற்பரப்பின் மீது நிலையான சீரான மின்முலாமிடுதலைப் பெறுவதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறை யாது?
1. மின்பகுபொருளை அசையாமல் வைத்திருத்தல்.
2. மின்பகுபொருளின் வெப்பநிலையைத் தொடர்ச்சியாக மாற்றுதல்.
3. மின்பகுப்பிற்கு மிகச் சிறிய மின்னோட்டத்தைப் பிரயோகித்தல்.
4. மின்முலாமிட வேண்டிய பொருளின் மீது கொழுப்புப் படையைப் பூசுதல்.

09. அமிழ்ந்த இலைவாய்கள் உள்ள இலைகள் எந்தச் சூழலில் வாழ்வதற்கு இசைவாக்கமடைந்த தாவரங்களில் இருக்கும்?
1. நீரினுள்ளே அமிழ்ந்திருப்பதற்கு
2. நீரின் மீது மிதந்து கொண்டு இருப்பதற்கு
3. உலர்ந்த காலநிலை இருக்கும் பிரதேசங்களில் வளர்வதற்கு
4. நல்ல ஈரலிப்பு உள்ள பிரதேசங்களில் வளர்வதற்கு

## பாடம் : வரலாறு

01. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்றால் என்ன?

02. கல்லாயுதங்களும், வானர மனிதனுடைய பற்களும் கண்டுபிடிக்கப்பட்ட இடம்?

03. ஆரியர் அந்தியா வரும் போது நிலவிய நாகரிகம் எது?

04. கற்காலத்துக்குரிய தொல்பொருட்கள் கிடைக்கப் பெற்ற இடங்கள்?

05. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்?

06. மனித எலும்புத்துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் எவை?

07. 12500 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட கட்டிட இடிபாடும் சிறிய அடுப்பும் கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?

08. 27000 வருடங்களுக்கு முன் உப்பு பயன்பாடு இருந்தது என்பதற்கான சான்று கிடைக்கப்பெற்ற இடம்?

09. வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனின் மரணச் சடங்கு பற்றிய தகவல் கிடைத்த இடங்கள் எவை?

10. இலங்கைக்கு ஆரியர் வருகை பற்றிக் குறிப்பிடும் மூலாதாரங்கள் எவை?

11. ஆரியரின் தாயகம் எது?

12. ஆரியர் இந்தியாவுக்குள் வந்தவழி எது?

13. ஆரியர் இந்திய வருகை பற்றி குறிப்பிடும் மூலாதாரங்கள் எவை?

01. 1. சௌரத் அரசன் கண்டி அரசை மூன்று பாகங்களாக்கி ஒப்படைத்த அவனுடைய குமாரர்கள் யாவர்?
2. பின்வரும் வரலாற்று நிகழ்வுடன் தொடர்புபடும் கண்டி அரசர்கள் யார்?
அ. புனித தந்தங்களைக் கண்டியில் வைப்பித்த இடம்
ஆ. நாயக்க மரபுரிமை அரசை ஆக்கிரமித்தல்.
இ. தலதா மாளிகைக்கு பத்திரிப்புவ அலங்காரத்தை ஏற்படுத்தல்.
ஈ. தலதா மாளிகை சூழலில் நான்கு இந்து ஆலயங்களை அமைத்தல்.

02. 1. கீர்த்தி சிறி இராஜசிங்க அரசர் புத்த சாசன மேம்பாட்டிற்கு ஆற்றிய சேவைகள் இரண்டைக் கூறி விளக்குக.
2. ஒல்லாந்தருக்கும் கண்டி அரசர்களுக்கும் இடையிலான உறவின் தன்மைகளை இரண்டு ஆதாரங்கள் மூலம் விபரிக்குக.

03. உலகமகாயுத்தங்களின் போது ஐரோப்பிய நாடுகளுக்கு வெற்றியை பெற்றுக் கொடுத்த ஐரோப்பிய நாடுகளுள் அடங்காத நாடு எது?
1. பெரியபிரித்தானியா  2. ஐக்கியஅமெரிக்கா
3. பிரான்சு  4. ஜேர்மனி

02. முதலாம் உலக மகா யுத்தத்தில் ஐக்கிய அமெரிக்க பங்கு பெறுவதற்கான உடனடிக் காரணம்
1. பாசிசவாதமும் நாசிசவாதமும் எழுச்சியடைந்தமை
2. ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்தமை
3. நீர்மூழ்கிக்கப்பலின் மூலமாக லுசிதானியா கப்பல் தாக்குதலுக்கு உள்ளானமை
4. யப்பான், பேர்ள் துறைமுகத்தை தாக்கியமை

## Grammar

Ex 01. Are the underlined verbs right or wrong? Correct them if they are wrong.

1. Bob is a friend of mine. I know him very well.
..............................................
2. Bob is a friend of mine. I know him for a long time.
..............................................
3. Sue and Alan are married since July.
..............................................
4. The weather is awful. It's raining again.
..............................................
5. The weather is awful. It's raining all day.
..............................................
6. I like your house. How long are you living there?
..............................................
7. Graham is working in a shop for the last few months.
..............................................
8. I'm going to Paris tomorrow. I'm staying there untill next Friday.
..............................................
9.' Do you still smoke?' 'No, I gave it up. I don't smoke for years.'
..............................................
10. That's a very old bicycle. How long do you have it?
..............................................
11. Amy is in hospital, Isn't she?. 'Yes, she has in hospital since Monday.
..............................................

ஆசிரியர் : அகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

## யாழில் கால்பந்தாட்ட மைதானம்



பீ.:பா அமைப்பு மற்றும் ஜேர்மன் அரசாங்கம் ஆகியவை வழங்கிய 100 மில்லியன் ரூபாய் நிதியுதவியில் அரியாலையில் அமைக்கப்பட்ட சர்வதேச தரத்திலான கால்பந்தாட்ட பயிற்சி மைதானம், சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜோசப் செப் பிளச்சரால் செவ்வாய்க்கிழமை (02) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் 75ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்பதற்காக இலங்கை வருகை தந்த ஜோசப் பிளச்சர் இந்த மைதானத்தை திறந்து வைத்துள்ளார்.

இந்த மைதானத்தை வடமாகாணத்திலுள்ள அனைத்து கால்பந்தாட்ட வீரர்களும் பயிற்சிகளுக்கான பயன்படுத்த முடியும். தற்போது திறந்து வைக்கப்பட்டாலும் 6 மாதங்களின் பின்னரே மைதானம், வீரர்கள் பயிற்சிகள் பெறுவதற்கு அனுமதியளிக்கப்படும் என இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனங்களின் தலைவர் றஞ்சித் றொட்ரிக்கோ தெரிவித்தார்.



## ரசிகர்கள் மிரட்டலில்

Sri Lanka Cricket

போட்டியை காண வரும் ரசிகர்கள் ஹோர்ன்களை மைதானத்திற்குள் கொண்டு வர இலங்கை கிரிக்கெட் வாரியம் தடை விதித்துள்ளது. இவற்றால் போட்டியை ரசிக்கும் பலருக்கு இடையூறு ஏற்படுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மைதானத்துக்குள் இவை காணப்பட்டால் பறிமுதல் செய்யப்படும் எனவும் ரசிகர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் அணி முதலிடம்

அட்டாளைச்சேனை அந்-நூர் மகாவித்தியாலய பழைய மாணவர் உதைப்பந்தாட்ட அணிக்கும் பாடசாலையின் ஆசிரியர் உதைப்பந்தாட்ட அணிக்குமிடையில் இடம்பெற்ற சினேகபூர்வ உதைப்பந்தாட்டப் போட்டியில் ஆசிரியர் அணி ஒன்றுக்கு பூச்சியம் என்ற கணக்கில் வெற்றியீட்டியுள்ளது.

இப்போட்டி அந்-நூர் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் புதன் கிழமை(03.12.2014) காலை இடம் பெற்றது. பாடசாலை அதிபர் எம்.ஏ. இத்ரீஸ் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டியின் ஆரம்ப நிகழ்வில், பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.எம்.உவைஸ், எஸ்.எல். முனால், அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ், பிரதி அதிபர் எம்.ஏ.அப்துல் ஹை, உதவி அதிபர் எம்.ஐ.எம்.ஹாசீம் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டனர்.



## யார் சிறந்த வீரர்



சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) சார்பில் சிறந்த கால்பந்து வீரருக்கான விருது ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகிறது. இந்தாண்டு கால்பந்து வீரர் விருதுக்கான இறுதிப் பட்டியலில் ரொனால்டோ, மெஸ்ஸி, நுயர் இடம் பிடித்தனர்.

இந்த ஆண்டுக்கான 23 வீரர்கள் அடங்கிய உத்தேச பட்டியல் கடந்த ஒக்டோபரில் பிபாவினால் வெளியிடப்பட்டது. இதிலிருந்து இறுதியாக 3 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

அரசடி விக்கினேஸ்வரா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாலர் பாடசாலையின் தலைவர் திரு.சி.பார்த்திபன் தலைமையில் ஆரம்பமாகியது. பாலர் பாடசாலை சிறுவர்கள் அனைவரும் பல்வேறு வகையான விளையாட்டுப் போட்களில் பங்கேற்றனர். பாடசாலையில் இருந்து தரம் ஒன்று செல்வதற்காக வெளியேறும் அனைவருக்கும் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

# CRICKET

## மைல்கல்லை எட்டினார்



இங்கிலாந்து அணிக்கெதிரான முதல் ஒருநாள் போட்டியில் சங்ககார 450 வீரர்களை ஆட்டமிழக்கச் செய்த விக்கெட் காப்பாளர் என்ற பெருமையை பெற்றுள்ளார். இவர் மொத்தமாக 452 வீரர்களை ஆட்டமிழக்கச் செய்து இரண்டாம் இடத்தில் இருக்கிறார். முதலிடத்தில் அவுஸ்திரேலியா வீரர் ஆடம் கில்கிறிஸ்ட் 472 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

## கோஹ்லிக்கு ஆப்பு – டோனி




முதல் டெஸ்ட் போட்டியில் டோனி விளையாடினால், அணித்தலைவராக களமிறங்க காத்திருக்கும் கோஹ்லியின் வாய்ப்பு பறிபோகும்.

இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள் இடையேயான 4 டெஸ்ட் போட்டித்தொடரில் முதல் டெஸ்ட் வருகிற 4ந் திகதி பிரிஸ் பேனில் தொடங்குவதாக இருந்தது.

## உலக சாதனை – சிம்பாவ்பே

CRICKET AUSTRALIA

டெஸ்ட் போட்டியில் விளையாட வீரர்கள் மனோ ரீதியாக தயாராகவில்லையென அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இந்திய அவுஸ்திரேலிய அணிகள் மோதும் முதல் டெஸ்ட் 4 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை பிரிஸ்பேனில் நடைபெறுவதாக இருந்தது. அவுஸ்திரேலிய வீரர் ஹியூக்ஸ் உள்ளூர் போட்டியின் போது தலையில் பந்து தாக்கி கடந்த 27 ஆம் திகதி மரணமடைந்தார்.

இதைத் தொடர்ந்து முதல் டெஸ்ட் போட்டி ஒத்தி வைக்கப்பட்டது. தற்போது போட்டி அட்டவணையை மாற்றி அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

## பிலிப் ஹியூக்ஸ்

### இறுதி யாத்திரை




தலையில் பந்து அடிபட்டு உயிரிழந்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் பிலிப் ஹியூக்ஸின் இறுதி சடங்கு அவரது சொந்த ஊரான மேக்ஸ்வில்லே நகரில் 03.12.2014 அன்று இடம்பெற்றது. குறித்த இறுதிச்சடங்கில் அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அப்பாட், பிரபல கிரிக்கெட் வீரர்கள் பிரையன் லாரா, மெக்ராத், வார்னே, கில்கிறிஸ்ட் ஆகியோர் பங்கேற்றனர்.

மேலும் ஆயிரக்கணக்கான அவுஸ்திரேலிய கிரிக்கெட் ரசிகர்களும் மேக்ஸ்வில்லே நகரில் குவிந்தனர். இந்தியா தரப்பில் விராட் கோஹ்லி, ரோகித் ஷர்மா, இந்திய கிரிக்கெட் அணியின் இயக்குனருமான ரவி சாஸ்திரி உள்ளிட்டோர் கலந்து கொண்டு ஹியூக்ஸ்சுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.



இந்த நிலையில் பிலிப் ஹியூக்ஸ் பூதவுடல் தாங்கிய சவப்பெட்டியை நண்பர்களுடன் அவுஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கேல் கிளார்க் தோளில் சுமந்து கண்ணீருடன் செல்ல 5000 க்கு மேற்பட்ட மக்கள் கண்ணீருடன் விடை கொடுத்தனர்.





## எமனாகும் கிரிக்கட் பந்து



இஸ்ரேல் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய சர்வதேச கிரிக்கெட் நடுவரகவுள்ள ஹில்லல் ஒஸ்கர் இஸ்ரேலின் அஸ்டோட் நகரில் இடம்பெற்ற தேசிய கிரிக்கெட் லீக் போட்டியில் 58 வயதான இவர் நடுவராக பணியாற்றினார். அப்போது துடுப்பாட்ட வீரர் அடித்த பந்து அவரை நோக்கி வந்து அவரது தாடையைத் தாக்கியது. இந்நிலையில் பலத்த காயத்துடன் நிலைகுலைந்து கீழே விழுந்தார். உடனடியாக அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் சிகிச்சை பலன் அளிக்காமல் அவர் இறந்தார். அவுஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ் மரணம் அடைந்து 4 நாட்கள் ஆகின்ற நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 09

01. பின்வரும் கருத்திற்குப் பொருத்தமான தனிச் சொல்லை எழுதுக.
   1. அதிகளவு மரங்களைக் கொண்ட இடம் ...................
   2. விபத்துக்களில் சிக்கியவர்களுக்கு உடனடியாக வழங்கப்படும் சிகிச்சை ........................

02. ஒரு தண்ணீர்த் தாங்கியில் 30லீற்றர் நீர் உள்ளது. இத்தாங்கியிலிருந்து 05 நிமிடத்தில் ஒரு லீற்றர் நீர் வெளியேறும் எனில், தாங்கியிலிருந்து நீர் முழுவதும் வெளியேற எவ்வளவு நோரம் தேவைப்படும்?

03. கீழ்வரும் பாடலை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

பாலைப் போல நிலவு வானில்
பவனி வரப் போகுது
கோலக்கடல் அலைக்கைதட்டி
குதூகலிக்கப் போகுது
நீலவானும் கண்சிமிட்டி நின்று பார்க்கப் போகுது
மாலை வேளை மலர்ந்து கங்குல்
மங்கை தோன்றப் போகிறாள்

1. கவிஞர் நிலவை எதற்கு உவமித்துக் கூறுகிறார்?

2. கோலக்கடல் அலக்கைதட்டிக் குதூகலிப்பது ஏன்?

3. மங்கை என்று கவிஞர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

4. வினைச்சொல் ஒன்றைக் குறிப்பிடுக.


5. பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக.

6. அடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக.

7. இப்பாடல் நாளொன்றின் எப்பொழுதில் நடைபெறும் நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுகிறது?

04. சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லைத் தெரிந்து கோடிடுக.
   1. உலவுத்தொழில், உழவுத்தொழில், உளவுத்தொழில்
   2. சூழ்ந்து, சூல்ந்து, சூள்ந்து
   3. வாலைப்பழம், வாழைப்பளம், வாழைப்பழம்
   4. உட்சாகம், உற்சாகம், உற்ச்சாகம்
   5. பின்னாக்கு, பிண்ணாக்கு, பின்ணாக்கு

05. அருகில் உள்ள உருவின் சுற்றளவு யாது?




06. சுபாவின் நிறையின் இரு மடங்கு நிறையுடையவர் அனுலா, அனுலாவின் அரை மடங்கு நிறை உடையவர் லவன். லவனை விட இரு மடங்கு நிறையுடையவர் பீமா. அனுலாவின் நிறை 30கி.கி எனின், பீமாவின் நிறை யாது?
   1. 15கி.கி 2. 20கி.கி 3. 30கி.கி

07. சமையலறையில் இரவில் கரப்பான் பூச்சிகளின் நடமாட்டத்தை தடுக்கும் எளிய வழி எது?
   1. கையால் பிடித்து அழித்தல் 2. மின்குமிழை ஒளிர விடுதல்
   3. பூச்சி மருந்து விசிறல் 4. பொறியுணவை வைத்தல்

08. கொழும்பு பண்டாரநாயக்கா விமான நிலையத்திலிருந்து அதிகாலை 4.30மணிக்கு புறப்பட்டுச் சென்ற ஆகாய விமானம் 2 மணித்தியாலம் 35 நிமிடப் பயணத்தின் பின் தாய்லாந்தை வந்தடைந்தது. இலங்கை நேரப்படி விமானம் தாய்லாந்தை சென்றடைந்த நேரம் என்ன?
   1. மு.ப 6.50 2. மு.ப 6.55 3. மு.ப 07.05

09. இலங்கையில் மட்டும் வாழும் இலங்கைக்குரிய பிராணி எது?
   1. ஆட்காட்டி குருவி 2. சருகுமான் 3. பெலிக்கன் 4. தீக்கோழி

10. கிராமப் பற மக்கள் பலாச்சுளைகளை பாதுகாத்து வைக்கும் விதம்?
   1. உலர்த்துதல் 2. உப்பிடுதல்
   3. சீனிப்பாகில் அமிழ்த்துதல் 4. குளிர்சாதனப்படுத்தல்

11. ஆண்டிற்கு ஒரு தடவை இலைகளை உதிர்க்கும் மரம் எது?
   1. நிழல்வாகை 2. இபில் இபில் 3. ஆலமரம்

**சென்ற வார விடைகள்**

01. 1
02. 1
03. 2
04. 3
05. 3
06. 2
07. 4
08. 4
09. 1
10. 1
11. 1
12. 4
13. 1
14. 4
15. 3

## சிறுவர் முரசு



குட்டிக்கதை

## விவசாயியின் கோழி அம்மா

சந்தைக்குப் போன விவசாயி ஒருவர், தனது தோட்ட காய்கிறகளை விற்றுவிட்டு வரும் வழியில் புதிதாக கோழி ஒன்றை வாங்கி வந்தார். வீட்டிற்கு வந்த கோழி புதிய இடம் என்பதால் பயந்து பயந்து இரைகளைத் தேடி தின்றுக் கொண்டிருந்தது. இதைக் கவனித்த விவசாயி, கோழியை கையில் பிடித்து பாசமுடன் தடவி இரையூட்டினார். நாட்கள் கடந்தன. கோழியும் வளர்ந்து பெரிதானது. விவசாயியின் கோழியைப் போலவே பக்கத்து வீட்டில் ஒரு கோழி இருந்தது. அந்தக் கோழி, விவசாயியின் கோழிக்கு வைக்கும் உணவையெல்லாம் திருடித் தின்று வந்தது. ஒருநாள் இதைப் பார்த்து விட்ட விவசாயியின் கோழி, சண்டை போட ஆரம்பித்தது. இரண்டும் கடுமையாக மோதிக் கொண்டன.


இதைப் பார்த்த விவசாயி, பக்கத்து வீட்டுக் கோழியை விரட்டியடித்தார். இதன்பிறகு பக்கத்து வீட்டுக் கோழி எப்போதும் கிண்டல் அடித்துக் கொண்டும், வம்பு பேசிக் கொண்டும் சண்டைக்கு இழுத்துக் கொண்டே இருந்தது. இதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாமல் அமைதியாக இருந்தது விவசாயியின் கோழி. கொஞ்ச நாட்கள் கழித்து விவசாயியின் கோழி முட்டை வைத்து குஞ்சுப் பொறித்தது. தன்னுடைய கோழிக் குஞ்சுப் பொறித்தது. தன்னுடைய கோழிக் குஞ்சுகளை கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வந்தது. இதைப் பார்த்த பக்கத்து வீட்டுக் கோழி மீண்டும் கிண்டல் செய்து, கோபமூட்டி வம்புக்கு இழுத்தது.

ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த விவசாயிகள் கோழி சண்டை போட ஓடியது. ஓடிய வேகத்தில் கால்களை தூக்கியடித்து, சண்ட போட ஆரம்பித்தது. இந்த நேரம் தனியே நின்ற குஞ்சுகளில் இரண்டு குஞ்சுகளைக் கழுகு தூக்கிச் சென்றது. கோழிக் குஞ்சுகள் கதறும் சத்தம் கேட்ட தாய்க் கோழி, சண்டையை விட்டுவிட்டு ஓடிவந்தது. ஆனால் அதற்குள் கழுகு குஞ்சுகளை உயரமாக தூக்கிச் சென்றுவிட்டது. மற்றக்குஞ்சுகளை சிறகுகளுக்குள் வைத்து காத்தது. தனது 'சின்னக் கோபத்தால் இரண்டு பிள்ளைகளை இழந்து விட்டோமே" என்று நினைத்து கண்ணீர் விட்டு அழுதது.

கவலையாக இருந்த விவசாயியின் கோழி முன்பு மீண்டும் ஏளனமாக பேசி கிண்டல் செய்தது. பக்கத்து வீட்டுக் கோழி, என்ன செய்வதென்று தெரியாமல் அமைதியாய் இருந்தது. விவசாயியின் கோழி. அடுத்த நாள் பக்கத்து வீட்டுக் கோழி கதறும் சத்தம் கேட்டு, என்ன சத்தம் என்று விவசாயியின் கோழி பார்த்தது.

அடித்து குழம்பு வைப்பதற்காக பக்கத்து வீட்டுக் கோழியை தூக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.


**- தன் வினை தன்னைச் சுடும் -**



*ஆ. பிரணவி*
*உவர்மலை*



*வீ. கமலநாயகி*
*திருகோணமலை*



*ஜெ. ஆகீஷன்*
*சாம்பல்தீவு*

## வாழத் தேவையான சில நல்ல கருத்துக்கள்

- அழகியற் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டிருக்கும் ஒருவன் நிச்சயமாக முரட்டுத்தனமாக செயற்பட மாட்டான்
- மனம் என்னும் வளமான நிலத்தில் நல்ல எண்ணங்கள் என்னும் விதையை நாட்டினால் நல்ல செயல் என்னும் கனிகளைப் பெறலாம்.
- எனக்கு என்னுடைய தேவைகள் எவ்வளவு முக்கயமோ அதே போல் மற்றவர்களின் தேவைகளும் மதிக்கப்பட வேண்டியவை.
- ஒருவர் தவறே செய்திருந்தாலும் நீ செய்வது தவறு என்று எப்போதும் கூறாதீர்கள். மாறாக எது சரி என்று அவர் புரிந்து கொள்ள உதவி செய்யுங்கள்.

*என். எம். நவீத்*
*[illegible]மையூற்று*

## சிந்திக்க .. ..

அன்பானவர்கள் கோபப்பட்டால்
அமைதியாய் இரு:
ஒருநாள் உண்மையை உணர்ந்து
வரும்போது
பேச வார்த்தைகள் தேவைப்படும்.

## வாசிப்பு ஆற்றலை வளம்படுத்தும்


அழியாத பெருஞ் செல்வம்
கல்வி
அமைதியைத் தரும் பெருமருந்து
ஆன்மீகம்!

அறிவைப் பெருக்குவது
வாசிப்பு
ஆற்றலை வளர்க்கும்
முயற்சி!

உடல் வளர்ச்சிக்குதவும்
புரதஉணவு
உயிர் வாழ்தலை சுரண்டும்
போதைவஸ்து!

அசுத்தம் தரும் வாழ்வில்
அபத்தம்
பரிசுத்தமே சுகவாழ்வுக்கு
படிக்கல்!

*- சேனையூரான் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்....

அரசியல் கட்சிகள் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதுடன் எதிர்வரும் 20ம் திகதியே மாகாண சபை கூடும் என்றும் உத்தியோகபூர்வமாகத் தெரிகின்றது.

அன்றைய தினத்தில் ஆசிரியர்களின் சம்பளம் விடுவிக்கப்பட வேண்டியிருப்பதால் அவ்வாறு நிகழ்வதற்கான சாத்தியங்கள் குறைவாக இருப்பதாகவே மாகாண அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை ஆளுனருக்குள்ள விசேட அதிகாரத்தைப் பயன்படுத்தி மீண்டெழும் செலவீனத்தின் கீழ் அரச ஊழியர்களுக்கான சம்பளங்களை வழங்கும் வாய்ப்புபுள்ளதாகவும் தெரிகின்றது.

எனினும் கிழக்கு மாகாண ஆளுனரின் பதவியும் நிலையற்றிருப்பதால் அரசியல் களத்தில் தளம்பல்கள் அரச ஊழியர்களின் சனவரி மாதச் சம்பளத்தைப் பாதிக்குமோ என்ற அச்சம் உத்தியோகத்தரிடையே நிலவுகின்றது.

## பயணக் கட்டுப்பாடு...

இந்தக்கட்டுப்பாடு அவசியம் இல்லை என்று எண்ணியே இந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை ஆயுதங்கள், இராணுவ சீருடைகள், வெடி பொருட்களை தவிர, வடக்கு கிழக்குக்கு விதிக்கப்பட்டிருந்த பொருட்களுக்கான விநியோகத் தடையையும் பாதுகாப்பு அமைச்சு நீக்கியுள்ளது.

## சர்வதேச விசாரணைக்குப்

கடந்த தினம் பிரித்தானிய பிரபுக்கள் சபையில் இலங்கை தொடர்பான குறும் விவாதம் ஒன்று இடம்பெற்றிருந்தது.

இவ்விடயம் தொடர்பில் பிரபுக்கள் சபையின் பேச்சாளர் பிரபு வேளாஸ் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். இதில், இலங்கையில் புதிதாக பதியேற்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆரம்பத்திலேயே நல்லாட்சியின் பொருட்டு மேற்கொண்டுள்ள செயற்பாடுகள் குறித்து மகிழ்ச்சி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்அடிப்படையில் சர்வதேச விசாரணைகள் தொடர்பிலும் அரசாங்கம் சிறந்த அணுகுமுறையை பின்பற்றும் என்று நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

## வாழ்வாதாரப்...

அழைத்து வந்து ஒரு சோற்று பார்சலும் 200 ரூபா பணமும் கொடுத்து கையெழுத்து வாங்கிவிட்டு உப்பளம் செய்வதற்கு மக்கள் அனைவரும் சம்மதம் தெரிவித்து விட்டார்கள் என்று காண்பித்து காணி கபளீகரிக்கப்பட்டதாக் மக்கள் தெரிவித்தனர்.

குச்சவெளி பிரதேச செயலகம் ஊடாக தற்போது சுமார் 2000 ஏக்கர் நிலப்பரப்புக் காணியானது வேலியிடப்பட்டுள்ளதாகவும் இவ் உற்பத்திக்கு முதலீட்டு சபையினால் முதலீடு செய்யப்பட்டிருப் பதாகவும் தெரியவந்துள்ளது.

மக்களின் அன்றாட வாழ்விற்குத் தேவையான நண்டு, இறால் கிடைக்கும் இடங்கள் கம்பிவேலியிடப்பட்டுள்ளதால் தமது வாழ்வாதாரம் முற்றாகப் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள மக்களின் வாழ்வாதாரத்துக்கு எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லையாம்.

மக்களின் வாழ்வாதார பிரச்சனையை தீர்த்து வைக்குமாறு பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்எவ் அமைப்பாளர் சத்தியனிடம் மக்கள் முறையிட்டதாகவும் அதற்கமைய இப்பிரச்சனையை மேன்மை தாங்கிய ஜனாதிபதிக்கும் காணி அமைச்சருக்கும் கடிதம் மூலம் தெரிவித்து நடவடிக்கை எடுப்பதற்காக மக்களிடம் கையெழுத்து எடுக்கும் நடவடிக்கையில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் மேற்படி அமைப்பினர் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

## முதல்வர் பதவி....

கூட்டணியொன்றே ஆட்சியமைக்கும் நிலை உருவாகியுள்ளது.

தற்போதைய ஆசன விபரங்களின் படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களையும், முஸ்லிம் காங்கிரஸ் 8 ஆசனங்களையும் கொண்டுள்ளது. இவ்விரு கட்சிகளும் இணைந்து ஆட்சியை அமைக்கக்கூடிய பெரும்பான்மையைக் கிழக்கில் கொண்டுள்ளதால் அவ்விரு கட்சிகளின் தலைமைகளும் கடந்த வியாழக் கிழமை ஆட்சி அமைப்பது தொடர்பான முதலாவது பேச்சுவார்த்தையை நாத்தியிருந்தன.

எனினும் இப் பேச்சுக்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

பேச்சுக்களின் போது முதலமைச்சர் பதவி தொடர்பான இழுபறி நிலை எழுந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற தேர்தல்களின் பின்னர் ஆட்சியமைப்பது தொடர்பாக முஸ்லிம் காங்கிரசுக்கு முதலமைச்சர் பதவியை விட்டுத் தரத் தயார் என சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு.சம்பந்தன் அவர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில்....

பிரதேசங்கள், வடக்குகிழக்கில் கடமையாற்றுபவர்களை அங்கேயே கடமையாற்ற விடுவதா? இல்லை வேறு இடங்களுக்கு அவர்களை மாற்றுவதா உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்த பின்னரே முகாம்களை அகற்றுவது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு தீர்மானமொன்றுக்கு வரும் என பேச்சாளர் கூறினார்.

இதேவேளை, பாதுகாப்பு தரப்பினர் வசமுள்ள ஆயிரக்கணக்கான காணிகளை பொதுமக்களிடத் கையளிப்பது தொடர்பிலும் பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## போர்க்குற்றத் தகவல்களை...

இலங்கையின் மனிதப் படுகொலைகள் தொடர்பாக ஆராயும் ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினருமான ஸ்டீவன் ரட்னர் இதனை தெரிவித்துள்ளார்.

எனினும் ராப்பின் பதவிவிலகலை அவர் உறுதிப்படுத்தவில்லை. ராப்பின் பதவி விலகல் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

எனினும் அவரின் நெருங்கியவர்களின் தகவல்படி அவர் அமரிக்க ராஜாங்க திணைக்களத்தில் இருந்து விலகிச் செல்லவுள்ளதாக பொரின் பொலிஸி மெகசின் தெரிவித்துள்ளது.

இதற்காக ராஜாங்க திணைக்களம், உத்தியோகபூர்வமாக அவரின் பதவிக்காக ஒருவரை தேடும் படலத்தை ஆரம்பித்துள்ளதாகவும் சஞ்சிகை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் இறுதிப்போரின் போது வெள்ளைக் கொடிகளை ஏந்தி சரணடைய வந்த விடுதலைப்புலிகள் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பில் இலங்கை அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டமை உட்பட்ட விடயங்களை ஆராய ராப் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டார்.

இதன்போது சில தகவல்களை இலங்கையில் உள்ள அமரிக்க தூதரகம் கொண்டிருந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் ராப் இலங்கைக்கு கடந்த வருடம் ஜனவரி 6ஆம் திகதி சென்று வந்ததன் பின்னர் குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் எவ்வித தகவல்களை தரவில்லை என்று ஸ்டீவன் ரட்னர் குற்றம்சுமத்தியுள்ளார்.

## தேசிய நிறைவேற்று.....

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

100 நாள் வேலைத்திட்டம், உறுதியளிக்கப்பட்டுள்ள அரசியல் அமைப்பு திருத்தங்கள், கடந்த அரசின் ஊழல், சட்டவிரோத நடவடிக்கைகள், மனித உரிமை மீறல்கள், நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது நடைபெற்ற முறைகேடுகள், கொழும்பு மாநகரிலும், வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுக்க நடைபெற்ற காணிக்கொள்ளைகள், தேசிய கணக்காய்வாளர் நடவடிக்கைகள் உட்பட புதிய அரசாங்கத்தின் தேசிய முன்னெடுப்பு தொடர்பாக முடிவுகளை இந்த உயர்சபை எடுக்கும்.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் இந்தத் சபை ஜனாதிபதி செயலகத்தில் கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுக்கும்.

இந்த சபையின் அங்கத்தவர்களாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வண. சோபித தேரர், சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, சம்பந்தன், மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், சரத் பொன்சேகா, அனுரகுமார திசாநாயக்க, பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய 11 பேர் பணியாற்றுவர்.

## ஆட்சி அமைப்பது....

முன்வந்துள்ளது" என்று தெரிவித்துள்ளார். இவ்வுத்தரவாதத்தின் ஊடாக ஆட்சியமைக்கத் தமக்குத் தேவையான பெரும்பான்மை ஆசனங்களான 19 ஆசனங்களையும் தாம் பெற்று விட்டதாகத் தெரிவித்துள்ள தண்டாயுதபாணி கிழக்கு மாகாண சபையில் ஆட்சிக் கட்டிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனது வலுவை இழந்து விட்டது என்றும் தெரிவித்துளார்.

முப்பத்தியாறு அங்கத்தவர்களைக் கொண்ட கிழக்கு மாகாண சபையில் பத்தொன்பது ஆசனங்கள் போதுமானவையாக இருந்தாலும் ஏனைய கட்சிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 12000 வடகிழக்கு...

இது வடக்கு கிழக்கின் யுத்த விஸ்தரிப்பின்போது மேலும் அதிகரித்தது. இது 2006 ம் ஆண்டு தொடக்கம் 2009 ம் ஆண்டுகளில் யுத்தம் தீவிரமடைந்த நாட்களில் எண்ணிக்கையில் அடங்காத அளவு பயங்கரமாக அதிகரித்தது.

யுத்தத்தின் இறுதிப்பகுதியில் 2009 ம் ஆண்டு வைகாசி மாதத்தில் அதிகமான மக்கள் படையினரிடம் சரணடைந்தார்கள்.

இன்னும் பலர் படையினரால் கட்டாயப்படுத்தி இழுத்துச் செல்லப்பட்டார்கள்.

இவர்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படாமல் உள்ளார்கள். அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் அவர்கள் நூற்றுக்கணக்கிலான விடுதலைப் புலிகளோடு இராணுவத்தினரிடம் சரணடைந்தார். இவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது இன்றுவரை தெரியவில்லை.

இது தவிர போர் பிரதேசங்களிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் செல்ல முயன்ற பலரும் அரச படையினராலும், துணைப்படையினராலும், கட்டாயமாக கடத்திச் செல்லப்பட்டவர்களும், இவற்றுள் அடங்குவர்.

காணாமல் ஆக்கப்படுவதற்கும், கடத்தலுக்கும், இலங்கை இராணுவத்திற்கு எந்த தொடர்பும் இல்லை என இலங்கை அரசு கூறுகின்றது.

இலங்கையினதும், சர்வதேசத்தினதும், மனித உரிமை நிறுவனங்கள் அழுத்தங்களை கொடுத்தாலும், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு,(யு.என்.எச்.சி.ஆர்.) கற்றுக்கொண்ட பாடங்களும், மீளிணக்கமும்,(எல்.எல்.ஆர்.சி) என்ற ஆணைக்குழுவின் சிபாரிசை அமுல்படுத்தும்படி வலியுறுத்தியும், அரச தரப்பிலோ, சட்ட ரீதியாகவோ, எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

பரிசுத்த தந்தை அவர்களே துயரப்படும் நாங்கள் இத்துயரத்திலிருந்து விடுபட்டு ஆறுதல் பெறவும் தாங்கள் பெரும் மனதுடன் உதவவும், அதற்கான அழுத்தத்தை ஸ்ரீலங்கா அரசுக்கு வழங்கவும், உலக அரங்கில் இதை முன்னிலைப்படுத்தி எமக்கு எமது உறவுகளை மீளப்பெற்றுத் தர பெருமனதுடன் உதவவும், வேண்டும் என விநயமாக கேட்டுக் கொள்கின்றோம். என அம்மகஜரில் தெரிவிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அண்ணன் எப்ப சாவான்: பதவி ஆசை

## திண்ணை எப்ப காலியாகும்

கடந்தவாரத் தொடர்ச்சி .. ..

**அபூபக்கர்(ச) அவர்கள் மக்காவைச் சேர்ந்தவர்கள்:**



இந்த இட்டுக்கட்டுக்கள் அனைத்தையும் சேர்த்துத்தான் அன்ஸாரிகள் தவறாகச் சித்தரிக்கப்படுகின்றார்கள். சகோதரரது ஸஹாபாக்களை விமர்சனம் செய்யும் அநேக விடயங்களுக்கு இந்த அபூ மிஹ்னப் என்ற ஷிஆவாசியால் இட்டுக்கட்டப்பட்ட வரலாறுகளே காரணமாக அமைந்துள்ளன. ஏற்கனவே நாம் குறிப்பிட்டது போல் அம்ரிப்னுல் ஆஸ்(வ), உஸ்மான்(வ) பற்றிய விமர்சனங்களுக்கும் இவனால் இட்டுக் கட்டப்பட்ட சம்பவங்களே அடிப்படையாக அமைந்துள்ளன.

நபித்தோழர்கள் பற்றிய நல்லெண்ணத்தைக் குறைத்து அவர்களை மோசமான மனிதர்களாகச் சித்தரிப்பது வழிகேடர்களின் வழிமுறையாக இருந்தது. மார்க்கத்தில் புதிய கொள்கைகளை நுழைக்க விரும்புபவர்கள் நபித்தோழர்களைக் காயப்படுத்தியே வந்தனர். இஸ்லாமிய உம்மத்துக்கான பாதுகாப்பு அரணாக இருக்கும் ஸஹாபாக்களை தாக்காமல் தமது தரங்கெட்ட கொள்கைகளுக்கு இஸ்லாமியச் சாயம் பூச முடியாது என்பதனாலேயே இப்படிச் செய்தனர்.

நபித்தோழர்களைப் பண்பாடு குறைந்தவர்களாகவும் தெளிவற்றவர்களாகவும் மார்க்க விளக்கமற்றவர்களாகவும் சித்தரித்துவிட்டால் நபித்தோழர் காலத்தில் இல்லாத புதுப் புதுக் கொள்கைகளை உருவாக்கிவிட்டு இது நபித்தோழர் காலத்தில் இருக்கவில்லை. ஏனென்றால், அவர்கள் மார்க்கத்தைப் பற்றிச் சரியாக ஆராயவில்லை ஆராயும் அறிவும் அவர்களிடம் இருக்கவில்லை. நாம்தான் சரியாக ஆய்வு செய்து இதைக் கண்டுபிடித்துள்ளோம் எனக் கதை விட இந்த வழிமுறை இவர்களுக்கு அவசியமாகின்றது.



நபி(ச) அவர்களால் உருவாக்கப்பட்ட சமூகத்தை விட எம்மால் உருவாக்கப்பட்ட சமூகம் கொள்கையில் உறுதிதாகவுள்ளதாக, மார்க்கத்தில் தெளிவுள்ளதாக, பட்டம் பதவிகளுக்கு ஆசைப்படாததாக, உலக இன்பங்களுக்கு மயங்கிக் கொள்கையை விட்டுக் கொடுக்காததாக இருப்பதாக இவர்கள் தம்பட்டம் அடிப்பதன் மூலம் நபி(ச) அவர்களையும் ஸஹாபாக்களையும் விட தம்மை உயர்த்திக் கொள்ளவும் முன்னிலைப்படுத்திக் கொள்ளவும் விரும்புகின்றனர் என்பதுதான் அர்த்தமாகும். முற்றும் .. ..



# கேக்

## லவ் கேக்



**தேவையான பொருட்கள்**

சீனி - 750 கிராம், முட்டை - 12, றவை - 450 கிராம், பட்டர் - 450 கிராம், பூசணி அல்வா - 450 கிராம், முந்திரிப் பருப்பு - 750 கிராம், ஏலக்காய்த் தூள் - 4 தே.கரண்டி, கறுவாய்த் தூள் - 1.:.4 தே.கரண்டி, சாதிக்காய்த் தூள் - 1.:.4 தே.கரண்டி, பேக்கிங் பவுடர் - 4 தே.கரண்டி, வனிலா எசென்ஸ் - 2 தே.கரண்டி, ஆமெண்ட் எசென்ஸ் - 1 தே.கரண்டி, றோஸ் எசென்ஸ் - 3 தே.கரண்டி

**செய்முறை**

முட்டை வெண்கரு, மஞ்சட் கருவை வெவ்வேறாக எடுத்துக் கொள்க. எட்டு முட்டைகளின் வெண்கருக்களை நுரை வரக்கூடியதாக நன்கு அடித்துக் கொள்க. முந்திரிப்பருப்பை மிகக் குறுணலாக வெட்டி எடுத்துக் கொள்ளவும். அதே போல் பூசணி அல்வாவையும் குறுணலாக வெட்டி வேறாக எடுத்துக் கொள்ளவும். றவையைத் துப்பரவு செய்து இலேசாக வறுத்துக் கொள்க. முட்டை மஞ்சட் கருவுடன் சீனியைச் சேர்த்து நன்றாக அடிக்கவும். பட்டருடன் றவையைக் கலந்து நன்றாக அடிக்கவும்.

பின்னர் நன்கு அடிக்கப்பட்ட வெண்கரு, மஞ்சட் கருக்கலவையை றவை பட்டர் கலவையுடன் சேர்க்கவும். அத்துடன் ஏலம், கறுவா, சாதிக்காய்த் தூள்களையும் வனிலா மற்றும் ஆமெண்ட் எசென்ஸ், றோஸ் எசென்ஸ், பேக்கிங் பவுடர் என்பவற்றையும் சேர்த்துக் கலந்து கொள்ளவும். கலந்த கலவையை பேக் பண்ணிக் கொள்ளவும்.

அழகு குறிப்பு

# கரு கருவென நீண்ட தலைமுடிக்கு . .



வீட்டிலிருந்தபடியே தலைமுடியை பாதுகாக்க சில டிப்ஸ். வெயிலில் அதிகமாக அலைவது, நேரம் தவறி உண்பது, உப்பு நீரில் தலை குளிப்பது போன்றவற்றாலும், கூந்தலுக்குத் தேவையான போஷாக்கு கிடைக்காமை காரணத்தாலும், தலைமுடி மிக விரைவில் பலவீனமாகிப் போய்விடுகிறது. அத்துடன் தலைக்குக் குளித்தவுடன் அல்லது தலைக்கு எண்ணெய் தேய்த்தவுடனும் தலையை வாருவதாலும் கூந்தல் மிக விரைவாக வலுவிழந்து உதிரத்தொடங்குகின்றது. மாதம் இரண்டு அல்லது மூன்று முறையாவது எண்ணெயால் மசாஜ் செய்வது மிக நல்லது. மேலும் தினமும் ஒரு கோப்பை கறிவேப்பிலை சாறு எடுத்து குடித்தால் மிகவும் நல்லது. அல்லது கறிவேப்பிலையை காய வைத்து பொடி செய்து உணவில் கலந்தும் சாப்பிடலாம். இவற்றை விட மேலும் சில டிப்ஸ்

- நெல்லிக்காயை பாலில் அரைத்து பிழிந்து சாறு எடுத்து கொதிக்க வைத்து தேங்காய் எண்ணெயில் கலந்து கூந்தலுக்கு தடவி வந்தால் தலைமுடி நன்றாக வளரும்.
- மருதானியையும், கறிவேப்பிலை-யையும் அரைத்து சாறெடுத்து சம அளவு தேங்காயெண்ணெயில் கலந்து காய்ச்சி தடவி வர முடி கருமையாகவும், பளபளப்புடனும், மிருதுவாகவும் காணப்படும்.
- தலையில் நல்லெண்ணெய் தேய்த்து ஊற விட்டு அரை மணி நேரம் கழித்து, சாதம் வடித்த கஞ்சியில் சிறிது சிகக்காய்த் தூள் போட்டுக் கலக்கி அதைத் தலைக்குத் தேய்த்துக் குளித்து வர தலைமுடி உதிர்வது நின்று நன்கு வளரும்.

# மருத்துவம்

## நோய்களிடமிருந்து பாதுகாக்க



பொதுவாக சளி, காய்ச்சல் போன்றவை நம்மை தாக்கினால் உடனே நாம் மருத்துவர்களை நாடுகிறோம். சில நேரங்களில் தலைசுற்றல் அல்லது வயிற்றுவலி போன்ற சில உடல் உபாதைகளுக்கு கூட மாத்திரை சாப்பிடுகிறோம்.

ஆனால் இது எல்லா நேரங்களிலும் ஆரோக்கியமானது என்று உறுதியாக கூறமுடியாது. ஏனெனில் இரசாயன தன்மை மிகுந்த மாத்திரைகள் சில நேரங்களில் பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தும். எனவே வீட்டிலிருந்தபடியே சில மருத்துவ குறிப்புகளை நாம் தெரிந்து கொண்டு கையாள்வது நம் உடல் நலத்திற்கு மிகவும் நல்லது.

**எளிமையான சில மருத்துவ குறிப்புகள்**



- நெல்லி வற்றல், சந்தனத்தூள், கொத்தமல்லி மூன்றையும் தண்ணீரில் ஊற வைத்தபின் வடிகட்டி அந்த நீரை அருந்தி வந்தால் தலை சுற்றல், கிறுகிறுப்பு முதலியன குறையும்.
- வெல்லத்தை கெட்டியாகப் பாகு வைத்து அதில் மிளகை ஒன்றிரண்டாகப் பொடித்துப் போட்டு உருட்டி வைத்தால் இருமல் வரும்போது வாயில் அடக்கிக் கொள்ள இருமல் நிற்கும்.
- மண் சட்டியில் உப்பை வறுத்துத் துணியில் கட்டி உப்பு ஒத்தடம் இரண்டு மூன்று வேளை கொடுத்தால் கழுத்து வலி நீங்கிவிடும்.
- நூல்கோலைத் துருவி ஊறவைத்து பயத்தம் பருப்பு கலந்து உப்பு பிசறி எலுமிச்சைச்சாறு பிழிந்து சாப்பிட்டால் சர்க்கரை நோய்க்கு அருமருந்தாகும்.
- வயிற்றில் பிரச்னை ஏற்பட்டால் கொஞ்சம் சீரகத்தை எடுத்து கொதிநீரில் போட்டு க'ாயமாக இரண்டு வேளை குடித்து வர நிவாரணம் கிடைக்கும்.
- மாதுளைச் சாறு தினமும் குடித்து வந்தால் ரத்த அழுத்தம், கொழுப்பு, நச்சுத்தன்மை என பல பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும்.
- திராட்சையை பன்னீரில் ஊறவைத்துச் சாப்பிட்டால் இதயம் பலம் பெறும். மேலும் தொடர்ந்து திராட்சை உண்பவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி நிச்சயம்.



- சின்ன வெங்காயத்தை சிறிது எண்ணெய்விட்டு வதக்கவும். வெறும் வயிற்றில் தினமும் ஐந்தாறு என்ற கணக்கில் இரண்டு வாரங்கள் சாப்பிட்டு வர நரம்புத் தளர்ச்சி குணமாகும். உடலும் குளிர்ச்சியடையும்.
- பொடி செய்த ஓமத்தை பாலில் கலந்து வடிகட்டி படுக்கும் முன் குழந்தைகளுக்குக் கொடுத்தால் சளியை தூர விரட்டும்.
- தேங்காய் எண்ணெயைத் கொஞ்சம் சூடாக செய்து, தலையில் தடவிவந்தால் வெயிலால் வரும் உடல் சூடு குறைவதுடன் வெப்ப நோய்களும் தாக்காமல் இருக்கும்.



# இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : எதிர்ப்பு விலகி, முன்னேற்றப் பாதை எதுவென புலப்படும். உடன் பிறந்தவர்களின் உதவி உண்டு.

**ரிஷபம்** : கூடுதல் உழைப்பினால் தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய முடியும். பணியாளர்கள், அதிக பொறுப்பு உணர்வுடன் பணிபுரிய வேண்டும்.

**மிதுனம்** : பண வரவு திருப்திகரமான அளவில் கிடைக்கும். வீடு, புதிய வாகனம் வாங்க சிலருக்கு யோகம் உண்டு.

**கடகம்** : உடன் பிறந்தவர்களின் வாழ்க்கை முன்னேற்றம் பெற உதவுவீர்கள். நண்பருடன் வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**சிம்மம்** : அளவான உழைப்பு, சீரான ஓய்வு, உடல் நல ஆரோக்கியத்தை பாதுகாக்கும். வெளியூர் பயணத்தில் கூடுதல் பாதுகாப்பை பின்பற்ற வேண்டும்.

**கன்னி** : நம்பகத்தன்மை இல்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர் விரும்பிய பொருளை, தாராள பணச் செலவில் வாங்கித் தருவீர்கள்.

**துலாம்** : நிம்மதி நிறைந்த வாழ்க்கை முறை உருவாகும். சமூகப் பணியிலும் ஈடுபாடு கொள்வீர்கள்.

**விருச்சிகம்** : நீண்ட தூர வாகன பயணம், பயன் அறிந்து மேற்கொள்ளவும். புத்திரரின் சந்தேகத்தை நிவர்த்தி செய்வதில் முக்கிய கவனம் கொள்வீர்கள்.

**தனுசு** : ஆன்மிக நம்பிக்கை உள்ளவர்களின் அறிமுகம், உதவி கிடைக்கும். குடும்ப உறுப்பினர், ஒற்றுமை எண்ணங்களுடன் செயல்படுவர். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், திருப்திகர பணவரவும் கிடைக்கும்.

**மகரம்** : முக்கியஸ்தரின் அன்பு, உதவி கிடைக்கும். தெய்வ வழிபாடுகளில் ஆர்வம் கொள்வீர்கள். குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும்.

**கும்பம்** : அரசு சார்ந்த அனுகூலம் பெற வாய்ப்பு உண்டு. உறவினர் குடும்ப விவகாரங்களில் சமரசம் பேச வருகிற அழைப்பை தவிர்க்கவும். பூர்வ சொத்தில் இருந்த இடையூறு விலகும்.

**மீனம்** : நிலுவைப் பணம் வசூலாகும். இல்லறத் துணை, உங்களின் நல்ல குணம் பாராட்டுவார். புதியவர்களின் வரவேற்பு கிடைத்து தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## உள்ளூர் விளையாட்டு செய்திகள்

### மென்பந்து போட்டித் தொடர்

தமிழ்மிரர் இணையத்தளத்தின் ஊடக அனுசரணையில், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் நடத்தும் தைப்பொங்கல் மென்பந்தாட்ட துடுப்பாட்டம் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை(10.01.2015) ஆரம்பமாகி நடைபெற்றது. அணிக்கு 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட இந்தச் சுற்றுப்போட்டியில் 50 இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குபற்றின.




### சாரணர் பயிற்சிப் பாசறை



முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளின் சாரணர்களுக்கான இருநாள் பயிற்சிப் பாசறையின் இறுதிநாள் நிகழ்வு, ஞாயிற்றுக்கிழமை (11.01.2015) முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் இடம்பெற்றது. முல்லைத்தீவு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தின் (வை.எம்.சி) நிதிப்பங்களிப்புடன் யாழ். பரியோவன் கல்லூரியின் அனுசரணையில் சாரணர்களுக்கான பயிற்சி பாசறை, வெள்ளிக்கிழமை (09.01.2015) ஆரம்பமானது.

### பழைய மாணவர் அணி வெற்றி

சாவகச்சேரி றிபேக் தாரகை மற்றும் ஹாட்லி கல்லூரி பழைய மாணவர் அணி என்பன மோதிக்கொண்ட சிநேகபூர்வ 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் ஹாட்லி பழைய மாணவர் அணி 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. இந்த போட்டி ஞாயிற்றுக்கிழமை (11.01.2015) ஹாட்லி கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய றிபேக் தாரகை அணி, 46.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹாட்லி அணி, 44.5 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.




### பழைய மாணவர் அணி வெற்றி



சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் ஆட்டமொன்றில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது. இந்தச் சுற்றுப்போட்டியில் 50 கால்பந்தாட்ட அணிகள் பங்குபற்றி வருவதுடன், அனைத்து போட்டிகளும் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. சனிக்கிழமை (10.01.2015) நடைபெற்ற போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணியும் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதின. இறுதியில் கலைமதி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

### மரதன் ஓட்டப் போட்டி

தைத்திருநாளை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேசத்துக்குட்பட்ட பெரியகல்லாறு கல்லாறு விளையாட்டுக்கழகம் ஏற்பாடுசெய்த மாபெரும் மரதன் ஓட்டப்போட்டி வியாழக்கிழமை (15.01.2015) காலை நடைபெற்றது. கல்லாறு விளையாட்டுக்கழகத்தின் தலைவர் கே.சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மா.நடராஜா பிரதம அதிதியாக கலந்துகொண்டார். சிறப்பு அதிதியாக பட்டிருப்பு கல்வி வலயத்தின் உதவி உடற்கல்வி பணிப்பாளர் நாகராஜா கலந்துகொண்டு மரதன் ஓட்ட நிகழ்வினை ஆரம்பித்துவைத்தார்.



## முதல் வெற்றி

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, முன்னதாக நியூசிலாந்துடன் இரண்டு டெஸ்ட் போட்டிகள் மற்றும் ஏழு ஒருநாள் போட்டிகளில் விளையாடுகின்றது. முன்னதாக இடம்பெற்ற இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் நியூசிலாந்து வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது. இதனையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி கடந்த 11 ஆம் திகதி கிறிஸ்ட்சேர்ச் நகரில் நடைபெற்றதோடு இதில் நியூசிலாந்து 3 விக்கெட்டுகளால் முதல் வெற்றியை பதிவு செய்தது.

இந்நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 50 ஓவர் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 248 ஓட்டங்கள் குவித்தது. பொறுமையான ஆட்டத்தை விளையாடிய டில்ஷான் சதம் அடித்தார்.

பின் இவர் ஹென்றி பந்து வீச்சில் ஆட்டமிழக்க, அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் மெத்யூஸின் (39 ஓட்டங்கள்) பொறுமையான ஆட்டத்தால் இலங்கை அணி 47.4 ஓவர்களிலே இலக்கை எட்டி வெற்றியீட்டியது.

## முத்தரப்பு ஒரு நாள் போட்டி

இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து நாட்டு அணிகள் பங்குகொள்ளும் முத்தரப்பு ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் தொடர் 16ஆம் திகதி ஆரம்பமாகியது. முதலாவது போட்டியில் இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகள் ஒன்றையொன்று எதிர்கொள்கின்றன.

லீக் சுற்றில் மூன்று அணிகளும் தமக்கிடையே இவ்விரண்டு போட்டி களில் விளையாடு கின்றன. அதனைத் தொடர்ந்து, புள்ளி களில் முதலிடம் பெறும் இரு அணிகள் பெப்ரவரி முதலாம் திகதி பேர்த் மைதானத்தில் நடக்கும் இறுதிப் போட்டியில் மோதவுள்ளன.



## முதல் தடவையாக பாலஸ்தீனம் தெரிவு



பாலஸ்தீன கால்பந்தாட்ட அணியினர் முதற்தடவையாக சர்வதேச போட்டியொன்றில் விளையாடியுள்ளனர். ஆஸ்திரேலியாவில் நடந்த ஆசியக் கோப்பை இறுதிப் போட்டிகளில் 4க்கு பூஜ்ஜியம் என்ற கணக்கில் ஜப்பானிடம் பாலஸ்தீன அணி தோல்வியடைந்துள்ளது.

எனினும் சர்வதேச போட்டியொன்றில் பங்கெடுத்தமை அடையாள ரீதியான முக்கிய நடவடிக்கையாக பார்க்கப்படுகின்றது. தாங்களும் மனிதர்களே, பயங்கரவாதிகள் அல்ல என்ற செய்தியை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டிய தேவையே தமது வீரர்களுக்கு இருந்ததாக தாமர் சாலா கூறினார். ஆசியாவில் உள்ள 16 சிறந்த கால்பந்தாட்ட அணிகள் இந்த போட்டித் தொடரில் பங்கெடுத்திருந்தன. கடந்த ஆண்டு மேமாதம் மாலத்தீவுகளில் ஏஎ∴ப்சி சேலஞ் கோப்பையை வென்றதன் மூலம் பாலஸ்தீன அணி இந்தத் தொடருக்கு தகுதி பெற்றது.

## 1000 மாவதில் வெற்றி

உலகின் முன்னணி டென்னிஸ் வீரர்களில் ஒருவரான ரோஜர் ∴பெடரர், தனது டென்னிஸ் வாழ்க்கையில் ஆயிரமாவது ஆட்டத்தில் வென்றுள்ளார்.

தனது டென்னிஸ் வாழ்க்கையில் 17 கிராண்ட் ஸ்லாம் பட்டம் உட்பட ரோஜர் ∴பெடரர் இதுவரை 83 பட்டங்களை வென்றுள்ளார்.




## சீருடை மாற்றம்

சர்வதேச கிரிக்கெட் சபையின் அதிகாரபூர்வ ஆடை வடிவமைப்பாளர்களான நைக், இந்திய அணிக்கான சர்வதேச ஒருநாள் போட்டிக்கான சீருடைகளை வெளியிட்டுள்ளனர். 15.01.2015 அவுஸ்திரேலியாவில் தொடங்கிய முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கான சீருடை வெளியிடப்பட்டது. நாளை ஞாயிற்றுக்கிழமை நடக்கும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் இந்த ஆடையை இந்திய அணியினர் அணிந்து விளையாடுவார்கள்.

புதிய சீருடை இலகுவரக உறுதிப்பாட்டுடன் கூடிய உயர் செயல் திறன் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்திய அணியின் புதிய சீருடை லேசானது. மிகவும் வசதியாக உள்ளது மற்றும் இந்த சீருடை மைதானத்தில் வீரர்களின் கவன சிதறல்களை குறைக்க உதவும் என இந்திய அணியின் கப்டன் தோனி தெரிவித்துள்ளார்.

## இரண்டாவது முறையும் விருது




உலகின் மிகச் சிறந்த உதைப்பந்தாட்ட வீரருக்கான பலோன் டிஓவிருதை போர்த்துக்கல் அணியின் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ வென்றார். வீரர்களின் திறமை அடிப்படையில் 209 சர்வதேச அணிகளின் அணித்தலைவர், பயிற்சியாளர்கள் மற்றும் உலகம் முழுவதிலும் இருக்கும் பத்திரிகையாளர்கள் அளிக்கும் வாக்கு பதிவு அடிப்படையில், சிறந்த வீரர் தெரிவு செய்யப்படுவார்.

மொத்த வாக்கில் 37.66% வாக்குகளை பெற்று முதலிடம் பெற்ற ரொனால்டோ, 2014 ஆம் ஆண்டின் சிறந்த வீரருக்கான தங்கப்பந்து விருதை தொடர்ந்து இரண்டாவது முறையாக தட்டிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணைக்குப் பொருத்தமான அணுகுமுறை?



இலங்கையின் புதிய அரசாங்கம் ஐக்கிய நாடுகளிலால் மேற்கொள்ளப்படும் இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணைகள் தொடர்பில் பொருத்தமான அணுகுமுறையை மேற்கொள்ளும் என்று எதிர்ப்பார்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் பிரபுக்கள் சபை இந்த எதிர்ப்பார்ப்பை வெளியிட்டுள்ளது. 17

## கிழக்கின் பாதுகாப்பு நிலை அறிக்கை

வடக்கு, கிழக்கிலுள்ள இராணுவ முகாம்கள் மற்றும் பிரதேசங்களின் பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பான சகல விடயங்களும் உள்ளடங்கிய அறிக்கையொன்றை பாதுகாப்பு அமைச்சு கோரியுள்ளது என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

மேற்படி பிரதேசங்களின் நிகழ்கால மற்றும் எதிர்கால பாதுகாப்பு நிலைமை, பாதுகாப்புப் படையினர் நிலை கொண்டிருக்க வேண்டிய பிரதேசங்கள் எவை?, பாதுகாப்பு படையினர் அகற்றப்பட வேண்டிய 17

# வாழ்வாதாரப் போரில் மக்கள்

## றைகம் நிறுவன உப்பு உற்பத்தியால் வாழ்வாதாரத்தை இழந்த மக்கள்



2009ம் ஆண்டு றைகம் என்னும் நிறுவனம் பெரிய கராச்சி குச்சவெளி பிரதேசத்துக்கு உட்பட்ட கும்புறுபிட்டி என்னும் இடத்தில் உப்பு உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு பெற்றுக்கொண்ட காணிகளில் வாழ்வாதாரத்தை இழந்த மக்களின் போராட்டம் தொடர்கின்றது.

உப்பு உற்பத்திக்கா சுமார் 1800 ஏக்கர் காணியை எடுப்பதற்கு அங்கு வாழும் மீன்பிடி தொழிலை செய்யும் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மக்களை ஏமாற்றி அவர்களிடம் இருந்து கையெழுத்து வாங்குவதற்காக அரசாங்கத்தின் கூட்டம் நடப்பதாக சொல்லி மக்களை அவ்விடத்துக்கு 17

## 12000 வடகிழக்குத் தமிழர்கள் காணாமற் போயுள்ளனர்

### -திருத்தந்தைக்கு கடிதம் -

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணை செய்வதற்கு சர்வதேச தரத்திலான, சட்ட ரீதியான, ஒரு பொறி முறையை உருவாக்குவதற்கு இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க கோரி வட கிழக்கு மாகாண காணாமற் போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கம் திருத்தந்தை பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களுக்கு மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

பரிசுத்த பாப்பரசர் இலங்கைக்கு வருகை தந்த நிலையில் கடந்த புதன்கிழமை (14-01-2015) மாலை மன்னார் மடு திருத்தலத்தை வந்தடைந்தார்.

காணாமல் போனவர்களின் உறவினர்கள், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் என பலதரப்பட்டவர்களும் மடுத் திருத்தலத்திற்கு வருகை தந்திருந்த போது வட கிழக்கு மாகாண காணாமற் போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கம் திருத்தந்தை பாப்பரசர் இம்மகஜரைக் கையளித்துள்ளனர்.

தடுப்பு முகாம்களிலிருந்தும் இலங்கை இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த (12,000) பன்னிரெண்டாயிரம் பேர் காணாமல் ஆக்கப் பட்டுள்ளார்கள். 17

## போர்குற்றத்தகவல்களை மறைத்த அமெரிக்கர் பதவி விலகவுள்ளார்....!



இலங்கையின் இறுதிப் போரின்போது வெள்ளைக் கொடியை தாங்கி வந்த விடுதலைப் புலிகளை படையினர் சுட்டுக்கொன்றதாக கூறப்படும் சம்பவம் உட்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தகவல்களை வழங்காத குற்றச்சாட்டு அமெரிக்காவின் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அமரிக்காவின் போர்க்குற்றம் தொடர்பான தூதுவர் ஸ்டீபன் ஜே ராப் பதவிவிலகவுள்ளார்.

பொரின் பொலிஸி மெகசின்(foreign policy magazine) என்ற சஞ்சிகைக்கு செவ்வியளித்துள்ள மிச்சிகன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும்

### பாப்பரசரின் வருகையில் அங்கீகரிக்கப்பட்ட இந்து மதக்குருக்கள் தவிர்ப்பு

இலங்கைக்கு வருகை தந்திருந்த பாப்பரசரைச் சந்திப்பதற்காக அழைக்கப்பட்ட இந்து மதக்குருக்களில் அங்கீகரிக்கபட்பட இந்து மதத் தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்று தெரிய வந்துள்ளது.

திருகோணமலையில் மூதூர் பிரதேசத்திலேயே இவ்வாறு அங்கீகரிக்கபட்ட் இந்து மதத் தலைவர்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளனர்.

பல வருடங்களாக இயங்கிவரும் மூதூர் இந்துக் குருமார் சங்கத்தினருக்கு அழைப்பு அனுப்பப்படாமல் எழுந்தமானமாகச் சிலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு விரைவில் விடுதலை

விசாரணைக் கைதிகளாக நீண்டகாலமாக இருக்கும் அனைவரது விடுதலை பற்றியும் ஜனாதிபதி செயலாளர் மற்றும் உயரதி-காரிகளிடம் எடுத்துரைப்பதோடு அவர்களது விடுதலையை மிகவிரைவுபடுத்த நடவடிக்கை எடுப்பதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்திரானந்த பல்லேகம, கூறினார்.

தைப்பொங்கல் நிகழ்வு, கொழும்பு வெலிக்கடை மற்றும் புதிய மகசின் விளக்கமறியல் சிறைச்சாலைகளில் வியாழக்கிழமை (15) நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டபோதே சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்திரானந்த பல்லேகம, மேற்கண்டவாறு கூறினார்.

அவர், தமிழ் அரசியல் கைதிகளின் முன்னால் தொடர்ந்து உரையாற்றுகையில், ‘உங்களின் ஏக்கம் எனக்கு நன்கு தெரியும். உங்கள் கண்களே அதற்கு சாட்சியாக இருக்கின்றன. நான் இந்தப் பதவியை ஏற்று இரண்டு வருடங்கள் ஆகின்றன.

இதுவரை காலமும் உங்கள் ஏக்கங்களை சரியாக தீர்த்து வைக்க முடியவில்லை. காலமும் அதற்கு இடம்கொடுக்கவில்லை. ஆனால், இப்போது காலம் கனிந்திருக்கிறது. தை பிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள். அந்த வழி நிச்சயம் உங்களுக்குப் பிறக்கும்.

புதிய மாற்றத்துக்காக அனைவரும் ஒத்துழைத்திருக்கிறார்கள். குறிப்பாக ஜனாதிபதியின் வெற்றியில் தமிழ் மக்களின் பங்கு அதிகமாகவிருக்கிறது. இதன்மூலம் அவர்கள் நல்லதொரு செய்தியையும் ஜனாதிபதிக்கு கூறியிருக்கிறார்கள். எமது உறவுகளை எங்களுடன் வாழ வழிசெய்யுங்கள் என்பதே அந்த செய்தி.

ஆகையினால், எதிர்காலத்தில் நிச்சயமாக நல்லது நடக்கும் என்பதை இன்றைய தைத்திருநாள் பரிசாக உங்களுக்கு நான் வழங்குகிறேன்' எனத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 17.01.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது